# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,

முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

## ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

| புஸ்தகம் I. Vol I. | சௌம்யஹூ மார்கழிமாதம் December 1909 | சஞ்சிகை 4 No. 4 |
|---|---|---|


## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினனே."

**கைக்குவாரும் ராஜப்பிரதிநிதியும்.**

இப்பொழுது நமது ராஜப்பிரதிநிதி யவர்கள் இந்தியாவெங்கும் விஜடஞ் செய்துவருவதில் அவர்களுக்கு உதயபுரத்தில் மஹாராணா அவர்கள் விருந்துசெய்யுஞ் சந்தர்ப்பத்தில் பேசியதைச் சென்ற மாசங் குறிப்பிட்டோம். நாளது மாசத்தில் பரோடா சமஸ்தானத்தில் அவருக்கு விருந்து நடந்து அதை யனுசரித்து மகாராஜா கைக்குவார் அவர்கள் பேசியதை அபிமானிகளுக்குச் சுருக்கி உரைக்கிறோம். தமது ராஜாங்கத்தில் குடிகள் க்ஷேமார்த்தமாகத் தான் மூன்று அம்சங்களில் விசேஷ சிரத்தை வைத்திருப்பதாகவும், அவற்றை யனுசரித்தே இந்தியா கவர்ன்மெண்டாரும் சமீபகாலத்தில் விமர்சனம் செய்துவருவதால், அதைத் தனக்கும் பூஷணமாகக் கொள்ளுவதாகவும் மகாராஜா அவர்கள் சொன்னார்கள். அவையாவன. கிராம பரிபாலனங்களைப் பொறுத்தமட்டில், கிராம வாசிகளைக்கொண்டே பஞ்சாயத்து மூலியமாய்த் துரைத்தனம் முக்கால் வரிசையும் நடத்துவதும், பிரைமரி பள்ளிக்கூடங்களில் வித்தியார்த்திகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கவேண்டிய நியமனஞ் செய்திருப்பதும், தவிர லௌகிக வித்தையோடு தருமோபதேசமும் செய்ய ஏற்பாடு செய்திருப்பதும், துரைத்தன நிர்வாக அம்சத்திற்கும் நியாய பரிபாலன அம்சத்திற்கும் அதிகார சம்பந்தமில்லாமற் செய்திருப்பதுமே. இம்மூன்றும் இப்பொழுதுதான் இந்தியா கவர்ன்மெண்டார் கைக்கொண்டு தக்க ஏற்பாடுகள் செய்துவருவதால், மகாராஜா இவர்களுக்கு வழிகாட்டியதற்காகப் பிரதிநிதியவர்கள் அவருக்கு வாழி கூறியது நமக்கு வெகு சந்தோஷகரம்.

**காகிதம் செய்தல்.**

இந்நாளில் ஒவ்வொரு தேசத்திலும் காகிதம் எவ்வளவு செலவாகிறதென்று கணக்குப் பார்த்தால் பிரமிக்கவேண்டியிருக்கும். இந்தியாவிலும்

கல்வி அதிகரிக்குமளவிற்குக் காகிதம் வகைரா அதிகமாகத்தான் செலவழியும். எழுதுவதற்கு வேண்டிய சாதனங்களில் பேனு, பென்சில், மை முதலியன சிறிது சிறிதாக இவ்விடத்திலேயே செய்யப் பிரயத்தனம் நடந்துவருகிறது. என்ருலும், காகிதவிஷயத்தில் மட்டும் வங்காளத்தில் "பாலிமில்ஸ்" "டிடாகர் மில்ஸ்," "பங்கால்பேபர் மில்ஸ்," என்று நடந்துவரும் பிரயத்தனமும், புனுவில் நடந்துவரும் டக்கான் மில்ஸ் பிரயத்தனமும், திருவாங்கூரில் இரண்டொரு முறை வியர்த்தமான பிரயத்தனமும் தான் நமக்குத் தெரிந்தவரை இத்தேசத்தில் காணுவது. ஆதலால், திருவாங்கூரில் சமீபத்தில் சர்க்காருடைய உதவியைக்கொண்டு "லக்ஷ்மிமில்ஸ்" என்பது மறுபடியும் உயிர்ப்பிக்கப் பட்டதாகவும் அதில் வேலை நடந்து வருவதாகவும் கேட்டுச் சந்தோஷிக்கிருேம். அவ்வாறே இம்பீரியல் பாரஸ்டு காலேஜிலும் இவ்விஷயத்தில் பரீக்ஷை நடத்துவதற்காக யோசனை யிருப்பது தெரியவருகிறது. இது மெத்தவும் சிலாகிக்கத்தக்கது. ஐரோப்பாவில் கடுதாசி செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் குறைந்து வருவதாகச் சமாசாரம். இந்தியாவிலோ அச்சாதனங்கள் எத்தனையோ இருக்கின்றன வென்பதுதான் நமக்கு நம்பிக்கை. நமது புற்பூண்டுகளில் மூங்கில் முதலிய அனேக வகைகள் காகிதம் செய்வதற்கு வெகு நன்ருய் உபயோகப்படுமாதலால் இவ்விஷயத்தில் பரீக்ஷை நடப்பது வெகு புண்ணியகரமென்றும், அதனுல் நமக்குக் காரியம் சீக்கிரத்தில் சித்திக்குமென்றும் நம்புகிருேம். பரீக்ஷைகள் திருப்திகரமாகும் பக்ஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் நெசவு முதலிய தொழில்கள் அபிவிருத்தியாவதற்குச் செய்வதுபோல, இவ்விஷயத்திலும் உதவிபுரிந்து அதை முன்னுக்குக்கொண்டு வருவார்களென்று எதிர்பார்த்திருக்கிருேம்.

**இந்தியத் தென் ஆப்பிரிக்காச் சங்கம், மதிராஸ்.**

தென் ஆப்பிரிக்காவில், வியாபாரமுதலிய விஷயமாய்க் குடியேறியிருக்கும் இந்திய ஜனங்களுக்கு இப்போது நடப்பது வெகு துர்த்தசையென்று நம்மில் அனேகமாய் எல்லோருக்கும் தெரியும். இவர்கள் முதல் முதல் ஆப்பிரிக்காவுக்குத் தாங்களே வேண்டுமென்று போனவர்களல்லர். ஐரோப்பியர்கள் அப்பிரதேசத்திற் குடியேறின காலத்தில் தங்களுக்குநடக்கவேண்டியிருந்த விவசாயமுதலிய பலவேலைகளுக்கும் கூலிக்காரர் வேண்டியிருந்ததினுலும், நம்மவரைப் போல் நாணயமாயும், நயந்தும் வேலைசெய்து கூலிவாங்குபவர்கள் சமீபத்தில் வேறு எத்தேசத்திலும்இல்லையாதலாலும்,அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொண்டார்கள். அவ்வேண்டுகோளுக் கிசைந்து இந்தியாகவர்ன்மெண்டார் இவ்விருதிறத்தாரையும் சில நிபந்தனைகளுச்குட்படுத்தி இவ்விடத்திய ஜனங்களை ஆப்பிரிக்காவிற் போய்க் குடியேறும்படி உற்சாக மூட்டியதில் அனேகர் அவ்விடத்திலே போய்ப்பிழைக்கலானுர்கள். பிறகு காலக்கிரமத்தில், கூலிக்காரர்மட்டுமே யில்லாமல் பெருத்த முதலாளிகளும் வேறு பலவகையில் அந்தஸ்துயர்ந்தவர்களும், அவ்விடம் போய்ச் சேர இந்தியர்களுடைய தொகை பெருகிற்று. இவர்களுடைய வேலைத்திறத்தையும் நாணயத்தையும் பார்த்து இவர்களுடன் போட்டிகொண்டு வேலைசெய்து முன்னுக்கு வருவது சாத்தியமல்லவென்று அவ்விடமுள்ள ஐரோப்பியக் கூலிக்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும் காணவே, நேடால் முதலிய மாகாணங்களில் ஒவ்வொரு துரைத்தனத்தாரும் இந்தியர்களுக்கு விரோதஞ்செய்யலானுர்கள். இவர்களில் டிரான்ஸ்வால், ஆரஞ்சு பிரதேசம் ஆகிய இரண்டு நாடுகளிலுமுள்ள போவர் ஜனங்களும் அவர்களுடைய ராஜாங்கத்தாரும் நம்மவர்களை அதிகமாக உபத்திரவித்தார்களென்று அவர்களுடன் இங்கிலீஷ்காரர்போர்

புரிந்து அந்நாடுகளைத் தங்கள் ஆதீனமாக்கிக் கொண்டார்கள். நம்மவர்கள் இனிமேல் தங்களுக்குத் தசைமாறிவிட்டதென்று எண்ணியிருக்க, இப்பொழுது மூன்று வருஷகாலமாக மேற் சொல்லிய இரண்டு நாடுகளில்மட்டுமேயல்லாமல், தென் ஆப்பிரிக்காவில் எல்லாவிடங்களிலும் இந்தியர் விஷயத்தில் ஐரோப்பியருக்கு ஓர் ஐக்கிய மத்தியம்உண்டாகியிருக்கிறது. அதனுல் இவர்கள் சங்கியை அதிகரிக்கவொட்டாமலும், ஆஸ்திமுதலியன சேர்த்துக் கொழுக்கவொட்டாமலும், ஒரேஅத்தில் வைத்திருக்க வேண்டுமென்று அதற்குரிய சட்டங்கள் பிறந்திருக்கின்றன. இச்சட்டங்களை ஜாரிக்குக் கொண்டுவரவொட்டாம லிருப்பதற்கு நம்மவர்கள் பிரிட்டிஷ் துரைத்தனத்தாரிடத்தில் எவ்வளவு தூரம் மன்றாடியும், கடைசியில் அவர்கள் தங்களால் ஆகாதென்று சொல்லிவிட்டார்கள். ஆதலால் நயத்திலோ,பயத்திலோ நம்மவர்களாலேயேதான் இவர்களுக்கு மறுபடி சௌக்கியங்கிடைக்கவேண்டியிருப்பதால் அதற்கு இந்தியாவில் பிரயத்தனம் பலமாக நடக்கவேண்டிய அவசரம் வந்திருக்கிறது. தெய்வாதீனம் இவ்விஷயத்தில் நமக்கு இந்தியா கவர்ன்மெண்டாரின் சகாயமிருப்பதுடன் இங்கிலாந்தில் அனேக நண்பர்களும், நமக்காகப் பாடுபட்டு வருகிறுர்கள். இவர்களில் வெகு முக்கியமானவர் முன் நமது கவர்னராக விறங்கிப்பிறகு சிறிதுகாலம் கவர்னர் ஜெனரலாகியுமிருந்த ஆம்தில் பட்டவர்த்தனராம். சென்ற இரண்டு வருஷகாலமாக இவர் இக்காரியத்தில் சிரத்தைகொண்டு பிரிட்டிஷ துரைத்தனத்தாரைக் கேள்விகள் கேட்டும், பேசியும் எழுதியும் வந்திருப்பதற்காக நாம் அவருக்கு எத்தனையோ நன்றியுள்ளவராயிருக்கவேண்டும்.

இதுகாரணங்கொண்டு மதிராஸிலும், சென்றமாசத்தில் நாம் மகுடத்தி லெடுத்திருக்கும் பெயர்பூண்ட சங்கம் ஒன்று ஏற்பட்டு, அதற்கு நாயகராக மதிராஸ் சர்க்கார்பிஷப் வோயிட்ஹேட்பட்டவர்த்தனர் ஒப்புக்கொண்டதற்காக இரட்டைச் சந்தோஷப்படுகிறோம். இச்சங்கத்தில் நம்மில் அனேக பிரபல புருஷர்கள் ,சேர்ந்திருப்பதாலும், இம்மாதிரியான சங்கங்கள் இந்தியா வெங்கும் ஏற்பட்டு இவ்விஷயத்தில் நமது ஜனங்களுக்கு ஆக்கிரகம் அதிகரித்து வருவதாலும், ஐரோப்பிய அனுகூலமு மிருப்பதாலும், ஈசுவரசகாயமுமிருக்கு மென்றும், நமது அபீஷ்டம் சீக்கிரம் நிறைவேறு மென்றும் நம்புகிறோம்.

பாசன வகைகள்.

இந்தியாவிலுள்ள ஜனங்களுக்குக் கிருஷியே முக்கிய ஜீவனோபாய மென்றும், அக்கிருஷியும் அனேகமாய் "வானம்பார்த்த" தென்றும் நெடுநாளைய அனுபவமாதலால், பிரிட்டிஷ் இந்தியத் துரைத்தனத்தார் 1858-ம் வருஷத்திய மஹா சாஸனத்தில், குளம், கிணறு முதலியன வெட்டுவதையும் ஏரிகள் கட்டுவதையும் வாய்க்கால்கள் வகுப்பதையும் பெரிய தருமமாகக் கொண்டார்கள். ஆனல், முந்தி இப்பாரத வருஷத்தில் ஏற்பட்டிருந்த ஹிந்து மகம்மதிய துரைத்தனத்தார்களுடைய கொள்கைக்கும் இதற்கும் ஓர் விஷயத்தில் வித்தியாசமிருந்தது. நமது தேசத்தில் பழைய காலங்களில் நிர்மாணிக்கப்பெற்று எங்கும் காணும் சிற்றேரிகள், அணைக்கட்டுகள், முதலிய பாசனத்திற்குதவும் சாதனங்களைக் கவனிக்குமிடத்து, அவைகளை இயற்றிய புண்ணியவான்கள் தாங்களதற்காகச் செலவிடும் தொகைக்குச் சரியான வட்டி கட்டுமா, கட்டாதாவென்று யோசித்தவர்களேயல்லர் என்பது நிச்சயம். ராஜகாரியங்களில் வரவு செலவு கணக்கு வைக்காமலும், முன் பின் யோசியாமலும்,காரியங்களைச் செய்வது க்ஷேமகரமென்று நாம் சொல்லவரவில்லை. ஆனல் தீர்க்கமாய் ஆலோசித்துப் பார்க்குமிடத்து, அவர்கள் செய்துவந்தது சாசுவத தருமமென்று இப்பொழுது நன்றாய்த் தெரிகிறது.

ஏனெனில், பிரிட்டிஷ் இந்திய துரைத்தனத்தார் மேற்சொல்லியபடி கிருஷிகர்களுக்கு வேண்டிய தண்ணீர் சேகரித்துக் கொடுப்பதற்குப் பிரயத்தனஞ் செய்வதாகச் சொல்லியதில், சென்ற நூற்றாண்டு முடியும்வரை தாங்கள் தொடங்கிய பாசனக்காரியமொவ்வொன்றிலும் ஆகும் செலவிற்கு வட்டியென்ன கட்டும், என்பதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு செய்துவந்தார்கள். ரயில் போடுவதில், பிரயாணிகளாலும், சரக்குகளாலும் போட்ட முதலுக்கு வட்டி கட்டுமாவென்று பார்க்க வேண்டுவது எப்படி அவசியமோ, அப்படியே வீணாய்ப்போகும் மழைநீரை மனிதருக்கும் பசுக்களுக்கும், புற்பூண்டுகளுக்கும், உதவும்படி செய்வதில் செலவாகும் தொகைக்கும் வட்டிக் கணக்கை முதலில் பார்த்து, அதற்குத் தக்கபடி இதைத் தொடவேண்டுமென்றும், இதை விட வேண்டுமென்றும் கிரமமேற்பட்டது. ஆனால், 1897-ம் ஷூ த்தில் ஐக்கிய மாகாண முதலியவைகளில் க்ஷாம மதிகரித்துப் பொருள் நஷ்டமும், உயிர்ச்சேதமும் பிரபலிக்கவே, நம்மவர்கள் முறையைக் கேட்டும், அதற்கு முன்னுள்ள அனுபவத்தைக் கவனித்தும், இந்தியா கவர்ன்மெண்டார் கமிஷன் ஒன்று ஏற்படுத்தி, நமது நாட்டிலெங்குமுள்ள அனுபோகஸ்தர்களை விசாரித்து, பிறகு பாசன விஷயத்தை இருவகைப்படுத்தியிருக்கிறார்கள். அவையாவன, முற்சொல்லியபடி வட்டிக் கணக்குப் பாசனமும், நமது சனாதன தருமப்படி புண்ணியக் கணக்குப் பாசனமுமேயாம். பிற்சொல்லியதில், வட்டி சரியாகக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், அது விளைச்சலை யதிகரித்து க்ஷாமத்தைப் பரிகரிக்க வெகு சிலாக்கியமான சாதனமென்று நமது முன்னோர்கள் முற்காலத்தில் ஏதோ குருட்டுத்தனமாய்த் தெரிந்துகொண்டிருந்ததை, அனுபவ பூர்வகமாய் நமது துரைத்தனத்தாரும் சரியென்று ஒப்புக்கொண்டிருப்பதால், இனி நமக்கு நல்ல காலந்தான். தவிரச் சென்ற வருஷத்திய பாசன ரிபோர்ட்டைக் கவனிக்குமிடத்து வட்டிக்கணக்குப் பாசனவகையில் நூற்றுக்கு $7\frac{1}{2}$ வீதம் வட்டி தேறியிருப்பதால், இனி தற்காலம் நடப்பிலுள்ள மூன்று வட்டி போக, மிகுதியாகுந் தொகையையாவது, வருஷாவருஷம் புண்ணியப் பாசனத்திற்கு உதவி வருவார்களாகில், அது துரைத்தனத்திற்கும், தேசத்திற்கும் சாசுவத க்ஷேமத்தை விளைவிக்குமென்பதிற் றடையில்லை.

**ஜப்பானும், கோமாமிசமும்.**

பதினைந்து வருஷங்களுக்குமுன் சீனர்களுக்கும் ஜப்பானியருக்கும் நடந்த யுத்தத்தில் ஜப்பானியர் சீனரை முறிய அடித்தவுடன், ஏதோ ஆசியாவிலும் ஓர் அற்புதம் நடந்ததாக நம்மிலனேகர் எண்ணினார்கள். பிறகு, ஐந்து வருஷங்களுக்கு முன் ஜப்பானியர் ருஷியரை முறிய அடித்து ஜெயபேரி முழக்கியதும், ஆச்சரியத்திலும் ஆச்சரியமென்று எல்லாத்தேசத்தவருங் கொண்டாடி, அதுமுதல் ஜப்பானியர் விஷயத்தில் நம்மவர்களுக்குப் பல காரணங்களால் பக்தி அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நமது குமாரர்களி லனேகர் வருஷாவருஷம் அவ்விடத்தில் தொழில் கற்றுவரப் போகிறார்கள். தவிர ஜப்பானியர் விசேஷமாய்ப் பௌத்தராதலால் நமக்கும் அவருக்கும் "ரத்தசம்மந்தம்" இருப்பதாக நாம் பாவித்து வருகிறோம். ஆதலால், அவர்களுடைய உத்தரோத்தர க்ஷேமத்தில் நமக்கும் அக்கரை யிருப்பது சகஜம். அவர்களிடத்திலிருந்து லௌகிக விஷயங்களில் நாம் கற்றுக்கொள்ளவேண்டியவை அநேகம். என்றாலும் நாம் அவர்களுக்குத் தருமோபதேசம் செய்திருப்பதினிமித்தம் இரண்டொரு விஷயங்களில் அவர்கள் நம்மை அனுசரிப்பது நலமெனக் காணுகிறது. தற்காலம் அவர்கள் கோமாமிச பக்ஷணம் செய்ய ஆரம்பித்துவிட்டார்களென்றும், அதற்காக ஆஸ்திரேலியா முதலிய விடங்களிலிரு

ந்து பசுக்களை "வருத்துவதற்கு" ஏற்பாடு செய்திருப்பதாகவும் கேட்டு மிகவும் விசனிக்கிறோம். ஆதலால், நம்மவரான ஸ்ரீமான்-லப்சங்கர் லக்ஷ்மிதாஸ்ஜீ அவர்கள் ஜப்பானியச் சக்கரவர்த்தி யவர்களுக்குச் சமீபகாலத்தில் செய்துகொண்ட மனுவை நாம் மனப்பூர்வமாய் ஆமோதிக்கிறோம். அம்மனுவில் மேற்படியார் இதனால் விளையக்கூடிய அனர்த்தங்களை விவரித்தெழுதியிருக்கிறார். கோமாமிச பக்ஷணம் செய்வது, சிலவிசித்திர வியாதிகளுக்குக் காரணமாகிறதென்றும், தேகபலத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் அது அவசியமில்லையென்றும், அனாவசியமாகப் பணச்செலவாகிறதென்றும், பௌத்த மதஸ்தர்களாகிய அவர்கள் இந்த அதருமத்திற்கு உடன்படக்கூடாதென்றும், அவர் வற்புறுத்தித் தக்க நியாயங்களைக்கொண்டு விளக்கியிருக்கிறார். ஜப்பானியர்கள் எவ்விஷயத்திலும் சொகுசுக்காகக் காரியஞ்செய்பவரல்லராதலால், மேனாட்டில், இவ்வழக்கமிருக்கிறதென்கிற நியாயத்தையே முன்னிட்டு, இதை நாகரீகக்குறியாக வெண்ணி இவ்வழக்கத்தைப் பிரபலப்படுத்த மாட்டார்களென்று நம்புகிறோம். கொஞ்ச காலத்திற்குமுன் ஜப்பானியப் பிரபுக் குடும்பங்களிலுள்ள ஸ்திரீகள் ஐரோப்பிய வழக்கப்படி உடை உடுக்கப் பிரயத்தனப்பட்டபோது, பிரஸிடேன்ட் கிளவிலண்டு என்னும் அமெரிக்கா ராஜ்ஜியாதிபதியின் மனைவியார் ஜப்பானிய மகாராணிக்கு ஓர் கடிதமெழுதி, ஐரோப்பிய வழக்கத்தில் இடுப்பை உடுக்கையாக்கிக்கொள்ளுவதற்கும், பாதத்தைச் சிறிதாக்கிக்கொள்ளுவதற்கும், அவர்களிலேற்பட்டிருக்கும் இம்சைகளை வருணித்து, அவ்வழக்கத்தைக் கைப்பற்றவேண்டாமென்று தன்னாலானமட்டுஞ் சொல்லித் தடுத்தாராம். அது பயன்படாமல் இப்பொழுது அனேக ஜப்பானியா ஸ்திரீகள் சனியனை விலைக்கு வாங்கிக்கொண்டு உபத்திரவப்படுவதாகவதந்தி. ஆதலால், கோமாமிச விஷயத்திலும், ஜப்பானியர்கள் அவசரப்பட்டேதாகிலுஞ் செய்து, பிறகு அதை மாற்றுவதற்காகாமல் எங்கே உபத்திரவப் படுவார்களோ என்று சங்கித்து, அவர்களுடைய க்ஷேமார்த்தமாய் நடக்கு மிப்பிரயத்தனத்தை நாமும் ஆமோதிக்கிறோம்.

துரைத்தன விமர்சனம்.

முதல் நம்பரில் நாம் விவரித்தபடி சட்டநிரூபணச் சபையில் நடக்கவேண்டிப் பிறந்த விமர்சனச்சட்டம் ஜாரிக்குவந்துவிட்டது. அதை யனுசரித்து நமது நாட்டில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க யோக்கியதையுள்ள பெரியமனுஷர்களுடைய ஜாப்தாவும் தயாராகிவிட்டது. மதிராஸ் சட்டநிரூபணச் சபையில் நமக்குப் பிரதிநிதிகளாயிருந்து நமக்கு வேண்டியபடி யெல்லாம் உபகாரம் செய்வதற்குச் சில நண்பர்களும் விக்ஞாபன பத்திரிகைகள் வெளியிட்டுத் தங்களுடைய பிரவரங்களைச் சொல்லி வருகிறார்கள். வேறு விதமாயும் தமுக்குகள் அடிபடுகின்றன.


இதெல்லாம் நமக்குச் சந்தோஷமே. ஆனால் இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் கக்ஷி வேறாக்கி, ஒரு நாட்டிலேயே பிறந்து இறக்கவேண்டிய ஜனங்களைக் கூறுகளாக்கி விடுவது ராஜாங்க விஷயத்திற்கு நிரந்தரமாய் க்ஷேமத்தை விளைவிக்கக் கூடுமோ என்பதில் நம்மவர்களான விவேகிகளுக்கு அபிப்பிராயம் பேதப்பட்டிருக்கிறது. உதாரணமாகத் திருவாங்கூர் சமஸ்தானம் திவான்ஜியாயிருந்து பென்ஷன் வாங்கும் திவான் பஹதூர் ஸ்ரீமான்-கிருஷ்ணசுவாமி ராயரவர்கள் இதனால் உத்தரோத்தரம் இருதிறத்தாருக்கும் தீமையுண்டாகலாமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் காரியம் முடிவாய் விட்டபடியால் இனி அதைப்பற்றி வியவகரிக்காமல், மேல் நடக்கவேண்டியதை யோசிப்பது தான் விவேகிகளுக்கு லக்ஷணம். மனுஷ்ய ஆசாரங்களில் யாவும் காலதேசவர்த்தமானங்

களை யனுசரித்து மாறுபவைகளேயாதலால், இந்த முறை அனுபவத்தில் நல்லதல்லவென்று கண்டால், புத்திமான்களான நம்மவர்களும் துரைத்தனத்தாரும் ஏகோபித்து வேண்டிய திருத்தங்களைச் செய்துகொள்வார்களென்பதிற் சந்தேகமில்லை.

மொத்தத்தில் பழைய அனுபவத்தைப்பார்க்குமிடத்து ஒரே தேசத்தில் வாழுங் குடிகளுக்குள் ஒற்றுமை அதிகரிப்பது நல்லதே தவிர, வேற்றுமை அதிகரிக்கக்கூடாதென்பது யாரும் ஒத்துக்கொள்ளவேண்டிய விஷயம். இந்தியாவில் மகம்மதியர்களும், இந்துக்களும் முன்னொரு காலத்தில் மதவிஷயமாக எப்போதும் குழப்பமுண்டாக்கிக்கொண்டே யிருந்தார்கள். பிறகு அதனால் இருதிறத்தாருக்கும் நஷ்டமே தவிர லாபமில்லையென்று கண்டு, இருகக்ஷியிலும் விவேகிகள் உழைத்து இவர்களை மதவிஷயத்திலுங்கூட ஐக்கியமத்தியம் உண்டாக்க வேண்டிய பிரயத்தனம் நடந்துவந்தது. அதை ஆரம்பித்த சூத்திரதாரர்களுடைய மனோரதம்முற்றும் நிறைவேறவில்லையென்றாலும், கலகம் அனேகமாய் அடங்கி, அவரவர் காரியத்தை அவரவர் பார்த்துக்கொண்டு போவதற்கு இம்மகாபுருஷர்கள் முக்கிய காரணர் என்னல் தகும். ராஜாங்க விஷயத்திலும், மற்றுள்ள தொழில் முதலிய பொது விஷயங்களிலும், உழைத்து வருபவர்கள் இந்தப் பெரிய ரகசியத்தைக் கவனிக்கவேண்டும். அவர்களுக்கு உபயோகப்படும்பொருட்டு, இச் சூத்திரதாரர்களுக்குள் உத்தமர்களான ஸ்ரீ கபீர்தாஸ ஸ்வாமிகளுடையவும், அவருக்குச் சிஷ்யர்களான வேறிரண்டொரு குருக்களுடையவும், சரித்திரத்தை இச்சஞ்சிகையில் விளக்குவோம். காதிருப்பவர்கள் கேட்டுத் தொன்முறையின் பயனை யடைவாராக.

தீண்டாதவருக்கு நற்குறி.

சென்ற மாசத்தில் இப்"பாவங்கள்" விஷயத்தில் பம்பாயிலும், வேறிடங்களிலும், நடந்த பேச்சுகளைப் பற்றிச் சற்று விவரித்தோம். நாம் எழுதியபிறகு மதிராஸிலும், ஓர்பெருஞ் சபை கூடி இவர்களுக்கு நடக்கும் அந்நியாயங்களை வெகு சாதுரியமாக வருணித்துப் பல விவேகிகள் பேசினதாகக் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். ஆனால், நமது ஐரோப்பிய நண்பர் ஒருவர் சொல்லுவதுபோல, நாம் பேச்சுடன் நின்று விடுவது திருப்திகரமாயிருக்கவில்லை. ஆதலால், பிரதிமாசமும் இவ்விஷயத்தில் நடவடிக்கைகள் ஏதாகிலும் நடந்திருக்கும் பக்ஷத்தில் அவைகளை அன்பர் அறிவதற்காக வர்த்தமானக் கொத்தில் சேர்த்து விடுவதாக உத்தேசம். சென்ற ஒரு மாசத்திற்குள்ளாக இரண்டு மூன்று வெகு விசேஷமான சங்கதிகள் இவ்விஷயத்தில் நடந்திருக்கின்றன. (1) பங்காளத்தில் பரிட்பூரில் பாபு ஸ்ரீமான்-அம்பிகாசரண முஜூம்தார் அவர்களுடைய லௌகிக சாதுரியத்தினாலும், பேச்சு மகிமையினாலும், "நாம சூத்திரர்களுக்கும்" அதிலுந் தாழ்ந்தவர்களுக்கும், ஓர் நல்வழி பிறந்ததாகவும், பழைய ஆசாரத்தையே குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கும் பண்டிதர்களும் இவ்விழிகுலத்தார் விஷயத்தில் இனி இவ்வளவு நிஷ்கண்டகமா யிருப்பதில்லையென்று பிரதிக்ஞை செய்ததாகவும், அதனால் இதுவரையிலும் அவர்கள் செய்யக்கூடாத அநேக கைங்கரியங்கள் இனி நடப்பதற்கு வகையேற்பட்டிருப்பதாகவுங் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். (2) மலையாளத்தில் சர்க்கார் பாடசாலைகளிலும், இதரபாடசாலைகளிலும், ஈழவர், தீயர் முதலிய வகுப்புப் பிள்ளைகளுக்குச் சேர யோக்கியதை இல்லையென்று இதுவரை ஏற்பட்டிருந்த பதிவு சற்றிளகித் திருவாங்கூரில் சர்க்கார் மூலியமாகவும், வேறிடங்களில் அபிமானிகள் மூலியமாகவும், இவர்கள் இனிப்பள்ளிக்கூடத்திற் சேர்ந்து நால்வரைப்போல் முன்னுக்கு வருவதற்கு யோக்கியதாசித்தி கிடைத்திருக்கிறது. (3) தியாஸபி சபை மெம்பர்கள் ஆங்காங்கு பஞ்சமர்களுக்குப் பள்ளிக்கூடமேற்ப



காலஞ் சென்ற ஸ்ரீமான் ராமேச சந்திர தத்தர்.

டுத்தித் தொழில் கற்பித்து வருவதோ வெகு நாளாய் நடந்துவரும் காரியம்.

சென்ற மாதத்தில் பரோடாவில் இம்மகா புருஷர் தேகவியோகமடைந்ததைக் கேட்டு மெத்தவும் விசனிக்கிறோம். இதனால் நமது தேசத்திற்குண்டான நஷ்டம் இவ்வளவென்றில்லை. இவருடைய ஜீவன சரித்திரத்தையும், இவர் நமது தேச க்ஷேமத்திற்காகப் பட்டிருக்கும் சிரமத்தையும் இங்கு விவரிப்பதற்கில்லை. ஆனால் அது அவசியமுமன்று. ஏனெனில், சேது ஹிமாசலம் இவற்றிற்குட்பட்ட இப்பாரத வருஷத்தில் இவர் பெயர் விளங்காத இடமுமில்லை. இவரைக் கொண்டாடாத ஜனங்களுமில்லை. கலெக்டர்களை யாளுங் கம்மிஷனர் உத்தியோகம் வரை யுயர்ந்து சர்க்காருக்கு நாணயமாய் நடந்து கொண்டது சாமான்னியம் என்றாலும், பின்னிட்டுத் தம்மவர்களான மகா ஜனங்களுடைய க்ஷேம நிமித்தம் இவர் உத்தியோகத்தை யொழித்து விட்டுச் சென்ற பதினைந்து வருஷங்களுக் கதிகமாகவே யுழைத்து வந்ததின் பெருமையைக் கிரமமாக விவரிக்க புகுந்தால் வெகுதூரம் பெருகிவிடும். நமது நாயகர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விஷயத்தில் தேர்ச்சியடைந்தவர்கள். ஸ்ரீமான்-தத்தரோவெனில் பல பெரியவிஷயங்களில் தேர்ந்து பிரசித்தி பெற்றவர். நமது நாட்டாரை அறியாமையினால் அங்கிலேய ராஜ்ஜியத்தார் இகழாமலிருக்கும்படி, நமது தேசத்திய பிராசீன சரிதத்தை லந்தன் யூனிவர்ஸிடியில் சரித்திரப்பண்டிதராயிருந்தும், வேறு பெரிய இடங்களில் பேசியும் வந்தது ஒரு பேருபகாரம். இந்தியத் துரைத்தனத்தாரை நிலவரி விஷயத்தில் மிதமாயிருக்கும்படிப் பல நியாயங்களைக் கொண்டு வெகுகாலமாக விடாமல் வாதாடி வந்ததில், அவர்கள் அவ்விஷயத்தில் சில்லரைத் தோஷங்களாவது இருக்கின்றன வென்று ஒப்புக்கொண்டதும், இனி அவ்விஷயமாய் ஏதாகிலும் நமக்கு நற்பயனுண்டாகும் பக்ஷத்தில் அதுவும் இம்மகானுடைய பிடிவாதத்தினாலும், உத்தியோக அனுபவத்துடன் கூடிய நியாய பலத்தினாலும் கைகூடியதென்பதில் ஆக்ஷேபமேயில்லை.

காலஞ் சென்ற ஸ்ரீமான் ராமேச சந்திர தத்தர்.

கல்வி முதலிய சத்விஷயங்களுக்குப் பணம் போதாதென்று இந்தியா கவர்ன்மெண்டார் கூறியபோதெல்லாம், இன்னின்ன வகைகளிற் பணம் அனாவசியமாகச் செலவாகிறதென்று எடுத்து விளக்கி, நம்மவர்களை மேலுமேலும் பொறுப்புள்ள உத்தியோகங்களிலமர்த்தினால், வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டலாம், வேண்டிய நற்காரியங்களையும் செய்யலாமென்று வெகுநாளாய் இவர்வாதஞ்செய்து வந்ததின்பலன் இப்போது இரண்டுவருஷ காலமாகத்தான் பிரத்தியக்ஷமாகிவருகிறது. ஸ்ரீ ராமாயணம், மகாபாரத முதலிய காவியங்களின் அருமை அங்கிலேயர் அறிவதற்காக ஆங்கிலபாஷையில் செய்யுள் ரூபமாக எழுதிப் பெருமையடைந்திருக்கிறார். தவிர ராஜாங்க விஷயமாயும், பாரதீய வைசிக தத்துவ விஷயமாயும் எழுதிய புஸ்தகங்களும், பத்திரிகைகளும், செய்த பிரசங்கங்களும் பல. கடைசியாகப் பரோடா மகா ராஜாவின் நிர்ப்பந்தத்தின் பேரில், அவருடையவும் அவரது பிரஜைகளுடையவும் க்ஷேமத்தை யபேக்ஷித்துத்திவான் வேலையை யொப்புக்கொண்டதில், சிரமம் அதிகரித்து வியோகமடைந்தாரென்று நமக்கு நிச்சயம். வயது 61 தான் ஆகிறது. இரண்டு வருஷத்திற்குமுன் நமக்கு இவரைப்பார்க்கும்படியான பாக்கியமிருந்தபோது, இனிப்பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு ஆக்ஷேபமில்லையென்றெண்ணினோம். ஆனால் ஈசுவர சங்கற்பம் வேறாகிவிட்டது. ஆதலால், இவர் பேசியதும், எழுதியதுமான விஷயங்களைத் திரட்டிப் பிரசுரிப்பதற்கு யாராவது முயல்வார்களென்றும், இவருடைய சாந்தமும், விவேகமும், ஆராய்ச்சியின் பெருமையும், காவிய முதல் கணக்கு ஈறாகப் பலவிதக் கலைகளிலும் தேர்ந்த அற்புதமும், தேச க்ஷேமார்த்தம் உழைத்ததும், உயிரிழந்ததுமான தரும குணமும், இனியெக்காலத்தும் நமது குமாரர்களுக்கு நந்தா விளக்காகி யுபயோகமதிகரிக்குமென்றும் நிச்சயமாய் நம்புகிறோம்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் சரித்திர ஆராய்ச்சி

(97-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி.)

வில்லிபுத்தூரரை வாதில் வென்றது.

பாவலரேறாகிய நமது அருணகிரி நாதரது கீர்த்தியைப் புகழாத நாவே நந்தமிழ்நாட்டிற் கிடையாது. இலக்கண இலக்கியம் நன்கு கற்றவராகிய வில்லிபுத்தூரருக்கும் நமது சந்தப் பாவலருக்கும் ஒருமுறை தருக்க முண்டாயிற் றென்றும், அப்போது ஆசு கவியாக இயற்றப் பட்ட நூல் தான் கந்தரந்தாதி யென்றும், அந் நூலுக்கு உரை அவ்வில்லிபுத்தூரரே செய்தன ரென்றும், அதில் "திதத்த" என்றுதொடங் கும் செய்யுளுக்கு அவர் உரை கூறமாட்டாது திகைத்துத் தோல்வியுற்றன ரென்றும், அதற்கு அருணகிரிநாதரே உரையருளிச் செய்தன ரென்றும், பின்பு ஏனைய செய்யுள்களுக்கு வில்லிபுத்தூரரே உரைசெய்து முடித்தனரென்றும் ஆன்றோர் கூறுவர். இத்தருக்கத்தில் தோல்வி யுற்றவர் காதை அறுப்பதாக ஒட்டினதற்கு ஒத்தவாறு வில்லிபுத்தூரரது காதை யறுத்து இழிவு படுத்தாது அதனை யவருக்குத் தமதாக அளித்தருளிய நமது பாவலரது பெருங் கருணையை யென்னென்பேம்?

"காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகி லாவனே—தேசுபெறு
மூழுக்குக் கூத்த னுவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவையெனக் கூறு."

(தனிப்பாடல்).

[கம்பன் காசு கொடுத்தால் பாடுவான். கூழ் கொடுத்தாலும் பாடுவாள் ஔவை. ஆசுகவி பாடுதலில் வல்லவன் காளமேகன். ஊழையும் வெல்லவல்லன ஒட்டக்கூத்தன் பாடல்கள். உவந்து மகிழப் புகழேந்தியார் பாடல்கள். கருணைத் திறத்தைக் காட்டும், அருணகிரியார் பாடல்கள்.]

'சங்கநூல், திருக்குறள் முதலிய இலக்கியங் களிற் சில கற்றுவாய்ப்பறையாகக் கொண்டே 'நான் புலவரேறு,' 'நான் கவிராஜ சிங்கம்' எனக் கூறித்திரியும் வீண்பெருமையும், அகந்தையும், இறைவனே! எனக்குவேண்டாம்' எனப் பொருள்படும்படி ஆசிரியர் ஓரிடத்திற் கூறுகின்றனர்.

சங்கபாடல்—

பனுவல் கதை காவ்ய மாமெ னெண்கலை
திருவளுவ தேவர் வாய்மை யென்கிற
பழமொழியை யோதி யேயு ணர்ந்துபல் சந்தமாலை-
மடல்பரணி கோவை யார்க லம்பக
முதலுளது கோடி கோள்ப்ர பந்தமும்
வகைவகையி லாசு சேர்பெ ருங்கவி சண்டவாயு;
மதுரகவி ராஜ னேனென் வெண்குடை
விருதுகொடி தாள மேள தண்டிகை
வரிசையொடு லாவு மால கந்தைதவிர்ந்திடாதோ!

[சங்கநூல்கள், திருக்குறள் முதலிய நூல்களைப் படித்து, மாலை, மடல், பரணி, கோவை, கலம்பகம் முதலிய பிரபந்தங்களைப் பாடும் மதுர கவிராஜன் நான் என்று வெண்கொடை, கொடி, தாளம், மேளம், தண்டிகை ஆதிய விருதும், வரிசையும் பெற்று, ஆணவமயக்கத்தொடு உலாவும் அகந்தை எனக்கு வேண்டாம்-இறைவனே!]

நமது அருணகிரி நாதர் காலத்தும் அங்கும் இங்கும் சிலநூல் கற்றுச் சில பாடவல்லவரெல்லாம் கவிராஜன், புலவரேறு என்னும் பட்டப்பெயரைத் தாமே புனைந்து உலகத்தவரை மயக்குவித்தனராதலின், உண்மையாகவே நன்குகற்ற வில்லிபுத்தூரர் அரைகுறையாகப் படித்தவரை வாதுக்கழைத்து, தோல்வி யடைந்தவுடன் அவர் காதைத் தம் கையிலுள்ள துறடுகொண்டு இழுத்து ஒட்ட அறுத்து அவர் கல்விச்செருக்கை அழித்துத் தமது பிரபாவத்தை நாட்டி வந்தனர். கல்வியின் அருமையைத் தெரிவிக்கிற நல்ல வழியாகையால் இவர் செய்துவந்த வழக்கத்தை எவருந் தடுத்ததில்லை. இதுபோலவே பிள்ளைப் பாண்டியன் என்னும் அரசனும் தன்னிடத்துப் புலவனென வந்து ஒருவன் சொல்லும் கவியில்

ஏதேனுங் குற்றம் காணில் அவன் தலையில் நறுக்கென்று குட்டும் வழக்கங்கொண்டிருந்தான். பெரும்புலவராகிய ஒட்டக்கூத்தர் ஒருவன் செய்யுளில் குற்றங்காணில் தலையையே வெட்டிவிடுவாராம். இவ்விஷயங்கள்,

"குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
யிரண்டொன்று முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே."

என வருந் தனிப்பாடலால் தெரியவருவன.

"கண்டது கண்டபடி பலபட்டப் பெயர்களைத் தாங்களே வைத்துக்கொண்டு தாந்தோன்றிகளாய்த் திரிபவரெல்லாம் அச்சமுற்று அடங்குவராதலின் வில்லி புத்தூரரது செய்கை லோகோபகாரமான தென்றும், அங்ஙனம் அவர் செய்யாவிடின் கல்வி யபிவிருத்தியாகா தென்றும், கொள்ளப்பட்டன. இக்காலத்தும் பி. ஏ., எம். ஏ., முதலான பட்டங்களை அப்பரீக்ஷை தேறாத பிறர் வைத்துக் கொண்டால் குற்றமாவது போலவே அக்காலத்திலும் தகுதி யற்றவர் பட்டப்பெயர்களைச் சூடுவது குற்றமாயிருந்த தென்றும் இதனால் ஏற்படுகின்றது.' நிற்க.

சம்பந்தாண்டானொடு வாது செய்து ஜயம் பெற்றது. முருகக்கடவுளை ராஜசபையில் வரவழைத்தது.

அருணகிரிநாதரோடு வாதுசெய்தவர் மற்றொருவருண்டு. அவர் பெயர் சம்பந்தாண்டான் என்ப. சம்பந்தாண்டானோடு நடந்த வாது வில்லிபுத்தூரரொடு நடந்த வாதுபோலச் சாமான்னியமானதன்று. அது திருவண்ணமலையிலிருந்த பிரபுட தேவராஜன் சபையில் நடந்தது. யாவரொருவர் தாம் உபாசிக்கும் மூர்த்தியைச் சபையில் வரவழைக்கின்றனரோ அவரே பெரியர் என்றான் அரசன். யான் உபாசிக்கும் பார்வதிதேவியை வரவழைக்கின்றேன் என்றான் சம்பந்தாண்டான். யான் வழிபடும் அறுமுகத்தேவை வரவழைக்கின்றேன் என்றார் நம்புலவர். சம்பந்தாண்டான் மந்திரங்கள் ஓதித் தேவியாரை வரவழைக்க முயன்றபோது, அருணகிரியார் வேண்டுகோளுக்கிணங்கி, முருகக்கடவுள் தேவியார் மடிமீது இருந்து அவரைப் போகாது தடுத்தலுந் தேவியார் வராது போகச் சம்பந்தாண்டான் அபஜயமடைந்தான். சந்தப் புலவர் கந்தக் கடவுளைத் துதித்து வரவழைக்க முயன்றபோது, சம்பந்தாண்டான் அம்மையாரைக்கொண்டு தடுக்க முயலுதலை யறிந்த புலவர், மயில் வாகனத்தை உன்னிப் பரவ, அதன் உதவியால் ஆறுமுகக்கடவுள் அதன் மீது ஆரோகணித்துத் திருக்கைவேல் விளங்க அரச சபையில் வந்து தோன்றினர். இவ்விடயங்களின் உண்மையையுந் திருப்புகழ் வாயிலாகவே தெரிந்துகொள்ளலாம்:—

அதல சேட னாராட அகில மேரு மீதாட
மயிலு மாடி நீயாடி வரவேணும்.

* * *

உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே. (976)

[மாலை யணிந்த பிரபுடதேவ மாராஜனது உள்ளத்திருக்கும் தேவர் பெருமானே! பாதலத்துள்ள ஆதிசேஷனும் நெளியவும், மேருமலையும் அசையவும், மயிலசையவும் நீ யிசைந்தசைந்து வரவேணும்].

சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமு
னந்தத் திருநட மிடுசர ணழகுற
சந்தச் சபைதனி லெனதுள முருகவும் வருவாயே.

[உனது நடனபாதங்கள் அழகுடன் விளங்க இச்சபையின்கண் எனதுள முருக வரவேண்டும்].

சயில மெறிந்தகை வேற்கொடு
மயிலினில் வந்தெனை யாட்கொளல்
சகமறி யும்படி காட்டிய குருநாதா. (301)

[கிரௌஞ்சமெறிந்த வேல் திருக்கரத்து விளங்க, மயில் மீது வந்து என்னை ஆட்கொண்ட செயலை ஜகமெல்லாம் அறியக்காட்டிய குருநாத மூர்த்தியே!]

மேற்கூறிய சம்பந்தாண்டான் என்பவனது சூழ்ச்சியால் அருணகிரியார் கற்பக நாட்டுப் பாரிஜாதப் பூக்கொணரும் பொருட்டுத் தம துடம்பை நீத்துக் கிளிரூபமாய்ச் சென்றனர் என்றும், அவ்வமயத்துச் சம்பந்தாண்டான் 'பாவலர் இறந்தனர், அவர் உடல் திருவருணைக் கோபுரத்தின் கண் உள்ளது' என்று கூற, அரையனும் உண்மை யுணரானாய் அவ்வுடலைத் தகிப்பித்தான் என்றும், பின்னர் இதனையறிந்த பாவலர் கிளி ரூபமாகவே செந்தமிழ்க்கடவுள் மாட்டு அமர்ந்துவிட்டனரென்றும் ஆன்றோர் கூறுவர்.

'இறைவனே! வள்ளிகாதலனே! நீ எனக்கு உபதேசித்த மவுன மந்திரத்தையே நினைந்து சுகபதம் அடைந்து யான் வாழுநாளும் உண்டோ?' என நம் பாவலர் கேட்டுக்கொண்டவாறே சுக (கிளி) பதம் (நிலைமை) அடையப்பெற்றார்.

கிளி உருவ முற்றது.

'பரவ சந்தனிந் துனையு ணர்ந்தொரு
மவுன பஞ்சரம் பயில்தருஞ் சுக
பதமடைந்திருந் தருள்பொருந்தும தொருநாளே'

[உன்னை உணர்ந்து மௌனோபதேசத்தைப் பயிலும் சுகபதத்தில் இருக்கும் நாள் எந்நாளோ!]

துகளில் சாயுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ. ()

[சாயுச்சிய நிலையையும், சுக சொரூபத்தையும் என்று பெறுவேனோ.]

ஸ்வாமிகள் கிளி ரூபமாயிருந்தே கந்தரநுபூதியென்னும் நூலை இயற்றினரென்ப. இவர் இயற்றிய வேறு நூல்கள் கந்தரலங்காரம், திருவகுப்பு என்பன. இவர் அருளிச்செய்த நூல்களின் பெருமையை நம்மால் அளவிட முடியாது. இவரது வாக்கின் பிரபாவத்துக்கு,

இவர் அருளிய வேறு நூல்களும் அவைகளின் பெருமை இவ்வளவினதென்பதும்.

'வாக்கிற் கருணகிரி வாதவூ ரார்கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனர்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்.'

[வாக்கு வல்லமைக்கு ஸ்ரீ அருணகிரிநாதர். கனிவொடு பாடுதற்கு ஸ்ரீ மணிவாசகப் பெருமான். திடத்தொடுபாடுதற்கு ஸ்ரீசம்பந்தமூர்த்தி சுவாமிகள். ஒரு நோக்கம் (எண்ணம்) நிறைவேறப் பாடுதற்கு நக்கீரனர். நயமாகப் பாடுதற்கு ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள். உறுதியான பற்றொடு பாடுதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள். எனச்சொல்லலாம்.]

என்னும் ஆன்றோர் செய்யுளும், பொருளமைப்பின் சிறப்புக்கு,

"ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்-வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றார் தன்னையாய் முக்கணனும்
நாற்றிசைக்குங் கைகாட்டி னன்." [தை

[ஐயனே! அருணகிரிநாதன் என்னும் பெயரொடு விளங்கிய அப்பனே! உன்னைப்போல மெய்யான ஒரு சொல்லை எவரும் என்றும் சொல்லவில்லை. உலகத்திருந்த பெரியவர்களெல்லாம் இன்னது தான் மெய்ப்பொருள் என்று சொல்லமுடியாது கை சோர்ந்தார். எந்தையாகிய சிவபெருமானும் தக்ஷிணாமூர்த்தி சொரூபமாய்ச் சின்முத்திரையாக விரலைச் சுட்டிக்காட்டினரே ஒழிய உன்னைப்போலத் தெளிவுறச் சொல்லவில்லை.]

"அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
றுறுதிசொன்ன வுண்மையினை யோருநா ளெந்நாளோ?."

[அறிவை அறிதல்தான் அறிவு என நீ கூறினதின் பொருளை யான் உணரும் நாள் எந்நாளோ?] எனத் தாயுமானவர் சொற்ற பாக்களும் போதிய சான்றாம்.

சுவாமிகள் அருளிய திருப்புகழ்ப் பாசுரங்களின் தொகை பதினாறாயிரமென்பது ஆன்றோர் துணிபு.

திருப்புகழ் பாடற்றொகை பதினாறயிரமென்பது.

"எம்மருண கிரிநாத ரோது பதி
னாறு யிரந்திருப் புகழமுதமே"

[திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்-காப்புப்பருவம் (10)] அருணகிரி நாதனறைந்தபதி னாறு யிரகவிதை யென்றலகில் யாரும்-உரைபுகலுந், தெய்வத் திருப்புகழ்.

(திருத்தணிகைஉலா.)

பின் வருஞ் செய்யுள்களாலும் அவர் சரித்திரம் இனிது விளங்கும்;—

மாதரிரு விழியாகும் அம்புக்கு
  மதனவேள் வாளிக்கு நடுவாகியே
மாலாகும் அருணகிரி நாதரு
  ணைச்சிகரி வடவாச விற்பயில்நம்
பாதமலர் பாடுநீ யென்னவடி
  யேனுமெப் படிபாட வென்றளவிற்
பத்திதரு முத்திநகை யத்தியிறை
  வாவெனப் பாடென்று சொல்லியியலாற்
பூதலமு மெங்கிளையு மீடேற
  நாவிற் பொறித்தவ ருரைத்தகவிதைப்
புத்தமுது பன்னிரு செவிக்குநிறை
  யக்கொண்டு போதமுனனித் தருளினாற்
சீதள மலர்ச்சரண முதவுகா
  ணாராளி சிறுதேரு ருட்டியருளே
செயசெயென அமரர்தொழ அசுரர்முடி
  சிதறுமுனி சிறுதேருருட்டி யருளே.

[பெண்களது விழிகளாகிய பாணங்களுக்கும், மன்மதனது அம்புகளுக்கும் இலக்காகி மயங்கிநின்ற அருணகிரிநாதருக்குத் திருவண்ணாமலையில் அநுக்கிரகஞ் செய்யவேண்டி அவர் முன் தோன்றி "நம் பாதமலர் பாடு நீ" என்று நீ சொல்ல, அதற்கு அவர் "எப்படி பாட அடியேன்" எனத் தாழ்ந்து கேட்க "முத்தித் தரு பத்தித்திருநகை யத்திக்கிறை" என அடி எடுத்துக் கொடுத்துப் பாடுஎனத் திருவாய் மலர்ந்தும், பூவுலகு ஈடேற அவரது நாவில் சடாக்ஷரத்தைப்பொறித்தும், அவரது அமுதன்ன திருப்புகழ்ப் பாசுரங்களைப் பன்னிரு செவியிலும் ஏற்றும் அவருக்கு ஞான அமுதளித்த சுப்பிரமணியமூர்த்தியே! நீ இச்சிறு தேரை உருட்டியருளுக. தேவர்களுக்கு வாழ்வும் அசுரர்களுக்குத் தாழ்வும் வரும்படி செய்த வள்ளலே! நீ இச்சிறு தேரை உருட்டி யருளுக.

(திழிவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்—
சிறுதேர்ப்பருவம்—1)

"கைக்கிளியைப் பார்த்துவெகு காதலுட னன்னைமீர்
இக்கிளியைத் தாரு மெனக் கென்றாள்-அக்கிளிதான்
வில்லிபுத்தூ ரான்செவியின் மேலரிவாள் பூட்டியன்
வல்லபத்தின் வாதுவென்று வந்ததுகாண்-பல்ல [று
[வையுண்
மற்றொருவன் வாதுவென்று வான்பாரி சாதப்பூக்
குற்றமற மண்மேற் கொணர்ந்ததுகாண்--வெற்றிப்
பிரபுடதே வக்குரிசில் பேணி யெதிர்காண
முருகன் மயில்மேல் முடுகி-வரவழைத்து
வந்ததுகாண் செவ்வேள் வரிசையலங் காரமுற்றுந்
தந்ததுகாண் பேரின்பஞ் சார்ந்ததுகாண்-எந்தை
முத்தித் திருவென்னு முன்பதினாறாயிரமாம் [பிரான்
பத்தித் திருப்புகழைப் பாடுங்காண்-சித்தியெட்டுங்
காற்றதுகா ணந்தம்மைக் கண்ணாலும் பாராம
லுற்றதுகாண் சிற்றின்பத் தோருறவு-மற்றதுகாண்
நாமுரைக்கும் வார்த்தைகளை நற்செவிகே ளாதிருக்
[கும்
ஓமுரைக்கும் பூதியுங்கண் டுற்றிருக்கும்-தோமுரை
[க்கும்
மற்றைக் கிளிபோல் வசப்படா தென்றுரைத்துப்
பற்றிக்கொடுபோனார் பாவைதனை.

[பேதும்பைப் பருவத்தளாகிய அப்பெண் இறைவனது கையின்கண் அமர்ந்துள்ள கிளியைப்பார்த்துத் தனது தாயர்களை நோக்கி அன்னைமீர்! இக்கிளியை எனக்குத்தாரும் எனக் கேட்டாள். அதற்கவர் "அம்மம்ம! இக்கிளியின் பிரபாவத்தைச் சொல்லுகின்றேன், கேட்பாயாக. இந்தக்கிளி அன்றொருநாள் வில்லிபுத்தூரர் என்னும் புலவரொடுவாது செய்து வெற்றி பெற்றது. மற்றொருவனொடுவாது வென்று கற்பகநாட்டுப் பாரிஜாதப்பூவை இப்பூவுலகுக் கொண்டுவந்து சேர்த்தது. பிரபுடதேவராஜன் காணுமாறு ஸ்ரீஷண்முகப் பெருமானையே மயில்மீது சபையின்கண் வரும்படி செய்தது. திருவகுப்பு, கந்தாலங்காரம் முதலியநூல்களும் பாடியுள்ளது. பேரின்பங்கண்ட பெருங்கிளி இது. எம் பெருமான்மீது "முத்தித்தரு" முதலான பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாடல்கள் சந்த இன்பம் பொலிந்திலங்கப்பாடியுள்ளது. அட்டசித்தியும் கையாண்டுள்ளது. சிற்றின்ப உறவே அற்றுள்ளது. நம்மைக் கண் எடுத்தும் பாராது. பேரின்ப நிலையிலேயே இறைவனது அநுபூதியைப் பெற்று மகிழ்ந்திருக்கின்றது. ஏனைய கிளிகளைப்போல இது கைவசப்படாது" என்று சொல்லி அப்பெதும்பையை அப்புறங்கொண்டு சென்றார்.]

(தணிகை யுலா பெதும்பைப் பருவம்)

**தீருப்புகழ் நூலின் நடையழகும் சந்தப் பொலிவும்.**

நூற்றுக்கு மேற்பட்ட சந்தவகைகளால் விளங்குந் திருப்புகழின் நடையழகும், சந்தப் பொலிவும், நவரசமும் எடுத்து எழுத ஏடுகொள்ளாது. இத்துணைச் சிறப்புடன் வெகு

எளிதில் பொருளும் அறிந்து கொள்ளும்படி எல்லா இலக்கணங்களுடனும் அவர் வாக்கு அமைந்திருப்பது பற்றியன்றோ சிறப்பாகக் கனிவு, தாக்கு, நோக்கு, நயம், உறுதி என ஒன்றோடு நில்லாது, பொதுவாக "வாக்கிற் கருணகிரி" என்று முதற்படச் சுருங்கவுரைத்து அம்மட்டோடு நின்றனர். ஆயினும் இவர் வாக்கின் நடையழகுக்கு இரண்டொரு உதாரணம் இங்குக் காட்டுவோம். வள்ளிநாயகியாரின் அமளியின்பத்தைப் பெறுவோனே எனக் கூறவேண்டிய இடத்துப் பின்வருமாறு கூறுகின்றனர்.

குயில் மொழிக் கயல்விழித் துகிரிதழச் சிலைநுதற்
சசிமுகத் திளநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவினைப்
புணர்வோனே!

[குயில்போன்ற மொழியையும், கயல் (மீன்) போன்ற கண்களையும், பவளம்போன்ற அதரத்தையும், வில்போன்ற நெற்றியையும், சந்திரன்போன்ற முகத்தையும், புன்னகையையும், மேகம்போன்ற கூந்தலையும், மலைபோன்ற தனங்களையும், கொடி போன்ற இடையையும், பெண்யானைபோன்ற நடையையும் கொண்ட குறமகளாகிய வள்ளியம்மையைப் புணர்வோனே!] இத்துணைப் பொருளையடக்கி இவ்வளவு சுருக்கமாகக்கூறுவது வரகவிகளுக்கே அமையக்கூடிய ஓரிலக்கணம்.

இதுபோலவே "கொச்சை மொழிச்சி கறுத்த விழிச்சி சிறுத்த இடைச்சி பெருத்த தனத்தி குறத்தி தனக்கு மனப்ரியமுற்றிடு குமரேசா" என்ற இடத்துங் காண்க.

இவர்வாக்கில் தமிழ்ச்சொற்கள் எவ்வளவு சாதாரணமாகப் பிரயோகஞ்செய்யப்பட்டிருக்கின்றனவோ அவ்வளவு சாதாரணமாக வடமொழிச்சொற்களும் பிரயோகஞ் செய்யப்பட்டுள்ளன. இதனைத் திருப்புகழில் பல இடங்களில் அங்கும்இங்கும் காணலாம். "நிராமய புராதன" எனத் துவக்கும் விராலிமலைத் திருப்புகழிலும் காண்லாகும். இவர்காலம் மகமதியர் அரசாண்டிருந்த காலமாதலின் "சலாம்," "சபாசு" "ராவுத்தன்" முதலிய ஹிந்துஸ்தானி மொழிகளும் இவர் நூலிலேறியுள்ளன. சந்த நூல் எனப்பாடும் வகைக்கே நமது சுவாமிகளது திருப்புகழ் பெரிய இலக்கியமாக அமைந்துள்ளது. இங்ஙனம் பாடும் சந்தப்பாவை வண்ணப்பா எனவுங் கூறுவர். வல்லெழுத்து வந்த இடத்து வல்லெழுத்தே வரவேண்டும், மெல்லெழுத்து வந்த இடத்து மெல்லெழுத்தே வரவேண்டும், நெட்டெழுத்து வந்த இடத்து நெட்டெழுத்தும், குற்றெழுத்து வந்த இடத்துக் குற்றெழுத்தும் வரவேண்டும். இன்னும் உள இலக்கணமெல்லாம் வண்ண இலக்கண நூல்களிற் காணலாகும்.

'அருணகிரி நாதர் பதினாறு யிரமென்
றுரைசெய் திருப்புகழை ஓதீர்—பரகதிக்கஃ
தேணியருட் கடலுக்கேற்ற மனத்தளர்ச்சிக்
காணி பிறவிக் கரம்'

திருப்புகழ் பிரபந்தத்தின் பெருமை

[அருணகிரி நாதர் அருளிய திருப்புகழை ஓதுங்கள். அது பரகதியை அடைதற்கு ஏணி போலவும், அருளாகிய கடலில் திளைத்து விளையாட ஏற்றம் போலவும், மனத்தளர்ச்சியை நீக்க ஆணிபோலவும், பிறவியை அறுத்தெறிய அரம் போலவும் உதவும்].

என்னுந் தனிப்பாடலே இந்நூலின் பெருமையை நன்கு விளக்கும். இத்துணைப் பெருமைவாய்ந்த இந்நூலை அச்சிட்டு வெளியிட வேண்டும், அதை அன்பர்கள் பாராயணஞ் செய்து நற்கதியை யடையவேண்டும் என்னுங் கருத்தே கருத்தாகக் கொண்டு திருப்புகழ் ஓலைப்புத்தகங்கள் உள்ள இடமெல்லாந் தேடித் தேடி, பாடல்கள் சேகரஞ்செய்து ஓர் ஆயிரத்து இருநூறு பாடல்களை இரண்டு பாகமாக அச்சிட்டு உலகுக்கு அளித்தவராகிய எனது அருமைத் தந்தையாகிய சுப்பிரமணிய பிள்ளை சில மாதங்களுக்கு முன்புதான் (17-4-1909) காலஞ் சென்றனர். அதுவும் நந்தம் பாவமே!

சுவாமிகள் அருளிய ஏனைய பாசுரங்கள் செல்லேறிச் சிதைவுபடுமுன் அச்சுக்கு வருமாறு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் திருவருள் கூடுவதாக!

உ

வேலுமயிலுந்துணை

## 2. முருகர் துதி

ஸ்ரீமான்-திருவெண்காடு சுவேதாரண்ணிய
சாஸ்திரியார் பி. ஏ., எல் டி.

அருள்வாய்ந்த திருநோக்கின்
ஆநந்த மயிலூரும்
இறையாறு முகத்தோயை
ஈராறு கரத்தோயை
யுவந்தேத்த வுறுஞ்செல்வ

ஊழ்புன்கண் அஃதின்றூ
மெய்யாமை திரிபையம்
ஏழார்ந்த பரியென்றாழ்
ஐயார்ந்த விரிசோதி
ஒளிகாண விருண்மாய்ந்தாங்

கோங்காரத் தோங்குண்மை
ஔதார்ய சீலவென்
றஃகாவுள் ளன்போடு
கறைக்கண்டன் கட்டோன்றுங்
காங்கேய அங்கேயும்

கிளர்ஞாண லனல்காத்தோய்
கீழான வாராமே
குறைதீர்க்குங் குமராகேள்
கூழானே மலியுள்ளம்
கெடனன்றே வுயர்கந்த

கேட்டார்க்குக் கழல்காட்டிக்
கைவல்ய வழிகாட்டிக்
கொண்டாளுங் குறிஞ்சிக்கோ
கோவாய்ந்த நலஞ்சான்ற
கௌடங்கொள் வைதர்ப்பங்

கஃறெய விழுநீரின்
ஙனம்வெம்மை பரன்மைந்த
சந்தங்கொள் தமிழ்கூடற்
சார்பாற்றென் பரங்குன்றிற்
சிறப்பீயும் விழுச்செல்வ

சீர்மிக்க குகைவாழுஞ்
சுடரொத்த கிளர்மேனி
சூரன்றன் றலைகொய்த
செவ்வேணல் அயில்வேல
சேவன்மன் சேநாநீ

சையந்தோ றையாவின்
சொல்லார்ந்த மறைகொண்டு
சோபான முறைகாட்டிச்
சௌந்தர்ய பரங்காணும்
ஞயஞ்செய்யுங் குகனேநல்

ஞானத்தின் பயனெய்த
ஞிமிறுற்ற புழுவேபோன்
ஞெண்டார்ந்த கடற்செந்தில்
ஞேயத்தி னுண்டாய்மன்
தக்கோர்சொல் முடிபோராத்

தாழ்புன்மைத் தமியேனைத்
திருநோக்குக் குரியேனாத்
தீங்கன்ன லமுதுண்ணத்
துறந்தார்தம் முள்ளத்துத்
தூயோய்நின் கழல்போற்றித்

தெருண்டார்க்குப் பேரின்பம்
தேடார்க்கி யாதுண்டாம்
தைமாசி பனிமாதம்
தொகுவெம்மை யருங்கோடை
தோன்றாது தவநோலத்

தௌவையென் னிருண்மாயை
நவைநீங்கி நலனார்ந்து
நாள்கொண்ட நறுமுல்லை
நிறைகொண்ட மலர்க்கொன்றை
நீர்கொண்ட செங்கமலம்

நுனிகொண்ட அறுகர்க்கம்
நூறூன அடிசெல்லும்
நெறித்தும்பை மிகத்தூவி
நேராக நன்னெஞ்சி
னைந்துற்ற மெய்யன்பர்

நொச்சிப்புல் லூமத்தை
நோற்பார்க்குக் காப்போய்கேள்

னெளவாகும் பிறப்புக்கால்
பழனஞ்சேர் பழனிக்கண்
பாட்டோவாப் பெருங்கோயிற்
பிறங்கல்வாழ் பெருமானைப்
பீடார்ந்த மறைகொண்டு
புளகிப்ப வுளஞ் சோர்ந்து
பூப்பாதம் மிகப்போற்றிப்
பெம்மானை வாயாரப்
பேசாத வாநந்தம்
பைங்கானன் முதிர்சோலைப்
பொன்மேனிப் பெருவாழ்வைப்
போற்றாத நாவென்னே
பௌமன்னாள் பரிவாலே
மஃறோ வஃதேயாம்
மறைமூன்றி னடுவாரும்
மாதேவன் மகிழ்மைந்த
மிசையூணின் மயமாக
மீக்கூறு மிக்காயம்
முறையாலே நெறியெய்த
மூவாத பேரின்பம்
மெய்ச்சான்ற நலனெய்தி
மேலோய்நின் கழலேத்த
மைக்கண்ட னருட்செல்வ
மொழியோர்ந்து வழிநின்று
மோதங்கொள் சிறப்பார
மௌனத்துப் பயில்நல்லோர்
மஃகானீ றெழுத்தோர
யமபாச மிலைநன்றாய்
யாராலே நசிகேதன்
யுகாலை யெளிதாக
யூகிததோர் பொருள்பெற்றான்
யோகர்க்குண் மணியாகி
யௌவனத் தின்புற்றான்
வள்ளிக்கு மணவாள
வான்றெய்வ யானைக்கோ
விறல்கொண்டு திறனுற்ற
வீரர்க்கு வீராங்கள்
வெறும்புன்மை நாயேனை
வேதத்தின் ஒளிர்செல்வ
வைவேல இனிதாள்வாய்
வெளவர்யுண் முருகோனே.

## 3. என்னிழல்

ஸ்ரீமான்-பண்டித வெங்கிடரமணையர்
கோயமுத்தூர் காலேஜ்

[ஐப்பசி மாதத்திய விஹாரிணியில் "பிள்ளைத்தமிழ்" எழுதிய இப்பண்டிதர் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து இச்சிறு கவிதையை நமக்கனுப்பியதில் நாம் அதை வெகு சந்தோஷத்துடன் பிரசுரிக்கிறோம். நடை விஷயத்தில் ஏதாகிலுமபிப்பிராய பேத மிருந்தாலும் பிள்ளைத்தமிழுக்குரிய சாரத்து இதில் வெகு எடுப்பாகக் காணுகிறதென்பது கவிதையின் சாரமறிந்த யாருக்கும் புலப்படும்.]

பத்திராதிபர்.

எனக்கொரு சிறு நிழலிருக்கிறது—அது
எங்கிலும் என்னொடு தொடர்கிறது—அதில்
என்ன பிரயோஜனமோ அறியேன்; எனை
அடிமுடி முழுது மொத்திருக்கிறது;
என்னது மெத்தையில் நான் குதிக்கையிலிது
எனக்கு முன்தானுங் குதிக்கிறதே!

இளையவர் விளையாட்டி வனறியான்; எனை
எவ்விதத்திலும் பித்துச்செய்யுகிறான்; இவன்
இத்தனை பயங்கொளியென்ப திடைவிடா
தெனை யொட்டியிருப்பதில் நீயறிவாய்; [யை
எனையிவன் பிடித்திருப்பது போலென் தாதி
எப்போதுந் தொடர வெட்கப்படுவேன்.

எல்லாக் குழந்தையும் மெதுவாய் வளர்ந்திடும்,
இவன் வளருவதி லோராச்சரியம்;
என்னெனில் ரப்பர் பந்தொத்தெழுகிறான்,
எவரு மறியாவிதம் சுருங்குகிறான்.

ஒருநாள் சூரியனுதிக்குமுன் நேரத்தில்
ஓசைப்படா தெழுந்தோடிச் சென்றே,
மருமலர் தனிலொளிர் பனிபார்க்கையில் நிழல்
மடியொடு படுக்கையிலுறங்கிக்கொண்டேஅது,
வரவிலை தூங்குமூஞ்சி யெழவில்லையே!



ஸ்ரீ கபீர்தாஸ் சுவாமிகள்

## சாரித்திரகாண்டம்

### 1. ஸ்ரீ கபீர்தாஸ சுவாமிகள்

"நன்றாய்ப் புஷ்பித்திருக்கும் மரத்திலிருந்து வாசனை யெப்படி வெகுதூரம் வீசுகிறதோ, அதுபோல புண்ணிய கருமத்தின் வாசனையும் வெகுதூரம் வீசுகிறது"—நாராயண உபநிஷத்.

சென்ற மாதத்தில் ஸ்ரீ விசுவாமித்திர மகாரிஷி இப்பாரத வருஷத்திற்கு மதவிஷயத்தில் உண்டாக்கிய ஒற்றுமையையும், செய்த பேருதவியையும் விவரித்தோம். ஆனால் வைதிக முறைப்படி முதலில் பிரபலித்திருந்த யாகாதி கருமங்களும், பின்னேற்பட்ட ஞானமார்க்கமும் சாமான்னியர்களுக் கேற்றதாயிருக்கவில்லை. கரும மார்க்கம் பணக்காரர்களுக்கும், ஞானமார்க்கம் சூட்சும புத்தியுள்ளவர்களுக்குமே ஏற்றனவாயிருந்தபடியால், இந்துஸ்தானத்தில் ஏழைகளாகிய பெரும்பாலர்க்கு இம்மார்க்கங்கள் உதவவேயில்லை. இதை மூலகாரணமாகக்கொண்டு காலக்கிரமத்தில் பக்தி மார்க்கம் ஏற்பட்டது. இதற்கு ஸ்ரீ ராமாயணமும், பாகவதமும் ஆதாரங்களாகி, ஸ்ரீ ராமனும், ஸ்ரீ கிருஷணனும் உபாசனைக்கு முக்கிய மூர்த்திகளானார்கள்.

ஏதோ ஒருவிதமாக இந்த மார்க்கம் இந்துஸ்தானத்திலும், திராவிட நாட்டிலும் சிற்சில விடங்களில் பிரபலப்பட்டு வந்துக்கொண்டிருக்கையில், பத்தாவது நூற்றாண்டு, என்றால், சுமார் ஆயிரம் வருஷத்திற்குமுன் இந்தியாவுக்கு மகம்மதியர் வரத்தொடங்கினார்கள். வந்து மூந்நூறு வருஷங்களுக்குள் இவர்களுடைய துரைத்தனமும் மதமும் இந்தியாவிலெங்கும் பெருகி இந்திய மகமதியர் கோடிக்கணக்காகப் பிரபலித்தார்கள்.

இதற்கு நம்மவர் ஒரேகாரணந்தான் சொல்லுவது. அதாவது, மகம்மதியர் சென்றவிடமெல்லாம் கத்தியுங் கையுமாகப்போய், எதிர்ப்பட்டவரை யெல்லாம், 'குரானை யொப்புக் கொள்ளுகிறீர்களா? கத்திக் கிரையாகிறீர்களா?' என்று பலவந்தமாய்த் தங்கள் மதத்தைப் பரவச் செய்ததாக நம்புவது. இது பலவினும் மோசமான தப்பெண்ணம். வாஸ்தவமென்னவெனில், தற்காலத்தில் நடப்பதுபோலவே, முற்காலத்திலும் நமது தேசத்தில் 'இழிகுலத்தோர்' என்று நாம் ஒதுக்கிவைத்திருக்கும் ஜனங்களுக்கு, மகம்மதீயரும் அந்த மதமும் வெகு உபகாரிகளாகி, நமது தேசத்தவர் தாமாகவே வெகு சந்தோஷத்துடன் அம்மதத்தைக் கைப்பற்றினார்கள். அப்படிச் செய்த்தில் அனேகருக்கு இவ்வுலகிலும் பதவியுயர்ந்தது. மறுவுலகிலும் நல்ல பதவி கிடைப்பதாக உறுதிமொழி கிடைத்தது. இது நிற்க.

மகம்மதீயர் பக்தி மார்க்கத்தையே கைப்பற்றியவர். ஆதலால் அவர்கள் இங்கு வந்ததும் இம்மார்க்கத்திற்கு முந்தியிருந்ததைவிடப் பிராபல்லியம் அதிகமாயிற்று. நாம் மேற்சொல்லியபடி இந்துக்களிலும், மகம்மதீயராகிப்போன நம்மவர்களிலும், பெரும்பாலார் "இழிகுலத்தவர்" ஆதலாலும், பக்தி மார்க்கத்திற்கு க்ஷேத்திர யாத்திரை, தீர்த்தயாத்திரை, பிரமோற்சவம் முதலிய லக்ஷணங்கள் இந்துக்களுக்கும், அவைபோன்ற வேறு ஆசாரங்கள் மகம்மதீயருக்குமிருந்ததனாலும், இச்சந்தர்ப்பங்களில் முரடான இருதிறத்தாருக்கும் விரோதமும், கலகமும் அதிகரித்து வந்தது.

சுமார் இருநூறு வருஷங்களுக்கதிகமாகவே இக்கலகங்களால் இருதிறத்தாரும் கஷ்டப்பட்டு, உயிரையும் பொருளையும் இழந்து உபத்திரவமடைந்தபின், இருதிறத்தாரிலும் விவேகிகள் இந்த விரோதத்திற்குக் காரணத்தை ஆலோசிக்கலானார்கள். ஆகவே ஈசுவரனொருவனென்றும், தெய்வ விஷயமாய்ச் சண்டை செய்தல் அக்கிரமமென்றும் பட்டது. இந்தரகசியத்தைச் சுமார் 1400௵ முதல் 1600௵

வரை இந்துக்களிலும், மகம்மதியர்களிலும் அனேக பாகவத சிரோமணிகள் ஜனங்களுக்குச் சங்கீர்த்தன மூலமாக வுபதேசித்துவந்தார்கள்.

இவர்களுக்குள் நடுநாயகமாக விளங்குபவர் ஸ்ரீ கபீர்தாஸ சுவாமியாம். தமிழ் நாட்டில் இவரைப்பற்றிப் பேசுபவர்கள், அனேகமாய் 'ஹரிகதை' செய்யும் சிலபாகவதர்களே. ஹரிகதை செய்பவர்களுக்குச் சாரித்திர ஞானம் விசேஷமாயில்லை யாதலால், சுவாமிகளைப்பற்றிச் சொல்ல வேண்டிய சங்கதிகளை விட்டு, ஏதோபொழுது போக்காக வேண்டாப்பேச்சுகளைப் பேசுவது சகஜமாகிவிட்டது.

கபீர்சுவாமி சுமார் ஐந்நூறு வருஷத்திற்கு முன், கி. பி. 1440௵ ஸ்ரீகாசி நாட்டில் பேல்ஹாரா வென்னுமிடத்திற் பிறந்தார். இப்படிக் குறித்த காலமும் தேசமும், பத்திரங்கள் மூலமாய் ஏற்படா விட்டாலும், சுவாமிகளுடைய சிஷ்யர்களுக்குள் இது பரம்பரையாக வழங்கி வருவதால், அதை நாமும் கிரகித்துக் கொள்ளுகிறோம். சுவாமிகள் பிறந்தாரென்றுமட்டும் சொல்லவேண்டுமே யொழிய, இன்னார் தகப்பனார், இன்னார் தாயார், இன்ன குலம், இன்ன கோத்திரமென்பதொன்றும் நமக்குத் தெரியாது.

எந்த நாட்டிலும் இம்மாதிரி அவதார புருஷர்களுக்கு ஜனனமரண விஷயங்களிலும், ஜீவதசையில் நடக்கும் வேறு அநேக காரியங்களிலும் அதிசயமாக ஏதாகிலும் மகிமைகள் சொல்லிக்கொள்வது சகஜம். ஆதலால், கபீர் சுவாமிகள் விஷயத்திலும் இவ்வாறு கதைகள் பிறந்திருப்பது விசித்திரமன்று. சுவாமிகளுக்குத் தாயாராகிய ஒரு பிராம்மணப்பெண், விதவையாகிய பிறகு, தன் தகப்பனருடன் ஸ்ரீராமானந்த சுவாமிகளைச் சேவிக்கப் போனதாகவும், சுவாமிகள் அந்த அம்மாளைப் புத்திரவதியாகும்படி ஆசீர்வதித்ததாகவும் பிறகு சங்கதி தெரிந்து விசாரப்பட்டுத் தான் சொல்லியது பிசகாதாதலால், குழந்தை பிறந்துதான் தீரவேண்டுமென்றும், ஆனால் அது மற்ற குழந்தைகளைப்போலல்லாமல், தன் மாதாவின் கையிலிருந்து பிறக்குமென்றும் சொன்னதாகவும், அப்படியே கைத்தலத்திற் பிறந்ததனால் குழந்தைக்குக் 'கரவீரன்,' என்னும் 'கபீர்' என்ற திரிபுப்பெயர் கிடைத்ததாகவும் புராணம் ஏற்பட்டிருக்கிறது.

குழந்தை பிறந்ததும் தேவதுந்துபிகள் முழங்கின. வேறு நற்குறிகளனேகம் உண்டாயின. என்றாலும் குழந்தையின் தாய்க்குமட்டும் ஏதோ காரணத்தினால் விசாரமுண்டாகி அதை யாருங்காணாமல் தாமரையிலைமேல் விட்டுவிடச் சற்றுநேரங் கழித்து அவ்வழியிற் போய்க்கொண்டிருந்த மகம்மதீயச்சாலியனாகிய 'நீரூ'வும் அவர்மனைவி 'நீமா'வும் கண்டெடுத்துப் போய் வெகுஆதரவுடன் வளர்த்தார்கள். ஆகவே சுவாமிகளைப் பிறப்பில் மகம்மதீயராகவும், தொழில் நெசவென்றும் சாமான்னியமாய்ச் சொல்லுவது. இவர் பெரிய பாகவத சிரோமணியாகிச் சிஷ்யர்கள் எங்குமுண்டாகி விளங்குகையில் இவர் வாக்கிலிருந்து வந்த சுலோகங்களில் சாதாரணமாக நெசவுத் தொழிலிலிருந்து உவமைக்காக வந்திருக்கும் சங்கதிகளையும், ஒரு சந்தர்ப்பத்தில் இவரே, "நான் ஜன்மாந்தரத்தில் பிராம்மணன், ஸ்ரீ ராமனிடத்தில் பக்தி குறைந்ததால், இப்படி மகம்மதீய நெசவுக்காரனாக வுதித்தேன்," என்று சொல்லியிருப்பதையுங் கவனித்தால், இது நிஜமாயிருந்தாலும் இருக்கலாமென்று காணுகிறது.

ஆனால் இதைப்பற்றி வாதாடுவது வீண். அவதார புருஷர்களுக்குப் பிறப்பினாலுள்ள மகிமை மகிமையேயல்ல. நதிமூலமும், ரிஷிமூலமுங்கண்டு நமக்காக வேண்டியதொன்றுமில்லை. கபீர் சுவாமிகளுடைய சிஷ்யர்கள் இந்துக்கள், மகம்மதீயர் இருதிறத்தாருமே. ஆனால்

அவர்கள் சுவாமிகளுடைய உட்கருத்தை யாராய்வதற்கு யோக்கியதை யில்லாததால் இம்மாதிரிச் சில்லரை விஷயங்களை வியவகரித்து வந்திருக்கிறார்கள். நமக்கோ அதைப்பற்றி ஒரு விசாரமுமில்லை. கபீர்சுவாமி இந்துவானாலும், மகம்மதியரானாலும், அவர் உயர் குலத்தோராயினும், இழிகுலத்தோராயினும், பெரிய பாகவதரென்பது பிரத்தியக்ஷம். அவரது உபதேசம் எக்காலத்திலும் சிரமேற் கொள்ளவேண்டுவது. ஆதலால் பிறப்பையும் வளர்ப்பையும் நாம் விசாரித்தடையவேண்டிய பலனொன்றுமில்லை.

குழந்தைக்குப் பெயரிடவேண்டிய காலம் வந்ததும், நீரூவும் அவர் மனைவி நீமாவும் ஒரு காஜியை வரவழைத்துக் குரான் என்னும் வேத புஸ்தகத்தை வழக்கப்படி கயிறு போட்டுத் திறந்துபார்க்க, அதில் காஜி கண்ணுக்குச் சர்வேசுவரனுக்கு அவ்வேதத்தில் காணும் பெயர்களிலொன்றாகிய 'கபீர்' என்னும் பெயர் கண்டது. உடனே அவர் சிந்தாக்கிராந்தராகி நகத்தைக் கடித்தார். "இந்தச் சாலியப் பயலுக்கு இத்தனை வரிசையான பெயரா? நாய்க்கு முத்துமாலையென்று பெயரிடுபவர் யார்"? என்று அவர் மறுபடியும் புஸ்தகத்தை யிருமுறை பரீக்ஷித்துப் பார்த்தார். அந்தப் பெயரே தான் கிடைத்தது. ஆதலால் இந்தக் குழந்தை யேதோ விபரீதத்திற்காகப் பிறந்ததென்று எண்ணி நீரூவை நோக்கி, "நீர் இக்குழந்தையைக் கொன்றுவிடும்," என்று சொல்லிவிட்டுக் காஜி வீடுபோய்ச் சேர்ந்தார்.

அவரை யனுப்பிவிட்டு நீரூ வந்து குழந்தையை யெடுத்து உள்ளறைக்குட் சென்று காஜி யபிப்பிராயப்படி அதைக் கொல்லுவதற்காகப் போகவே அதுவாயைத் திறந்து, "நான் அனாதி. மாயை எல்லோரையும் மயக்கியிருக்கிறது. என்னை யறிந்தவரில்லை. நான் பெண் வயிற்றில் ஜனிக்கவேயில்லை. நான் பூமியுமல்ல, ஆகாசமுமல்ல, நான் ஞானமயன். எனக்குத்தோல், எலும்பு, ரத்தம் முதலியன இல்லை. பிறருக்குச் சப்தத்தை (உண்மையை) வெளியிட வந்திருக்கிறேன். இதுதான் கபீர் சொல்லுவது," என்று கூவிற்றாம். உடனே நீரூவுக்குப் பயமுண்டாகி அக்காரியத்தைவிட்டுப் பழையப்படி யிருந்தார்.

இந்தக்கதையைக் கேட்பவர்களுக்கு ஸ்ரீகிருஷ்ணன் தேவகி வயிற்றில் பிறந்ததும், கம்ஸன் அவரைக் கொல்லப் பிரயத்தனப்பட்டதும், அது வியர்த்தமாகியதும், ஞாபகத்திற்கு வரும். இம்மாதிரிக் கதைகளெல்லாம் ஒரேபோக்காகத்தான் போவது. இப்படி நடந்தது வாஸ்தவமானால், நீரூவுக்கு ஏதோ நல்ல காலத்தினால் கொல்லப் போகுந்தருணத்தில் மனமிறங்கிப் பின் வாங்கி விட்டாரென்பதில் தோஷஞ் சிறிதுமில்லை.

வாலிபராகி விளையாடுவதில் கபீர் சுவாமி தனது கூட்டாளிகளான மகம்மதியர், பிராம்மணப்பிள்ளைகளிருதிறதாருக்கும் விரோதியானார். ஏனெனில் எப்பொழுதாவது 'ராம், ராம்' என்றால், மகம்மதியச்சிறுவர் இவரைப்பாஷண்டியென்று வெறுப்பார்கள். நெற்றியில் ரத்தசந்தனம் தரித்துப் பூணூலுடன் வந்தால் பிராம்மணப்பிள்ளைகள் திட்டுவார்கள். அதற்கு உத்தரமாக அவர், "ஓ பிராம்மணர்களே! என்னுடைய நாவில் விஷ்ணு கூத்தாடுகிறார். கண்களில் நாராயணனிருக்கிறார். இருதயத்தில் கோவிந்தனிருக்கிறார். சாலியனானதலால் நான் பூணூல் தரித்திருக்கிறேன். நீங்கள் காயத்திரியை மொணகுகிறீர்கள். கோவிந்தனோ என்னிருதயத்தில் குடிகொண்டிருக்கிறார். நான் ஆடும், நீங்கள் இடையருமாக, நீங்கள் உங்கள் தருமத்தை யனுசரித்து ஆடுகளை ரக்ஷிப்பதற்கு மாறாக, இவ்வுலகத்திய பிரபுக்களை வழிபடுகிறீர்கள். நானோ ஹரியை வழிபடுகிறேன்" என்று பதிலுரைப்பார்,

கொஞ்சகாலமாக இவர் மதவிஷயமாய்ப் பேசிவருவதைக் கேட்டயாரும், உமக்கு உபதேசம் செய்தவர் யாரென்று கேட்க அதற்குப்பதில் சொல்லமுடியாமல், சற்குருவைத்தேடியிருக்கையில், அந்தப் பிராந்தத்தில் பாகவதராகியும், குணசீலராகியுமிருந்த ஸ்ரீ ராமானந்த சுவாமிகளுடைய பிரபாவத்தைக் கேட்டு மகிழ்ந்து, அவரிடம் உபதேசம் பெறலாமென்றிருந்தார். ஆனல் அவர் மகம்மதீயனுக்கு, அதிலும் சாலியனுக்கு, உபதேசஞ் செய்யமாட்டாரென்று பயந்து, ஒருநாள் விடியற்காலத்தில் கங்கைப்படியில் அவர் இறங்குமிடத்தில் படுத்திருக்க, அவரும் இருட்டில் கண்தெரியாமல் இவர் முதுகிற் கால்வைத்து, உடனே தெரிந்துகொண்டு "ராம், ராம்" என்ஞராம். கபீரும் எழுந்து சுவாமிகளைத் தொழுது தாங்கள் எனக்கு ராம மந்திர முபதேசித்ததால் என்னைச் சிஷ்யகோடிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ஞர். அவரும் அப்படியேயென்று சொல்லிவிட, அதையறிந்து அவர் சிஷ்யஜனங்களிலனேகர் அவரிடம் வந்து மகம்மதீயச் சாலியனைத் தாங்கள் சிஷ்யனுக்கிக் கொண்டது வாஸ்தவமா, என்று கேட்டார்கள். அவர் நடந்ததைச்சொல்லி, யாராகிலும் குணவந்தர்களாயும், பக்தர்களாயுமிருந்தால் அவர்களெல்லோரும் சருவேசுவரனது அருளுக்கு யோக்கியர்களென்ஞராம். இக்காலத்தில் எத்தனைபெயர் மடாதிபதிகள் இவ்வாறு துணிந்து சொல்பவர்கள்? உபதேசமான பிறகு வெகுகாலம் கபீர் சுவாமிகள் தன் நெசவுத் தொழிலையும் பார்த்துக்கொண்டு சுவாமிகளிடத்தில் வாதம்செய்யவரும் பண்டிதர்களுக்கெல்லாம் பிரதிவாதி பயங்கரராகிப் பாகவதர்களுக்கு ஆராதனம் செய்துகொண்டு காலங்கழித்து வந்தார். (இன்னும் வரும்)

## 2. சரித்திரப்பயன்

### ஸ்ரீமான்-எஸ். பட்டாபிராமய்யர் அவர்கள்

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் (குறள்.)

இக்காலத்தில் நமது தேசமாகிய இப்பரத கண்டம் க்ஷீணதசை யடைந்திருக்கிறதென்பது யாரும் அறிந்த விஷயம். இக்கஷ்டதசையிலிருந்து சீக்கிரம் விமோசனம் வேண்டுமென்பது ஒவ்வொரு பாரதவாசியின் விருப்பமாகுமென்தற்கு ஐயமில்லை. இத்துன்ப நிவர்த்தியடையும் மார்க்கமெதென்று ஆராய்வது நமது கடமை. அவ்வாறு ஆராய்ந்து நாம் தெளிவதென்னவெனின், இப்பொழுது மிக உன்னத தசையடைந்து உலகமெங்கும் வியாபிக்கும் ஐரோப்பிய கண்டத்தாரும், மிக்க செல்வம் நிறைந்த அமெரிக்கா கண்டத்து ஐக்கிய மாகாணத்தாரும், பராக்கிரமசாலிகளான ஜப்பானியரும், வெகுவாய்ப் பயின்று விசேஷத் தேர்ச்சிபெற்று, அதிகமாய்க் கொண்டாடிவரும் தங்கள் தங்கள் சுவதேச ராஜராஜாங்க சரித்திரங்களை நாம் படிக்காததனுல் உண்டாகும் சிரத்தைக் குறைவேயாம். அஃதெங்ஙனமெனின், ஸ்வதேச சரித்திர ஞானமில்லாததினுல் நமது ஹிருதயங்களில் தேசபக்தி விளைவதில்லை யென்றும், நாம் வாழும் இப்பூர்வீக நாட்டை ரக்ஷிப்பதில் ஊக்கமற்றவர்களாகிருே மென்றும், அதனுல் விளையும் துன்பங்கள் எண்ணிறந்தவை யென்பதும் இக்காலத்திய நம்மிந்திய தேசபக்த சிரேஷ்டர்களின் அபிப்பிராயம்.

சரித்திர மென்பதற்குப் பொருள் நல்ல பெயர் என்று ஒருவாறு கொள்ளலாம். எப்படி ஒரு புருஷனுக்கு நன்னடக்கையால் நல்ல பெயருண்டாகிறதோ, அப்படியே ஒவ்வொரு ஜாதியார், நாட்டார்களின் நடக்கையால் அவரவர்களின் குண விசேஷங்களறியப்படும். இவ்வறிவால் உண்டாகும் நன்மைகள் பல. தம்

முன்னோர்களின் சரித்திரப் பெருமையே தாம் பெருமையடைவதற்குத் தூண்டுகோல். அவரது மகிமையான குணங்களின் சிந்தனையே ஊக்கத்துக்குக் காரணம். ஊக்கத்தாலுண்டாகும் முயற்சியே போன பாக்கியங்களை அழைப்பிக்கும் ஓர் மந்திரக் கோலாம்.

இவ்வர்த்தத்தை விளக்குவதற்கு நமது நாட்டில் பல சிறந்த சாக்ஷியங்களுண்டு. ராஜபுத்திரரென்று இந்துஸ்தானத்திலிருக்கும் ஜனங்களையும் அவர்களுடைய தலைவர்களையும் கொண்டு தைரியம், சௌரியம் முதலிய குணங்களால் கிடைக்கக்கூடிய எவ்விதப் பயனையும் வேண்டியவர்கள் பெறலாம். ஏனெனில், அவர்களுக்குக் குலப்பெருமையும் குடும்பப் பெருமையும் இன்னுங் குறையவில்லை. ஏதாகிலும் காரியமாக வேண்டியிருந்தால், உதயபுரம் மகாராணாவைப் பார்த்து, "ஐயா, நீர் சூரிய வம்ச ராஜனல்லவா; இக்காரியம் உம்மாலேயே தான் ஆகவேண்டும்," என்றால் புலிப்பாலை வேண்டுமானாலும் கொண்டுவந்து கொடுக்கத் தயாராயிருப்பார். இதை யுத்தேசித்தேதான் இந்திய சரித்திரத்தில் வல்லோராகிய ஸ்ரீமான்-ஹண்டர் துரையவர்கள், "எந்த ஜாதியாருக்குப் பூர்வீக மகிமையில்லையோ, அவர்களுக்கு வருங்காலத்திலும் பெருமையில்லை", என்கிறார்.

பூர்வ ராஜ்யவிஷயத்தைப்பற்றி உண்மையாயும் பூரணமாயும் அறிவதற் குபயோகமான கதைத் தொடர்ச்சியே சரித்திர சாஸ்திரீய நிபுணர்களால் சரித்திரமென்று வழங்கி வருகிறது. அப்பேர்ப்பட்ட சரித்திரங்கள் எல்லாக் கலைகளிலும் வல்ல நமது முன்னோர்களுக்குள் ஏது காரணத்தாலோ பிரபலிக்கவில்லை. அது நமது துர்ப்பாக்கியமே!

நாம் பிள்ளைகளுக்குப் போதிக்குமவைகளில், விக்கிரமார்க்கன், போஜராஜன் இவர் போன்றவர்களின் கதைகளும், ராயர் அப்பாஜி வேடிக்கைக் கதைகளுமே சரித்திர சம்பந்தப்பட்டுள்ள காலில்லாக் கதைகளாம். இதிஹாஸ புராணங்களில் சொல்லப்பட்டவைகளோவெனில், பாரமார்த்திக, தெய்வ, வைதிக சாரித்திர விஷயங்களுக்கமையுமே யல்லாது, லௌகிக வியாவகாரிகப் பிரமாணங்களுக்கொப்பாது. அவை தரும, கரும, நீதி, பக்தி, வைராக்கிய, யோக, ஞான, வேதாந்த விஷயங்களை வெகுவாய் விஸ்தரிக்கின்றன. அவை, ராஜாங்க உற்பத்திக் கிரம நாசங்களையும், பிரஜா க்ஷேமதுக்கங்களையும், சில ரகசியார்த்தமான நீதிக்கதைகளாலும், சுருக்கமான நியாயங்களாலும், சுட்டிக் காட்டினவே பொழிய, விஸ்தாரமான உதாரணங்களால் தெளிவிக்கவில்லை. இதிஹாஸ புராண முனிகளுக்குப் பின்னிட்ட மகா புருஷர்கள், எவ்வாறு மற்ற கலைகளில் வேறு விஸ்தாரமான சுத்தக் கிரந்தங்கள் செய்தனரோ, அப்படியே நாமும் நம்மாலியன்றமட்டும் சுத்தச் சரித்திர கிரந்தங்களை காலதேசவர்த்தமான நடவடிக்கைகளையனுசரித்துச் சிறுகச் சிறுகச் செய்யத்தொடங்க வேண்டுவது நமது கடமையென்பது திண்ணம். சுத்த சரித்திரக் கிரந்தப் பயிற்சியில்லாமல் ராஜநீதிமுறைகளைத் தீர அறிவது முடியாது. ராஜநீதி முறைகளின் அறிவினால் தான் சில தற்கால தோஷ பரிஹாரங்கள் சாத்தியமாகும்.

தவிர, காலக்கிரமத்தில் நமது தேசத்தாரும் மற்ற செல்வத்துடன் வாழும் மேனாட்டார்களின் பரிகாசத்துக் கிடமான முக்கிய குறை நீங்கி அவர்களுக்குச் சமதையாவோம். அன்றேல், தற்கால உலக நிலமையையும், இக்காலத்துப் பிரபலமாயுள்ள நாட்டாரின் சரித்திர நடவடிக்கைகளையும், ஆலோசிக்குமிடத்து இந்தியர்களாகிய நாம் வெகுநாள் வாழ்வதே அரிதாகுமென்பது சரித்திர சாஸ்திரீயப் பிரமாணக்கொள்கை.

அப்படியே ஸ்ரீகிருஷ்ண பகவானும் கீதையில் சொல்லுகிறார். "மனிதன் தான் பெருமையடைவதற்கும், சிறுமை யடைவதற்கும் தானே காரணமாகிறான். தனக்கு "நெருங்கிய பந்துவும் தானே, நீங்கா வைரியுந்தானே." இதன் தாத்பரியத்தை நம்மில் விவேகிகளெல்லோரும் செம்மையாய் மனனஞ்செய்து தம்மது க்ஷேமத்தையும் தேச க்ஷேமத்தையும் அதிகரிக்க முயல்வாராக.

## 3. பூமண்டலத்திய தருமாத் மாக்கள்—அவதாரிகை

ஸ்ரீமான்-டி. எஸ். சுப்பிரமணிய அய்யர், எம், ஏ. எல்.டி.

இவ்வுலகில் எக்காரியத்திலும் எவ்விடத்திலும் சத்தியமே முடிவில் நிலைபெறுமென்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை. ஆயினும், சத்தியம் வெற்றியடைவதற்குமுன் அதற்கு அநேக ஆபத்துகளும், தொந்திரைகளும் சில காலஙகளில் உண்டாகின்றன. "நிர்வாண தேசத்தில் உடையுடையோன் பைத்தியக்காரன்" என்றபடி, அநேகமாய் எல்லாரும் ஒருவிதமான எண்ணங்களையும் கொள்கைகளையும் மேற்கொண்டிருக்கும் காலத்தில், அவைகளுக்கு மாருக எவனொருவன் ஒரு சத்தியமான வழியைத் தெரிந்தெடுத்துத் தைரியமாய்க் காட்டுகிருனே, அவனுக்குப் பெரும்பாலும் முதலில் தொந்திரைகளே உண்டாகின்றன. தத்துவத்தைக் கண்டுபிடிப்பவனுக்கு மரியாதை செய்வதற்கு மாருக, அவனை அவனுடைய இனத்தாரே பிடிக்க ஆரம்பிக்கிருர்கள். ஏனெனில், இயற்கையில் மனிதர்களுக்குப் பழைய வழக்கத்தை மாற்றுவதே மன துக்குச் சரியாய்த் தோற்றுவதில்லை. ஏனெனில்,நம்மில் பெரும்பாலார் பழைய முறைகளிலும் நோக்கங்களிலுமே பூர்ண பக்தியும் நம்பிக்கையுமுடையவர்கள். இக்காரணம்பற்றியே புதிதான நோக்கமுடையோர்களை மனிதர்களுக்கும் பிரபஞ்ச க்ஷேமத்திற்கும் விரோதிகளென்று நினைத்து அவர்களைத் தொலைத்துவிட முயல்கிருர்கள். இவ்விதமாய்ச் சத்தியத்திற்கும் தருமத்திற்குமாக வேண்டி உயிரிழந்தவர்கள் இவ்வுலகில் பலர்; சத்தியத்தைக் காப்பது வெகு கஷ்டமானது என்பதை வெளிப்படுத்த இத்தேசத்தில் வழங்கிவரும் அரிச்சந்திரன் சரித்திரத்தைவிட வேறு உருக்கமான கதை வேண்டியதில்லை. ஆயினும், இக்கதைகளெல்லாம் புராணங்களைச் சேர்ந்தவைகள். புராணங்களையோ இக்காலத்தில் விவேகிகள் சில விஷயங்களில் சாக்ஷியமாக எடுத்துக்கொள்வதில்லை. ஆதலால் சாரித்திர சாக்ஷியமாகவே விஷயங்களை வற்புறுத்தவேண்டி வருகிறது. ஆகையால் பல தேசங்களிலும் பல காலங்களிலும் மதம்,ஆசாரம், நாகரிகம் முதலிய விஷயங்களில் சத்தியத்தைக் கைக்கொண்டு அப்படிக் கைக்கொண்ட தருமத்தை நிலை நிறுத்தும்பொருட்டு உயிரையிழந்த மகா புருஷர்களின் சரித்திரத்தைத்தொடர்ச்சியாய் எழுதமுயல்வோம். ஐரோப்பிய தேசங்களெல்லாவற்றிலும், க்ரீஸ் தேசம் ஆதிகாலத்தில் புகழ்பெற்றதானபடியால், அத்தேசிய ஞானி ஒருவரைப்பற்றி இங்கு முதன் முதல் விவரித்தல் பொருந்தும்.

### ஸாக்ரடீஸ்

2000-வருஷங்களுக்கு முந்தி கிரீஸ் தேசத்தில் பெருமைபெற்று விளங்கிய மகான்களில் ஸாக்ரடீஸ் என்பவர் முக்கியஸ்தர். அக்காலத்தில் எல்லோரும் ராஜாங்க முறைகளில் தலையிட்டுத் தங்கள் நகரைச் சரிவரநடத்தித் துரைத்தன வழியிலேயே கௌரவம் சம்பாதிப்பது வழக்கம். வயல்களில் செய்யவேண்டிய உழவு முதலான வேலைகளும், கைத்தொழில், வியாபார முதலியவைகளும், அடிமைகளாற் செய்யப்பட்டுவந்தன. பணக்காரர்கள் கிராமங்களில் வாசஞ்செய்யாமல் ராஜதானியாகிய ஆதென்ஸுக்கு வந்துவிடுவார்கள். அங்கே அவர்கள் சாமான்னியர்களுடன் கலக்காமல், அவர்களை மிக்க அவமதிப்புடன் நடத்துவார்கள். ஆனல் ஸாக்ரடீஸ் அதிகமாய் ராஜாங்க விஷயங்களில் புகாமல், அத்தேசத்தவர்களின் மனதை நல்வழியில் திருப்புவதிலும், புத்தியைக் கூர்மையாக்குவதிலுமே நோக்க முடையவராய்த் தன் எண்ணத்தை அனுசரித்துச் சிறுவர்களையும் பெரியோர்களையும் கூட்டி அவர்களுக்குத் தருமோபதேசம் செய்வதையே தொழிலாகக்கொண்டார்.

2. இவர் கி. மு. 470 வருஷத்தில் பிறந்தார் என்று தோற்றுகிறது. இவர் தகப்ப



ஞர் ஒரு எளிய கல்தச்சுவேலைக்காரர். தாயார் மருத்துவச்சியாம். ஆதலால் பின்னிட்டு இவர் சிறுவர்களுக்குத் தருமோபதேசம் செய்து வருகையில், ஒரு சந்தர்ப்பத்தில் தானுந்தன் தாயாருடைய தொழிலையே மேற்கொண்டிருப்பதாகச் சொன்ஞர். அது சத்தியம். மருத்துவச்சிக்கு வயிற்றிலுள்ள குழந்தை வெளியே வருவதற்குச் சௌகரியஞ்செய்வதே தொழிலல்லது, குழந்தையைச் செய்து வைப்பதல்ல. அதுபோலத் தானும் சிறுவர்களுக்கு ஈசுவரன்கொடுத்த புத்தியை வெளிவருவதற்குள்ள சௌகரியங்களைச் செய்வதொழிய, இல்லாத புத்தியை யுண்டுசெய்ய வரவில்லை யென்பது அவர் தாற்பரியம். இந்த ரகசியம் உபாத்தியாயர் ஒவ்வொருவரு மறியவேண்டுவதாம். வேறு அனேக மகாத்துமாக்களைப்போல் இவரும் ஜீவதசை முழுதும் ஏழையாயிருந்தவர் தான் என்பது நிச்சயம்.

இவர் நண்டுபோல் புடைத்துள்ள கண்களும், சப்பை மூக்கும், விசாலமான நாசித்துவாரங்களும், தடித்துப் பருத்த உதடுகளுங்கூட்டிப் பார்வைக்குக் குரூபியாகத் தோன்றினும், மிகுந்த புத்தியுடையவர் என்பதற்கு லக்ஷணமாக இவர் நெற்றிமட்டும் அகன்று விசாலமாகக்காணும். சரீரமோ, குறுக்கே வளர்ந்து புடைத்திருந்தது. இவர் சிறுவர்கள் தேகப்பயிற்சி செய்தல், ஸ்நானம் பண்ணுதல், சம்பாஷித்தல் ஆகிய இவைகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த கொடிக் கூடங்களுக்குப் பாலியம் முதல் அடிக்கடி சென்று, தானும் அவைகளில் விசேஷமாகக் காலத்தைச் செலவழிப்பார். எவ்விடம் சென்றாலும், எல்லோருடனும் பிரியமாகவும், தாராளமாயும் பேசுவது வழக்கமாகிவிட்டது. குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள் ஆகிய எல்லோருக்கும் இவரோடு பேசுவதிலும், இவர் பேச்சைக் கேட்பதிலும் ஆசை வெகுஅதிகம். இவர் ஒருவருக்குந் தீங்கு கனவிலும் நினையார். தன் வழியில் முள்ளைப் போடுபவருக்கு புஷ்பத்தைப் பரப்புவார். எவ்வகை ஆபத்திலும் நிதானம் தவரமாட்டார். எதைபிழக்கும்படியாயிருந்தாலும், நியாயத்தையே நாடுவார். தன்னடக்கத்தையே மேன்மையாகக்கொண்டுள்ளார். பொறுமையே மனிதஉருவம் எடுத்துக்கொண்டதென்று எல்லோரும் வருணிப்பார்கள். இதற்குப் பரம்பரையாய் வரும் உதாரணமொன்றை யிவ்விடத்தில் கூறுதல் தகும். அதாவது, இவருக்கு வாழ்க்கைப்பட்ட புண்ணியவதியான ஸ்ரீமதி "ஜாந்திப்பி" என்ற அம்மாளைக் குறித்த இரண்டொரு கதைகளேயாம். ஒருமுறையிவள் இவரை வாயில் வந்தபடியெல்லாம் நொறுக்கியும், இவர் அசையாமலும், பதில் பேசாமலும், கோபக்குறியென்பது சிறிதுமில்லாமலும் புன்சிரிப்புடனிருந்ததைக் கண்டு சகியாமல், அவள் ஒரு குடத்தில் தண்ணீரை யெடுத்துவந்து இவர் தலைமேல் அபிஷேகம் செய்ய, அதைப் பார்த்திருந்த

இஷ்டர்களிற் சிலர் இவரைக் கடிந்துகொண்டார்கள். அதற்கு இவர் "மேகம் கர்ஜித்தால் கொஞ்சமாவது மழை பெய்யாமலிருப்பது லக்ஷணமல்ல" என்று மட்டும் பதில் சொன்னாராம். வேறொரு சமயத்தில் இது போல் கலகம் நடந்ததற்கு அவரை யிஷ்டர்கள் "இக்கழுதையையேன் கட்டிக்கொண்டழ வேண்டும்"? என்று கேட்டார்கள். அதற்கு அவர், "குதிரைச்சவாரி செய்ய இஷ்டமுள்ளவர் அராமிக்குதிரைகளையே தேடுவது தருமம். ஏனெனில், அதையடக்கி யாண்டால் மற்றவையைக்கொண்டு லக்ஷியமில்லை" என்றாராம். ஆசாரவியவகாரங்களிலெல்லாம் மிதமாகவே யிருந்து பழகியதினால் இவர் தனக்குள்ள சொற்பப்பணத்தைக்கொண்டே அதிருப்தி யென்பது சிறிதுமில்லாமலிருந்தார். ஒரு சமயத்தில் மாசிடோனியா மகாராஜா இவருடைய குணத்தையும்,விவேகத்தையும் அறிந்து தனது சமஸ்தானத்தில் இவரிருக்கவேண்டுமென்றும், இவருக்கு வேண்டியமட்டில் தனதானிய சம்பத்துகளைக் கொடுப்பதாகவும் சொல்லி வருந்தியழைத்ததற்கு,இவர் ஆதேன்ஸில் கோதுமைமாவு எப்போதும் மலிவாகவே விற்பதாகவும், குடிக்கத் தண்ணீர் காசு கொடாமலே கிடைப்பதாகவும், இவ்விரண்டையுந் தவிர்த்துத் தனக்கு வேறு பொருள்கள் வேண்டியதாகக் காணவில்லை யென்றும் மறுமொழி சொல்லியனுப்பிவிட்டாராம். தவிர இந்திரியங்களை யடக்குமளவிற்கு நமக்கும் மானிடத்தன்மை யொழிந்து தெய்விகம் அதிகரிக்கிறதென்றும், யாவனொருவனுக்கு இவ்வுலகத்திய பந்தம் எல்லாம் விட்டுப்போகிறதோ அவன் ஜீவன் முக்தனாகிவிடுகிறானென்றும் இவர் சித்தாந்தம்.

3. இவருடைய குணாதிசயங்கள் எல்லோரும் வியக்கத்தக்கனவாகவே யிருந்தன. இவர் உலகத்தில் சுவபாகமாக நடக்கும் சகல காரியங்களுக்கும் காரணங்கண்டு பிடிப்பதையே விரதமாகக்கொண்டு, அது விஷயமாய் யோசித்தும், தர்க்கித்தும் வந்தார். மனிதன் மிகு தியாகப் பயிலும் தீயொழுக்கங்களெல்லாம் தெரியாத்தனத்தினாலேயே உண்டாவனவென்பது இவர் முக்கிய கொள்கை. ஆகையால், எல்லோரும் புத்தியை நல்வழிபற்றி நடக்கச் செய்துகொண்டால், ஆசாரம் திருந்துவதில் கஷ்டமில்லையென்று கண்டுகொண்டு, பாலர்களின் மனதை மூடிக்கொண்டிருக்கிற அஞ்ஞானமென்ற இருளுக்கு ஒரு சூரியனாகி விளங்கி, அநேகம் தீயர்கள் நற்கதி அடைவதற்குரிய மார்க்கத்தைக் காண்பிப்பதையே தனக்கு ஜீவதசையில் ஆக வேண்டிய காரியமாகத் தீர்மானித்துக் கொண்டார். இவ் விரதமென்னும் அபாயகரமானதும், கஷ்டத்தால் நிரம்பியதுமான கடலைக்கடந்து மோக்ஷம் என்று சொல்லப்படும் அக்கரையைக்கண்டுபிடிக்க, கல்வியென்ற மரக்கலமும், வாதாடுவதில் திறமை யென்றுள்ள அனுகூலமான காற்றும், அவசியமென்றே அவருக்குப்புலப்பட்டது. இக்கல்வியை அவர் புத்தகங்களில் போய்த் தேடவில்லை. பேச்சுச் சாதுரியமடைய வேண்டித் தர்க்கம் படிக்கவுமில்லை. இவர் மாதிரியான பிரதிவாதிகளுக்குத் தர்க்கயுக்தி படித்து வருவதுமில்லை. ஆனால் தினந்தோறும் தன்னையும் மற்ற உலகத்தினரெல்லோரையும் வருத்துகின்ற விஷயங்களை ஆராய்ந்து, அவற்றிலிருந்து புத்திமான்கள் தப்பித்துக்கொள்வதையும், புத்தியீனர்கள் அவற்றிலகப்பட்டுக் கொள்வதையும் ஆலோசித்து, நல்ல வழியை அறிந்துகொள்வார். பலருடனும் சம்பாஷிப்பதினால் புத்தி கூர்மையைக்கொண்டு பேச்சுச் சாதுரியத்தைச் சுலபமாகத் தன் வசமாக்கிக்கொண்டார். இதில் இவரடைந்த சாமர்த்தியத்தை இவரைப்பற்றி எழுதியுள்ள புத்தகங்களில்காணலாம். இடமின்

மைபற்றி இவ்விடத்தில் அதை விவரித்துக் கூறல் அசாத்தியமாயிற்று.

4. மேற்சொல்லிய தீர்மானமே அவருடைய பரோபகார சிந்தையையும், தேசாபிமானத்தையும் நன்ருக எடுத்துக் காட்டுகிறதல்லவா? பிறருடைய சுகதுக்கங்களையெல்லாம் தன்னுடையதாகவே பாவித்து எல்லோருக்கும் உபகாரஞ் செய்வதிலேயே நோக்கமுடையவர். இதர ஜனங்கள் ஏதாவது தவறுதல் செய்துவிட்டால் இவர் அதைக் குறித்துப் பரிதபிப்பார். இப்படியிவர் இருந்ததற்குக் காரணமொன்றுண்டு. ஆனுலது, தான் எல்லோரையும் விட மேன்மையானவரென்ற கர்வத்தினுலுண்டாகியதல்ல. ஏனெனில், ஒருக்கால் இவரை புலகிலுள்ளோரனைவரையும் விட ஞானத்திற் சிறந்தவரென்று ஒரு தெய்வம் ஆவேசமாக வந்து கூறியதாம். அது இவருக்குத்தெரிந்ததும், "ஓகோ, இதென்ன அற்புதம். எனக்குள்ள முட்டாள்தனம் எனக்கு நன்ருகத் தெரிந்திருக்கத் தெய்வமிவ்வாறு சொல்லியதற்குக் கருத்தென்னவென்று தெரிதல்வேண்டும்," என்று அன்றுமுதல் தனக்கு எதிர்ப்பட்டு வந்தவரை யெல்லாம் பல விஷயங்களில் ஆக்ஷேபித்து வாதம் செய்ததில், முட்டாள்தனத்தில் அவர்களும் தானும் சமதையாகவே யிருக்கத் தனக்கும் மற்றுள்ளோருக்கும் பேதமாவது, மற்றையோருக்கு வித்தியாகர்வ மதிகமும், தனக்கு அதுமட்டுங் குறைச்சலுமாக விருந்ததினுல், அதைத்தான் தெய்வமப்படிச் சொல்லியிருக்க வேண்டுமென்று அவர் தீர்மானித்தாராம். ஆகையால் பிறர் மூடத்தனத்தாலும் அறியாமையாலும் செய்யும் குற்றங்களைக்குறித்து இவர் துக்கிப்பார். ஆனுல், தன் புத்திமதியைக்கேளாமல், பெரிய தவறுகளை யாராவது செய்துவிட்டால், அவர்களை நாராசம்போன்ற வார்த்தைகளால் திட்டாமல், அவர்களை யவர் வழியிலேயேவிட்டு, வாதத்தில் சிக்கிக்கொள்ளச் செய்து தன் வழி திருப்புவார். யாவனுவது தேசாபிமானமில்லாதவனுயிருந்தால் அவனை மனிதர்களோடு கணக்கிடுவதைவிடத் தன் காடென்றும் பிறர்காடென்றுமறியாத புலி முதலிய விலங்குகளுக்கு ஒப்பிடுதல் தகுமென்பது அவர்கொள்கை. ஆகவே, ஸாக்ரடீஸ் மிகுந்த தேசாபிமானமுள்ளவர். தேசாபிமானியென்று நடிக்கும் சிலரைப்போல் கூட்டங்களிலும், ராஜ சபைகளிலும் உரக்கப் பேசிவிட்டுக் காரியமாகவேண்டிய காலத்தில் வீட்டிலுறங்குபவர் அன்று. தேசத்தின் நன்மையும், தேசத்திலுள்ளாரின் பெருமையும், தருமமார்க்கமாய் ஓங்கிவளர வேண்டுமென்பதே இவர் உட்கருத்து. இவர் இவ்வாருக நினைத்து, இதற்குத் தக்கபடி ஒவ்வொரு விஷயத்திலும் நன்ருக ஆலோசித்து, நன்மை விளைவித்துத் தேசத்தை விருத்திசெய்வதிலும், சிறுவர்களுக்கு ஞான அமுதைப்புகட்டி வந்தார்.

(இன்னும் வரும்).

---

ஸ்ரீமான்-பலச்சந்த் தயாராம் என்னும் சிந்து, நாட்டுப் பெரியமனிதர் சமீபத்தில் செய்த உபந்நியாசத்தில், அவ்விடத்திய ஸ்திரீகள் தரிக்கும் ஆபரணங்கள் வெகு உபத்திரவகாமானவை யென்றும், அவைகளைச் சீக்கிரம் மாற்றவேண்டும் என்றும் சொன்னுராம். அந்த விஷயத்தில் ஸ்திரீ களெங்கும் ஒரே விதமாகத் தானிருப்பதாகக் காணுகிறது. நாகரிகத்தில் தேர்ந்தவர்களென்று பெருமைப்படும் ஐரோப்பிய ஸ்திரீகள் உடைவிஷயத்தில் திமிங்கல எலும்புத்துண்டுகளை வைத்து கட்டிக்கொண்டு, இடுப்பை உடுக்கைப்போல் செய்துகொள்ளவும், பாதத்தைச் சிறிதாக்கவும், இதுபோல் வேறு இம்சைகளைச் செய்துகொள்ளவும் பின் வாங்குவதில்லை. நமது தமிழ் நாட்டில், தென்கோடியில் காதுகளைத் தோள்வரை யிழுத்துவிடுவது சித்திரத்திலும், பிரத்தியக்ஷத்திலுங் காணக்கூடிய லக்ஷணம். இப்படி, வேண்டாத உபத்திரவங்கள் தொலைவதற்குக் கல்வியும், அதனுலுண்டாகும் ஜகமத்தியமுமே சாதனமாகும். ஆதலால் கல்வியதிகரிக்கும்படி பிரயத்னம் எங்கும் நடக்கவேண்டும்.

## ககோளவகைக் காண்டம்

### 1. ககோளதத்துவம்—பாலபாடம்

ஸ்ரீமதி-ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள்

All Rights Reserved

சிலவருஷங்களுக்கு முன், பள்ளிக்கூடத்தில்படிக்கும் பையனொருவனைப் பூமி உருண்டையா, தட்டையா என்று கேட்டதற்கு அவன், "அது பள்ளிக்கூடத்திற்கு வந்தால் உருண்டையாய் விடுகிறது, வீட்டிலிருந்தால் தட்டையாயிருக்கிறது!" என்றானாம்.

இதைக்கேட்டு நாம் சிரிப்பதற்கிடமில்லை. ஏனெனில், நம்மில் அனேகமாய் எல்லோரும் இந்த ஸ்திதியில் தானிருக்கிறோம். இந்தியாவில் ஒருகாலத்தில் 'ஆரியபட்டர்' முதலிய பெரியககோளதத்துவ ஞானிகளிருந்தது மெய்தான். ஆனால், நம்மில் பெரும்பாலார்க்குப் புராணங்களில் நம்பிக்கை யதிகமாதலால், அதில் காணுவதுதான் சத்தியம். உதாரணமாக இவ்விஷயத்தில் நாம் வாசஞ்செய்யும் இந்தப்பூமியானது ஆதிசேஷன் என்னும் ஆயிரம் தலைகளுள்ள ஒரு பாம்பின் தலைமேல் தாங்கப்படுகிறது, என்று ஒரு புராணத்தில் எழுதியிருக்கிறது. ஆனால் அந்த ஆதிசேஷன் எதன்மேல் தன்தேகத்தை ஊன்றிக்கொண்டிருக்கிறானென்றால், அதற்குப்பதில் இல்லை. இது போன்ற அனேக விஷயங்கள் நமது புராணங்களில் மட்டுமேயல்லாமல், கிறிஸ்தவர் முதலியோருடைய வேதங்களிலும், அந்தந்த ஜனங்களுடைய மனோதருமத்தை யனுசரித்து எழுதப்பட்டு இருக்கின்றன. ஆனால் உண்மையை விசாரிக்குமிடத்து இக்கதைகளால் நமக்குபாதொரு பிரயோஜனமுமில்லை.

ஏனெனில் கணிதரீதியாக இப்பூமியானது சுமார் 24860-மைல் சுற்றளவுள்ள ஒருபெரிய பந்து போன்றிருக்கிறதென்பது நிச்சயம். தவிர அது விளக்கை விட்டிற்பூச்சி சுற்றிச் சுற்றிவருவதுபோல் சூரியனைச் சுற்றிச் சுற்றிவருகிறது. அப்படிச் சூரியனை ஒருதரம் சுற்றுவதற்கு வருஷம் ஒன்று ஆகிறது. சூரியனைச்சுற்றும்பொழுதே 24-மணிக்கு ஒருதரம் பம்பரம்போலச் சுழன்றும் வருகிறது. இதெப்படியென்றால், உங்களில் பம்பரம் நன்றாய் ஆடத்தெரிந்தவனிடத்தில் ஒரு பம்பரத்தையும் சாட்டையையுங் கொடுங்கள். அவன் அதை ஆடியவுடன் அது கரகரவென்று சுற்றிக்கொண்டே ஒரு பெரிய மண்டலமிட்டு வருவது எப்படியோ, அதுபோல வென்றறிய வேண்டும்.

ஒரு புகைக்கூண்டானது ஆகாசத்தில் ஓர் ஆதரவுமின்றி யெப்படி நிற்கக்கூடுமோ அதுபோல அளவென்பதே காணக்கூடாத ஆகாசவெளியில் சூரியன் என்னும் பெருஞ்சோதி மிதக்க, அதைச்சுற்றி இந்தப் பூமியும் வளைய வளைய வந்து கொண்டிருக்கின்றது. இது பிரதக்ஷணமா, அப்பிரதக்ஷணமா என்று விசாரிப்பது வீண். ஏனெனில் முறுக்கு என்னும் தின்பண்டத்தை ஒருபுறம் பார்த்தால் சுற்று பிரதக்ஷணமாகவும், மற்றொருபுறம் அப்பிரதக்ஷணமாகவும் காணும். தவிர விளக்கைச் சுற்றிவரும் பூச்சியை மேலிருந்து பார்த்தால் ஒருவிதமாகவும் கீழிருந்து பார்த்தால் அதற்குமாறாகவும் காணுவது பிரத்தியக்ஷம். ஆதலால் நாம் எந்தப்புறத்திலிருந்து பார்க்கிறோமோ அதை யனுசரித்துத்தான் பிரதக்ஷணமும் ஏற்படும்.

இப்படியே சாமான்னியமாய்ப் பேசும்போது சுவர்க்க முதலிய புண்ணியவுலகங்கள் மேலேயிருப்பதாகக்கையைக் காட்டியும், பாதாள முதலியவை கீழேயிருப்பதாகவும் சொல்லி வருகிறோம். ஆனால் நாம் மேற்சொல்லியபடி 24-மணிக்குள் பூமி தன்னையொருமுறை சுற்றிக்கொள்ளுவதால் எத்தனை மணிக்குப் புண்ணியலோகங்கள் மேலே காணுமென்று தெரிந்தால் ஒழிய, நாம் கையைக்காட்டுவதற்கு அர்த்தமில்லை. ஏனெனில், பகல் பன்னிரண்டுமணிக்கு நமது தலைக்குமேல் காணும் உலகங்கள் இரவில் அதே சமயத்தில் நமக்குக் கீழே போய்விடுகின்றன.

ஒரு விளக்கை அனேகம் பூச்சிகள் சுற்றுவதுபோல் சூரியனைப் பூமியல்லாது புதன், சுக்கிரன், குரு, சனி முதலிய கிரகங்களும் சுற்றுகின்றன. ஆகவே பூமியும் ஓர் கிரகம் என்பதிற் சந்தேகமில்லை.

இக்கிரகங்களில் பலவற்றிற்குக் குஞ்சுகள் உண்டு அவைகள் தத்தம் தாய்மார்களைச் சுற்றிச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றன. தாய்மார்கள் எங்கே போனாலும் விடாமல் சுற்றி வருகின்றன. இவ்வகைப்பட்ட குஞ்சு ஒன்று நமது பூமியை 30-நாளில் சுற்றிவந்து அப்பூமியோடு ஒருவருஷத்தில் சூரியனையும் சுற்றிவருகிறது. இதற்குச் சந்திரன் என்று நாம் பெயரிட்டிருக்கிறோம். இவ்வாறு பெரிய கிரகங்களைச் சுற்றிவரும் குஞ்சுகளுக்கு உபக்கிரகங்கள் அல்லது பரிவாரங்கள் என்று பெயரிடலாம். புதன், சுக்கிரன் ஆகிய இரண்டொழிய மற்றைய கிரகங்களுக்கெல்லாம் பரிவாரங்கள் உண்டு.

நடுவில் சூரியனும் பூமியுள்பட அதைச்சுற்றிவரும் எல்லாக் கிரகங்களும் அவைகளுடைய பரிவாரங்களும் சேர்ந்து சூரியமண்டலம் என்னப்படும்.

மேகம் முதலிய மறைவில்லாமல் ஆகாசம் நிர்மலமாயிருக்கும் பொழுது, இரவில் நாம் வானத்தை நிமிர்ந்து நோக்கினல் எங்கே பார்த்தாலும் கணக்கற்றஜோதிகள் சிறிதும் பெரிதுமாய் அடர்ந்து கிடக்கின்றன. இவைகளிலொவ்வொன்றும் ஓர் சூரியமண்டல மென்று நம்ப இடமுண்டு. இவைகளுக்கு நாம் நக்ஷத்திரங்களெனப் பெயரிட்டிருக்கிறோம். இவைகளில் சில பெரிதும், சில சிறிதுமாகக் காணுகின்றன. என்றாலும் நமக்குக் கண்ணிற் காணுவதை நம்பி இதுதான் சிறிது, அதுதான் பெரிதென்று நிச்சயிக்கமுடியாது. சில நக்ஷத்திரங்கள் சிறியவைகளாய்த் தோன்றுவதால் மட்டுமே அவைகள் சூரியனைவிடவாவது மற்றைய நக்ஷத்திரங்களை விடவாவது, சிறியவை என்று நிச்சயமாக்குதல் சரியன்று. ஏனெனில் ஒரே வஸ்துவானது எட்டிப் போகப்போகச் சிறிதாகக் காணுவதால், நக்ஷத்திரங்களின் பருமனை நிச்சயமாயறிவதற்கு அவைகள் இருக்கும் தூரமும் நமக்குத் தெரியவேண்டும். ஆனல் இது வெகு கடினம். ஏனெனில் நமக்கு வெகு சமீபத்திலிருக்கும் நக்ஷத்திரமொன்றை எடுத்துக்கொண்டால் அது சூரியனைவிட ஐந்துலக்ஷம் மடங்கு அதிகமான தூரத்தில் இருக்கிறது, சூரியனே பூமியிலிருந்து 93-கோடி மைல் தூரத்தில் இருப்பதால், நாம் சொல்லும் நக்ஷத்திரமென்னும் மற்றொரு சூரியன் எவ்வளவு தூரத்தில் இருக்கவேண்டுமென்பதை மனதினல் கூட ஆராய்வது அரிது. நமக்கு அயலிலிருக்கும் நக்ஷத்திரத்திற்கே இந்த லக்ஷணமானல், இன்னும் தூரத்திலிருப்பவைகளைப் பகுத்தறிய யாரால் முடியும்?

ஒவ்வொரு நக்ஷத்திரத்தையும் சுற்றி அனேகம் கிரகங்கள் உலாவி வருவது சாத்தியம். அவ்விஷயத்தில் அவைஎல்லாம் நமது சூரியனைப்போலவே இருந்தாலும் இருக்கக்கூடும். ஆனல் அவைகளில் ஒன்றிற்கொன்றுள்ள சம்பந்தத்தை நாம் உபயோகிக்கும் இங்கிலீஷ் மைல்களைக்கொண்டு கணக்கிடப் புகுந்தால் வெகு சீக்கிரத்தில் தலைசுற்றும். மொத்தத்தில் நம்மைச்சுற்றிக் காணும் பிரம்மாண்ட மண்டலத்தில் எத்தனையோ அளவற்ற அண்டங்கள் உருண்டுகொண்டிருக்கின்றனவென்பது பிரத்தியக்ஷம். இதைச்சுட்டியே நமது ஞானிகளும்,


"அண்டபகி ருண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே" என்றும்,

"அந்தரத் தகிலகோடி
தாமாமணிலை நிற்கவில்லையோ" என்றும்,

பாடியிருக்கிறார்கள். இதில் ஆக்ஷேபமேயில்லை

## 1. அத்தியாயம்

## பூமியின்வடிவம்




பூமியானது நமது கண்களுக்கு ஒரு பெரியவட்டமான சமநிலம்போல் தோன்றினாலும் உண்மையில் கிச்சிலிப்பழம்போன்ற ஒரு பெரிய உருண்டையாயிருக்கிறது.

இதற்குச் சாக்ஷியம்:—

### இரண்டாம் படம்

1. நாம் சமுத்திரக் கரையிற்போய் நின்றுகொண்டு துறைமுகமாய் வரும் ஒரு கப்பலைக் கவனித்துக்கொண்டிருந்தால், முதன் முதல் நாம்காணுவது அதன் பாய்மரத்தின் உச்சிதான்.




பிறகு கொஞ்சங்கொஞ்சமாய் அந்த நுனியிலிருந்து கப்பலின் மற்றைய பாகங்கள் தெரிந்து, கடைசியாய் அதன் அடிப்புறம் தெரிகிறது. சமுத்திர ஜலம் சமமாயிருந்தால் கப்பலின் அதிக பருமனான கீழ்பாகமல்லவா முதலில் தெரியவேணும். அதேமாதிரியாக ஒருகப்பல் கரையோரமிருந்து, வெளியிற் போகும்பொழுதும் அடியிலிருந்து மறைய ஆரம்பித்துப் பாய்மர நுனி கடைசியில் மறையும். மற்றோர் சாமான்னிய உதாரணம் இதை யின்னும் நன்றாய் விளக்கும்.

ஒருதட்டில் இரண்டு ஈக்கள் உட்கார்ந்து ஒன்றையொன்று பார்த்தவண்ணம் பின்னுக்கு நகருவதாய் நினைத்துக்கொள்வோம்.

ஒன்றின் கண்ணுக்கு மற்றொன்று சிறியதாக ஆகிக்கொண்டிருக்குமே தவிர, ஈயின் ஒருபாகமோ அல்லது முழுவதுமோ மறைந்துவிடாது. ஒருதட்டின் மேலில்லாமல் இரண்டு ஈக்களும் ஒருபந்தின்மேல் முதலில் சமீபத்திலிருந்து பிறகு இரண்டுமோ அல்லது ஒன்று மாத்திரமோ பின்னுக்கு நகருவதானால், முதலில் இறக்கைகள் மறைந்து கடைசியில் முகம்மறையுமல்லவா? இரண்டிற்கும் நடுவில் பந்தின்மேடல்லவோ ஒருமண்டபம்போல் விளைகிறது.

## மூன்றும் படம்

இரண்டு மைல் அகலமுள்ள ஒரு ஏரியில் நீர் மட்டத்திற்குமேல் ஒரே அளவாய் நீட்டிக்கொண்டிருக்க, ஒன்றுக் கொன்று ஒரு மைல் தூரத்தில், மூன்று கொம்புகள்நட்டு, ஒரு கொம்பின் தலையிலிருந்து மூன்றுவது கொம்பின் தலையைப் பார்த்தால், நடுக்கொம்பு 8-




அங்குலம் நீண்டிருப்பதைப்பார்க்கலாம். நீர் மட்டம் ஒன்றுயிருந்தால் மூன்று கொம்புகளின் தலைகளும் ஒரே மட்டத்திலல்லவாயிருக்கவேணும்? இரண்டுமைலல்லாமல் ஒருமைலேயானல் நடுக்கொம்பு இரண்டு அங்குலமும், நான்கு மைலானல் 32-அங்குலமும் நீண்டிருக்கும்.

ஆறு மைல் அகலமுள்ள ஓர் நீர்ப்பரப்பின் அக்கரையில், நீர் மட்டத்திற்குச் சரியாய்க் காலையூன்றி 6-அடி உயரம் நிற்கும் ஒரு மனிதனை, இக்கரையில் ஒருவன் நீர்மட்டத்திற்கு 6 அடிக்குமேல் கண்ணைவைத்து ஒரு தூரதிருஷ்டி கண்ணுடியைக்கொண்டு பார்த்தாலும் காணமுடியாது. நடுவில் எடுப்பாகக் காணும் ஜலம் மறைத்துவிடும்.

இப்பரீட்சைகளை ஜலமில்லாத தரையிலேயே செய்தும் பார்க்கலாம். ஆனல் அதற்கு அந்தத் தரையிலுள்ள மேடுபள்ளங்கள் இடையூறுகின்றன. என்றுலும் இந்த மேடுபள்ளங்களினல் பூமியின் உருட்சி வடிவத்திற்கு ஒரு லோபமுமில்லை. நமக்குத் தெரிந்தவரை 5-மைலுக்கு அதிகரித்த உயரமுள்ள மலையுமில்லை. 5-மைலுக்கு அதிகரித்த ஆழமுள்ள சமுத்திரமுமில்லை. ஆகவே இவ்விரண்டும் சேர்ந்து பத்து மைல் வித்தியாசந்தான் ஏற்படக்கூடும். ஆனல் பூமியின் இருசு 8000-மைல் இருப்பதால், இந்த விஷமங்கள் பூமியை முற்றும் பார்ப்பவருக்கு எடுப்பாகக்காணவே காணுது. ஒருகிச்சிலிப் பழத்தின் தோலைத் தொலையிலிருந்து பார்க்க வெகு நயமாகக் காணுகிறது. பக்கத்தில் வைத்துப் பார்க்க மேடு பள்ளம் காணுகிறது. என்றுலும் அந்தப் பழத்தின் உருண்டை வடிவத்தை இது எப்படிக் கெடுக்கவில்லையோ, அப்படியே, பூமியின் வடிவத்தை இந்த விஷமங்கள் கெடுக்காது. பூமியின் சுற்றளவல்லாது, நாம் மேற்குறித்த இருசு, என்றுல், அதன் நடுவின் வழியாய்ப் போகக்கூடிய ஒரு துவாரத்தின் நீளம் 8000-மைல் என்றே மல்லவா? இந்த 8000 மைலுக்கு 10 மைல் எவ்வளவு தூரம். 8-அடி குறுக்களவுள்ள ஒரு பந்தின் மேல் $\frac{1}{8}$-அங்குலம் மேடு பள்ளம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, வடிவம் உருண்டைதானென்று சொல்லி விடலாம்.

நான்காம் படம்

2. நடுச்சமுத்திரத்தில் 6-அடி உயரம் நீர்மட்டத்திற்கு மேல் நிற்கும் மனிதன் சுற்றி 3-மைல் தூரம் வெறுங் கண்ணாலோ தூர திருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டோ பார்க்கலாம். அதாவது அந்த 3-மைலுக்குள்ளிருக்கும் ஒவ்வொரு வஸ்துவும் செம்மை



யாயும் புலப்படும். 24-அடி உயரத்தில் நின்று பார்த்தானானல் 6-மைல் தூரம் தெரியும். ஒரு கப்பலின் பாய் மரம் 54-அடி உயரமானல், அதன் நுனியிலிருந்து பார்ப்பவனுக்கு எப்புறத்திலும் 9-மைல் தூரம் தெரியுமாகையால், கரைக்கு வெகு தூரத்திலிருந்தே ஜனங்கள் கரைகிட்டுவதை அறிந்துகொள்ள முடியும். ஆதலால் எதிர்ப்படும் கரையில் சாதாரணமாய் 96-அடியுள்ள ஒரு தீபஸ்தம்பத்தை 54-அடி உயரத்திலிருந்து பார்க்கும் மாலுமி (12+9) =21-மைல் தூரத்திலேயே கண்டுவிடுவான், பூமி உருண்டை வடிவாயிருந்தாலொழிய. மேலே போகப்போக அதன் விஸ்தீரணம் இப்படியதிகரித்துக் கண்ணுக்குத் தெரியமாட்டாது. மேலும்,மேலேபோகப்போகத்தெரிகிற பூமியும், ஆகாசமும் வட்டமாகவே யிருந்துகொண்டிருப்பதும், பூமியின் எந்த விடத்திலும் அப்படியே யிருப்பதும் கவனிக்கத்தக்கது.

3. புதுச்சேரி, துறை முகத்திலிருந்து ஒருவன் கப்பலேறி நேர் கிழக்காய்ப் பிரயாணம் செய்தால், முதலாவது அண்டமான் தீவுகள் தென்படும். அவைகளைத் தாண்டிக் கிழக்கு முகமாகவே போனல் சிற்சில சிறு தீவுகளைக் கடந்து, தென் பர்மாவின் பாகமாகிய டன்னஸீம் என்னும் தேசத்தில் கரையேறுவான். பிறகு ஸீயாம் குடாக்கடலைக் கப்பலேறித் தாண்டி, ஆனம் தேசத்தைக் கரைமார்க்கமாய்க் கடந்து, சைனக் கடலில் புகுந்து பிலிபைன் தீவுகளைக் கடந்து, பசிபிக்மகாசமுத்திரம் அடைந்து, அதையும் தாண்டினல்தென் அமெரிக்காவின் வடக்கெல்லையில் கரைகாணுவான். தரையைத் தாண்டி மறுபடியும் கிழக்கு நோக்கியேபோனல் அட்லாண்டிக் மகா சமுத்திரம். அதையும் கடந்தால், ஆப்பிரிகா தேசத்தின் மேற்குக் கரையில் இறங்குவான். இன்னும் கிழக்கு முகமாகவே ஆப்பிரிகாகண்டம் முழுவதும் தாண்டினல், ஏடன் குடாக்கடல் வரும். அதையும் தாண்ட இந்தியாவின் மேற்கு சமுத்திரமாகிய அரபிக்கடலில் புகுவான். கிழக்குத் தப்பாமல் வந்தால் புதுச்சேரிக்கு நேர் மேற்கிலுள்ள கன்னனூரில் குதித்து, ஓட்டமாய்ப் புதுச்சேரிக்குத்திரும்பி வந்து விடுவான். இந்தப்பரீக்ஷையை யார்வேண்டுமானலும் செய்து பார்க்கலாம். இந்த விதமாய் வேறு மார்க்கங்களில் பூமியைச்சுற்றி அநேகர் வந்திருக்கிறார்கள். நேர் கிழக்காய்ப்போன ஒருவன் புறப்பட்டவிடத்திற்கே மறுபடியும் வருவதென்றால், கீழ்மேற்றிசைகளில் பூமி உருண்டையாகத்தானே இருக்கவேண்டும்?

4. சந்திரக் கிரகணமென்பது, சந்திரனுக்கும் சூரியனுக்கும் நடுவே பூமிவரும்பொழுது

பூமியின் நிழலானது சந்திரன்மேல் விழுவதினுல் உண்டாகிறது. இந்த விஷயம் பின்னிட்டு விவரமாய்ச் சொல்லப்படும். அப்படி விழும் நிழலானது எப்போதும் ஒருபந்தின் சாயல்போல் வட்டமாய் இருப்பதானுல் பூமியுருண்டையாயிருக்க வேணுமென்பதற்கு மற்ருேர் பலத்த ஆதாரம் ஏற்படுகிறது.

5. பூமி சமனுகவிருந்தால் எல்லாவூர்களிலும் சூரியவுதயம் முதலானவைகள், ஒரேகாலத்தில் உண்டாகவேணும். அப்படிக்கில்லாமல், நம்மூரில் சூரியோதயமாகும்போது அமெரிக்காவில் சூரியாஸ்தமனமாகிறது. ஆபிரிக்காவில் நடுநிசியாயிருக்கிறது. இதனுண்மை தந்தி மூலமாய்த்தெரிந்து கொள்ளுவது வெகு சுலபம். சீமையில் நடுமத்தியானமாயிருக்கும்பொழுது, கல்கத்தாவில் சாயங்காலம் 6-மணி, பம்பாயில் 5-மணி. ஒருபந்தை விளக்குக்கு நேர் பிடித்துச் சுழட்டிப் பார்த்தால் இதன் நியாயம் விளங்கும். இதனுலும் பூமியின் வடிவம் பந்துபோ லென்றேற்படுகிறது.

6. சூரியாஸ்தமனமாகிக் கொஞ்சநாழிகைவரையில் மேற்கிலுள்ள மேகங்களின் மேல், சூரியகாந்தியைச் செவ்வானம் போல் காண்கிருேம். நமக்கு அஸ்தமனமாய்விட்ட சூரியன் நம்மிலும் அதிக உயரத்திலிருக்கும் மேகங்களுக்கு அஸ்தமனமாகவில்லை. இதேமாதிரி சூரியோதயத்திற்கு முந்தியே சூரியவெளிச்சத்தைக் கீழ்த்திசைமேகங்களிற் காண்கிருேம். ஒரு பள்ளத்திலிருந்து கிளம்புவது போலவும், மறுபடி ஒரு பள்ளத்தில்போய் மறைவது போலவும் இந்தத் தோற்றம் பூமியின் வடிவத்தினுலேற்படுகிறது.

7. வடக்குநோக்கி ஒருவன் பிரயாணமாய்ப்போய்க்கொண்டேயிருந்தால் துருவ நக்ஷத்திரம் உயருவதையும், புதிய புதிய நக்ஷத்திரங்கள் தெரிய ஆரம்பிப்பதையும், தெற்கில் தெரிந்துகொண்டிருந்த அனேக நக்ஷத்திரங்கள் வானத்திற்குக் கீழ்மறைவதையும் காணலாம். இதனுல் மேற்கண்டபடி கீழ் மேற்றிசைகளில் மட்டுமேயல்லாமல் பூமியானது தெற்குவடக்கிலும் பந்துபோல் வடிவுகொண்டிருப்பது தெளிவாகிறது.

8. எல்லா நக்ஷத்திரங்களும், சூரியனும் சந்திரனும், சூரியனைச்சுற்றிவரும் மற்றகிரகங்களும், எல்லாம் பந்துபோல் உருட்சியாய் இருப்பதனுல், பூமியும் அப்படியே தானிருக்க வேணும் என்றும் ஊகிக்கலாம். ஆனுல் நாம் பூமியின்மேல் நேராய் நிற்க, நமக்கு நேர் கீழே அமெரிக்காவிலிருக்கும் மனிதர்கள் பூமியில் கால்களை யூன்றித்தலைகீழாக வல்லவோ தொங்கிக் கொண்டிருக்க வேணுமென்று ஒரு சந்தேகம் உண்டாகலாம். இதே சந்தேகம் அந்த அமெரிக்காவில் உள்ளவர்களுக்கும் உண்டு. அதாவது, நாம் நேராய் நிற்கிருேம், இந்தியாவிலுள்ளவர்கள் தான் தலை கீழாய்த் தொங்குகிருர்கள், என்பது. பூமியில் எந்த விடத்திலும் ஒரு கல்லை மேலெறிந்தால் அது திரும்பிப் பூமியிலேயே வந்து விழுகிறது. பூமியிலுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் தன்னிடம் கவர்ந்துகொள்ளும் ஒரு சக்தி அந்தப் பூமிக்கு இருக்கிறது. இது விஷயம் பின்னுல் இன்னும் விவரமாய்த் தெளிவாகும்.

(இன்னும் வரும்)

---

கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜியாயிருந்து பென்ஷனவாங்கி இப்பொழுது இங்கிலாந்திலிருக்கும் ஸ்ரீமான்-அமீர் ஆலி என்னும் மகம்மதிய பெரிய மனிதரை ப்ரிவிகௌன்சில் ஜட்ஜ்யாக்கி-யிருப்பதாகக் கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். அந்தஸ்தானத்தில் இப்பொழுதுதான் முதன் முதல் ஓர் இந்தியர் உட்கார்ந்து அமுல் நடத்துகிருர். ஆதலால் இது இந்தியர்களெல்லோரும் பூஷணமாகக் கொண்டாடத்தக்கது.

## 2. பட்டும், பட்டுப்பூச்சியும்

ஸ்ரீமான்-எம். என். வைத்தியநாத சாஸ்திரியார் அவர்கள்

பட்டு ஒரு புழுவிலிருந்து உற்பத்தியாகிறது. இச்சென்னை இராஜதானியில் கோயமுத்தூர் ஜில்லாவின் ஒரு தாலூகாவாகிய கொள்ளேகாலத்திலும், மைசூர் இராஜ்ஜியங்களிலும் தவிர வேறு இடங்களில் இது அதிகமாய் உற்பத்தியாகிறதாகத் தெரியவில்லை. பட்டுப்பூச்சி மனித சகாயமின்றித்தானே ஜீவிக்கமுடியாது. ஆங்கிலேயே பாஷையில் "மல்பெரி" என்றும், இத்தேசங்களில் திப்பிலி நாவல் என்றும், வழங்கும் ஒரு செடி அல்லது மரத்தின் இலையைத் தின்று இது ஜீவிக்கிறது. இத்தேசங்களில் மரமாகவிடாமல் செடியையே தழையை உருவி இப்புழுக்களுக்கு ஆகாரமாகப் போடுவதால், 'செடி அல்லது மரம்' என்று சொல்லத் துணிந்தோம். இம்மரத்தின் பழம் பார்வைக்கு அரிசித் திப்பிலி போலவும், உருசியும், வர்ணமும் நாவல் பழத்திற்கு ஒப்பாயுமிருப்பதால், இச்செடி 'திப்பிலி நாவல்' என்று பெயர்பூண்டது சரியே. ஆனால் ஆமணக்குக் கொட்டை இலையைத் தின்று ஜீவித்து உற்பத்தி செய்கிற 'ஈரி' (Eri)ப்பட்டு என்று ஒருவகை இருக்கிறதாகவும், அதின் பட்டு முற்கூறிய பட்டைப்போல் அவ்வளவு உயர்ந்ததல்லவென்றும் தெரிகிறது.

இந்தப் பூச்சிப் பட்டை எப்படி உண்டாக்குகிறதென்றும், பூச்சி எப்படி உற்பத்தியாகி ஜீவிகிறதென்றும், விசாரிப்போம். இப்பூச்சியின் முட்டைகள் வெண் மஞ்சள் நிறமுள்ள கடுகு போன்றவைகள். 'முட்டையிட்ட எட்டு ஒன்பது தினங்களுக்கப்பால் அவைகள் கறுத்து அவைகளிலிருந்து மயிர் இழை கனமுள்ளவும், சுமார் வீசம் அங்குலம் நீளமுள்ளவுமான புழுக்கள் வெளிப்படுகின்றன. உடனே தினம் எட்டுப்பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் திப்பிலி நாவலின் இளம் இலைகளைச் சிறிய துண்டுகளாக்கி, இப்புழுக்களை ஒரு இடமகன்ற தட்டத்தில் போட்டு அவைகள் மேல் தூவுகிறார்கள். அப்புழுக்கள் அவ்விலைகளின் மேல் வந்து தொத்திக்கொண்டு நறுக்கப்பட்ட ஓரங்களின் வழியாய் அவ்விலைகளின் சாரத்தை உறிஞ்சிச் சாப்பிடுகின்றன. 5, 6 தினங்கள் ஆனவுடன் அவைகளுக்கு ஒருநாள் பூராவும் 'சுரம்' வந்துவிடுகிறதென்பார்கள். இது முதல் சுரமாம். அப்பொழுது அவைகள் "லங்கணம் பரமௌஷதம்" என்பதை நம்பி, ஆகாரம் தின்னாமல் இலைகளின் அடியில் போய்த் தங்களை மறைத்துக்கொள்ளுகின்றன. பிறகு மறுநாள் மேலே வருகின்றன. அப்பொழுது முன்போலவே இலைகளை நறுக்கி மேலே தூவவேண்டும். அவைகளைத் தின்றுகொண்டிருந்த பிறகு 4, 5-தினங்களுக்கெல்லாம் மறுபடிச் சுரம் வந்துவிடுகிறது. வியாதியிலும் வைத்தியத்திலும் அநுபவம் வந்துவிட்டதால், அதை நம்பி அந்த நாளும் ஆகாரம் இன்றி, அவைகள் மறைந்து கிடக்கும். மறுநாள் வெளிப்படும். பிறகு முன்போல் இலைகளைப் போடவேண்டும். புழுக்கள் பெருக்கப் பெருக்க 8, 10-தரம் ஆகாரம் போடுவதை விட்டு, 3, 4-தரம் போட்டால் போதும். இலைகளும் முற்றியிருக்கலாம். அது நிற்க, மேற்படி புழுக்களுக்கு 4-முறை சுரம் வந்து தப்பித்துக்கொள்ளுகிறது. சுரம் வராவிட்டாலும், சுரம் வந்தவுடன் புழுக்கள் ஒரே வகையாய்த் தங்களை மறைத்துக்கொள்ளாவிட்டாலும், பட்டுக் கெட்டதென்பது நிச்சயம்.

ஒவ்வொரு சுரத்திற்குப் பிறகும் ஒவ்வொரு தினத்திற்குப் பிறகும் வளர்பிறைச் சந்திரன்போல் விர்த்தியாகி நாலாம் சுரம் கழிந்து, 10-தினங்களுக்குப் பிறகு அவைகள் பழுக்கிறதென்பார்கள். அதுதான் நூல் நூற்கும் சமயம். அக்காலத்தில் அவைகள் வெண் பொன்போன்ற பள பளப்பாய் இருக்கும். சுமார் சுண்டுவிரல் கனமும் இரண்டு

அங்குல நீளமுமிருக்கும். அப்புழுக்களைச் சிறிய அறைகள் அடங்கிய ஒரு பெரிய தட்டத்தில் அறைக்கொன்றாய் விதை விதைப்பதுபோலப் போடுகிறார்கள். உடனே அது அன்று சாயங்கிரத்திற்குள் தன்னைப் பட்டு நூலினால் சுற்றிக்கொண்டு தான் உள்ளே இருந்துகொள்ளுகிறது. இக்கூண்டை ஒரு பெரிய பேரீச்சம் காய்க்கு ஒப்பிடலாம். இக்கூட்டுக்குள் 10-தினம் இருந்து, பிறகு தான் கட்டிய கூட்டில் ஒரு துவாரம் செய்துகொண்டு அதிலிருந்து இறக்கையுடன் வெளிப்பட்டு, ஆகாரம், நித்திரை, பயம், மூன்றையும் மறந்து நான்காவதான போக இச்சையில் மட்டுமே கவலையுற்று, ஒன்றையொன்று சேர்ந்து, ஆனந்தப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், சேர்ந்த 12-மணி நேரத்திற்கெல்லாம் அன்னம்போட்டு இரக்ஷித்த பிரபு, இராமாயணத்தில் சுக்ரீவனை, லட்சுமணன் பிரித்ததுபோலப் பிரித்து ஆண்பூச்சிக்களை எடுத்து வைத்துக்கொண்டு, பெண்பூச்சிக்களை ஒரு தட்டத்தில்விட உடனே ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்காக முட்டைகள் வைக்கின்றன. பிறகு மறு காலையில் சேரவிடுகிறார்கள். மறுநாள் சாயந்தரம் பிரித்துவிட்டால் மறுநாள் இராத்திரியில் அதேமாதிரி முட்டைவைக்கின்றன. மூன்றாந்தரம் சேர்ப்பிக்கிறதுமுண்டு. ஆனால் மூன்றாந்தரம் உண்டாவது நல்லதல்லவென்கிறார்கள். மூன்றுநாளைக்குப் பிறகு அவைகள் பரலோகப் பிராப்தியடைகின்றன. மருந்தும் விருந்தும் மூன்றுநாள்தானே. அவப்பொழுதிலும் தவப்பொழுது, என்பதுபோல் பட்டுப்பூச்சியிலும் வேதாந்தமாம். நாலுநாள் சுரத்தில் படுத்திருப்பதை தரும அர்த்த காம மோக்ஷமாகிற நான்கு புருஷார்த்தங்களையடைய நான்கு தரம் உபவாசநிஷ்டையில் இருப்பதாயும், 10 நாள் தான் கட்டிய கூண்டினுள்ளிருப்பதை மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் தினம் ஒன்றாகத் தியானித்துக்கொண்டு சமாதியிலிருப்பதாகச் சொல்லவும் வேதாந்திகள் துணிவார்கள்.

கூண்டைச் சொன்னால் போதுமா? நாம் பட்டுவஸ்திரம் கட்டி மினுக்கும்படியான பட்டு நூல் கூண்டிலிருந்து எப்படி எடுக்கப்படுகிறது? துவாரம்போட்டு வெளிப்பட்டு வந்த பிறகு அந்தக் கூட்டிலிருந்து பட்டு இழை எடுக்க இந்நாட்டாருக்குத் தெரியாது. அது வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகின்றது. சீர்திருத்தம் ஜாஸ்தியாய்த் தெரிந்தவர்கள் சில துவாரங்களுள்ள தட்டங்களில் பட்டுக் கூண்டுகளைப்போட்டு அதின்மேல் நீராவிபோகும்படி செய்து, உள்ளிருக்கும் பூச்சியைக் கொன்று துவாரம்செய்து வெளிவர இடமில்லாமல் செய்கிறார்கள். துவாரம் செய்திருந்தால், நூல் இழை அறுந்துதானே போகும். சீர்திருத்தம் தெரியாத நம்போன்ற 'அன்றுகாச்சிகள்' அதைக் கொதிக்கிற தண்ணீரில்போட்டு வேகவைத்துப் பூச்சிகளைக் கொன்று, தண்ணீர் கொதிக்கும்போதே அதிலிருந்து ராட்டணங்களில் நூலைச் சுற்றுகிறார்கள். ஆமணக்கு இலையை ஆகாரமாக்கித் தின்று உற்பத்திசெய்யும் ஈரிப்பட்டு எடுக்கப் பூச்சியைக் கொல்லவேண்டியதில்லை. தன்னை அவைகள் சுற்றிக்கொள்வதில்லை. நாம் போடும் குச்சிகளில் அவைகளே நூலைச் சுற்றிக்கொடுத்து விடுகின்றன.

இந்தப் பட்டு நிரம்ப மட்டம் என்று ஏற்கனவே சொன்னோம்.

இனிப் பட்டின் உபயோகங்களைக் கூறுவோம். பூச்சி வெளிப்பட்ட பட்டுக் கூண்டைச் சுட்டுச் சாம்பலாக்கி அத்துடன் தேன் கலந்து நாக்கில் தடவ, வாந்தியை உடனே நிறுத்துகிறது. இளமைப் பட்டிலிருந்து அனேக அவுஷதங்கள் செய்வதுண்டு. இப்பூச்சிகள் தின்று கழித்த மலத்துடன் சேர்ந்த இலைகளை எருதுகளுக்குப் போட அவ்வெருதுகள் அவைகளைத் தின்று பருத்துக் கட்டுள்ளவைகளாகி, மிகப்

பலத்தை யடைகின்றன. இது எருதுகளுக்குத் தாது புஷ்டி லேகியம் என்று சொல்லலாம். பட்டு வஸ்திரங்களின் மகிமை எல்லாருக்கும் தெரிந்ததாதலால் நாம் அதிகமாய் அதை விவரிக்கவேண்டியதில்லை. விசேஷமாய் மனிதர்கள் நெய்த பட்டைத்தான் ஜனங்கள் சாதாரணமாய்ப் பார்த்திருக்கக்கூடும். பூச்சிகளே நெய்கிறதுமுண்டு. அது நெசவு இல்லாமல் அடித்துச் செய்த வஸ்திரம்போல இருக்கும். வெகு கெட்டியாகவும் செய்யலாம். எப்படியென்றால், அவைகள் நூற்கும் சமயத்தில் நாம் எம்மாதிரித் தட்டங்களில் போடுகிறோமோ, அம்மாதிரி நூற்கின்றன. சில பூச்சிகளை 2-முழம் அகலம் 4-முழம் நீளமுள்ள ஒரு தட்டத்தில் போட்டால் அத்தட்டத்தின்மேல் ஒரு இலையைப்போல் செய்துதான் உள்ளே மறைந்துகொள்ளுகிறது. நாம் அதை உரித்தால் கிழியாமல் ஒருவஸதிரம் போல் வரும். இதைத் தேவதாருகமென்றும் பூஜைக்குச் சிறந்ததென்றும் சொல்லுகிறார்கள்.

---

'நச்சினார்க்கினியர்' பேரால் பரிசு அளித்து அப்பெரிய தமிழாசிரியருடைய மகிமையை விளக்கி மதுரையில் ஓர் உற்சவம் நடந்ததாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். அம்மகா புருஷனுடைய ல்வியையும், மனோதருமத்தையும் நன்கறிதல் தமிழபிமானிகளுக்கு வெகுதூரம் நன்மை தருமென்பதில் தடையில்லை. முக்கியமாகத் 'தமிழபிமானம்' என்பது இக்காலத்தில் 'வடமொழி விரோதம்' என்று பொருள் படுவதாகக் காணுவதால் இந்தத் தரபிமானங் குறைவதற்கு இதுவே வழியாகும். 'கம்மியரு மூர்வர்' என்று சிந்தாமணியிற்காணும் மூலத்திற்குச் சாமான்னியமாய்ப் பொருள் கூறில் குபாற்கொல்லர் முதலியோருக்கு மனநோகுமென்று, 'கர்மியர்' என்றால், 'கைப்பாடுபெட்டுச் சாப்பிடும் அற்றைக் கூலிக்காரர்' என்று பொருள்கொண்ட புண்ணியவானுடைய மனோதருமம் அவரை 'உச்சி மேற்' கொள்வதாக நடிக்கும் எல்லோருக்கும் உரைக்கவேண்டுவது நமக்கு முக்கியமாயுள்ள ஆக்கிரகம்.

## 2. ஹாலி தூமகேது *

ஸ்ரீமான்-டி. எஸ். வெங்கிடராமய்யர், பி. ஏ., எல். டி.

அடுத்துவருகிற 1910-ம் ௵ ஏப்பிரல்மீ ஒரு வெகு பெரியதூமகேதுவை நாம் காணலாமென்று கணிதர்கள் சொல்லத் தெரியவருகிறது. தூமகேது வென்பதென்ன? வரப்போகிற தூமகேதுவின் பூர்வவிருத்தாந்தம் யாது? இந்தத் தூமகேதுவுக்கும் நாம் சாமான்னியமாய்ச் சூரியமண்டலத்தைச் சுற்றிக்காணும் பிரகஸ்பதி முதலிய கிரகங்களுக்கும் என்ன பாந்தவ்வியம்? இவற்றையும் இதுபோன்ற சில முக்கிய விஷயங்களையும் சற்று விசாரித்து இந்தத் தூமகேதுவைப்பற்றித் தெரிந்த சங்கதிகளையும் சுருங்க உரைப்போமாக.

ஆகாயத்தில் சாதாரணமாய் நாம் காணக்கூடியவைகள் சூரிய சந்திரர்களும், குரு, சுக்கிரன், சனி முதலிய கிரகங்களும் சூரிய மண்டலத்திற் கப்புறப்பட்டுள்ள நக்ஷத்திரங்களுமேயாம். இவைகளன்றி, சில சமயங்களில் எரி நக்ஷத்திரங்களென்று சில சிறு வஸ்துக்கள் வானத்தில் திடீரென்று தோன்றி ஆகாச பாணம்போல் ஒரு நிமிஷம் நெருப்புப் பொறிகளை யிறைத்துப்பறந்து சடுதியில் மறைந்து போவதுண்டு. அதை நாம் சாதாரணமாய்க் காண்கிறோம். ஆனால் தூமகேது வென்னும் வால் நக்ஷத்திரங்களைமட்டும் நம்மில் அனேகர் பார்த்தேயிருக்க மாட்டார்கள்.

ஏனெனில், தூமகேதுக்கள் கண்ணுடி மூலிய

---

* இந்த தூமகேதுவை இந்தியா, சீனு முதலிய இடங்களில் அனேகர் பார்த்திருந்தாலும், இதனுடைய கதியை நிச்சயமாய்க் கணக்கிட்டறிந்து இதன் வரலாற்றை முதன் முதல் பிரசுரித்தவர் பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்த ஹாலி (Halley) என்னும் பெரியவராதலால், தூமகேதுவுக்கும் அந்தப்பெயர் சேர்த்திருப்பதையறிக. இது போலவே 'எங்கி' 'பீலா' என்னும் பெயர்கள், அவரவர் பரிசயஞ் செய்துகொண்ட தூமகேதுக்களுக்குக் கூட்டியிருப்பதை வியாசத்திற் காண்க.

மாய்ப் பார்க்குமிடத்து பிரதிதினமும் இரண்டொன்றைச் சுலபமாய்ப் பார்க்கலாமாயினும் வெறுங்கண்ணுக்குக் காணுவது அபூர்வம். ஆதலால் வாஸ்தவத்தை விசாரிக்குமிடத்து இவைகள் அபூர்வ வஸ்துக்களல்ல. சமுத்திரங்களில் மச்சகோடிகள் எவ்வளவிருக்கின்றனவோ, அவைகளிலுமதிகமாகவே தூமகேதுகளும் ஆகாசத்திலிருக்கின்றனவென்று விஷயந் தெரிந்த பெரியவரொருவர் சொல்லுகிறார். இதை யார் வேண்டுமானாலும் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு பரீக்ஷித்தறிந்துகொள்ளலாம். எந்த நியாயத்தினால் சமுத்திரத்திலுள்ள மச்சகோடிகளை நாம் தினந்தோறும் பார்ப்பது சாத்தியமாகிறதில்லையோ அதே நியாயத்தினால் தூமகேதுக்களையும் நாம் வெகு அபூர்வமாகத்தான் தரிசிக்கிறோம். இவைகளைக் காண்பது திடீரென்று கண்டபின் இவைகளின் பருமன் நாளுக்கு நாள் அதிகரிப்பதினாலும், இவைகளின் வால்கள் ஆகாசத்தில் பிரம்மாண்டமாய் நீண்டு இடமும் ரூபமும் தினந்தோறும் மாறி வருவதினாலும், வெகு காலமாக எல்லா நாட்டிலும் இவைகளால் ஜனங்களுக்குப் பயமுண்டாகி வந்திருக்கின்றது. இவைகளைக் காணும்போதெல்லாம் ஜனங்கள் ஏதோ விபரீதம் நேரிடப்போகிறதென்றும், ராஜாக்களுக்கும் ராஜ்ஜியங்களுக்கும் ஆபத்து விளையப்போகிறதென்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். இப்படிச் சொல்லுவதில் அதிசயமொன்றுமில்லை. எல்லா உற்பாதங்களுக்கும் இதுவேதான் பலனாக மனிதர் சொல்லுவது. எறும்பு வலமாவத முதல் பூகம்பம்வரை எல்லாத் தோற்றங்களையும் துர்க்குறிகளாகவே நாம் எண்ணி வந்திருக்கிறோம். உதாரணமாக ஸ்ரீ ராமாயணத்தில் தசரதனுக்கு அனேகந் துர்க்குறிகள் காணுவதில் மின்னலில்லாமல் இடிவிழுவதுபோன்றக் கோளச் சேஷ்டைகளே பயத்திற்கு முக்கியகாரணமாகின்றன. இப்படிப் போலவே இதர தேசங்களிலும்.

ஆனால் பயத்திற்கு மூலகாரணம் அறியாமையாதலால் தூமகேதுக்களின் தன்மையின்னதென்று அறிந்தவர்களான இக்காலத்திய ககோள வித்வான்கள் நாமிப்படிப் பயப்படுவதற்குக் காரணமேயில்லையென்று வற்புறுத்தி வருகிறார்கள். இவைகளுக்குத் தெரிந்தமட்டில் சாமான்னிய ஜனங்களும் காலக்கிரமத்தில் தூமகேதுக்களின் ரகசியங்களை யறிவார்களாகில் அவர்களுக்கும் பயம் நீங்கி அவற்றை வானத்திற் காணுந்தோறும், அவைகளினழகையும், விசித்திர கதியையும் கண்டு ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையுமடைவார்களென்பது நிச்சயம்.

ஆகாசமண்டலத்தில் தூமகேதுக்கள் எண்ணிறந்தனவாய்ச் சஞ்சரிக்கின்றனவென்று மேலே சொன்னோம். அவைகளுடைய சஞ்சாரங்களை நன்றாயறிய வேண்டுமானால் பிரம்மாண்ட மண்டலத்திலிருந்து நமது கதையை ஆரம்பிக்கவேண்டும். அப்படிச் செய்வது பாரதமாய்ப் பெருகி விடுமாதலால், பிரகிருதத்திற்கு வேண்டிய இரண்டொரு விஷயங்களைமட்டும் குறிப்பிடுவோம்.


சூரியமண்டலமும், நக்ஷத்திர மண்டலமும் கூடி நமக்கு நாலு புறத்திலும் வியாபித்துக் காணுவதைத்தான் நாம் பிரம்மாண்ட மண்டலமென்கிறோம். அதில் நக்ஷத்திரங்களை நீக்கி சூரியனையும் அதைச் சுற்றிப்போகும் பிரகஸ்பதி முதலிய கிரகங்களையும் நாம் சூரிய மண்டலமென்கிறோம்.

கிரகங்கள் ஒன்பதென்று நம்மில் அனேகர் நினைத்துவருவது பிரத்தியக்ஷமாய்த் தெரியலாம். கண்ணாடியைக்கொண்டு பாத்தால் லக்ஷக்கணக்கான சிறு கிரகங்கள் சூரியனைச் சுற்றி பம்பரம்போற் சுழன்றோடுகின்றனவென்பதைச் சுலபமாய்க் காணலாம். மேற்கூறியபடி சூரியமண்டலத்திற்குப்புறப்பட்டுச் சிறிதும் பெரிதுமாகக்காணும் நக்ஷத்திரங்களொவ்வொன்றும் இவ்வாறே தனித் தனியோர் சூரியமண்டலமாக விருக்கிறதென்பது இக்

காலத்தில் சித்தாந்தம். இவைகளிலொன்றுக்கொன்றுள்ள தூரத்தை நாம் மனதினால் தெரிவது கஷ்டம். மைல் கணக்கில் எத்தனையோ கோடியென்று சொல்லவேண்டும். அந்தக் கணக்கினால் சாமான்னியருக்கு விசேஷப் பிரயோஜனமில்லை.

நக்ஷத்திர மண்டலத்திற்கும் சூரியமண்டலத்திற்கும் இடையிலுள்ள வெகு விஸ்தாரமான வெளியில் அநேக சில்லரை உருப்படிகள் பந்து முதலிய பலவித உருவங்கொண்டு கற்களைப் போல கண்ணுக்குக் காணுவனவாயும், வாயு வேகமாகக் கண்ணுக்குக் காணாமலும், சஞ்சரிக்கின்றன. இவை அனேகமாய்க் கூட்டமாய்ச் சேர்ந்து "ராமபாணம்" போல் ஒரே நேராய்ப் போய்க்கொண்டிருக்கின்றன. சில சமயங்களில் இவ்வுருப்படிக் கூட்டங்கள் சூரியனைப் போன்ற பெரிய கோளத்திற்குச் சமீபத்தில் வருகின்றன. உடனே அக்கோளம் அவைகளைத் தன்னை நோக்கி இழுக்கின்றது. அதினாலிவைகள் கதிமாறி சில சமயங்களில் அக்கோளத்திலே விழுந்து ஐக்கியமாகியும், சில சமயங்களில் தப்பித்துக்கொண் டோடியும், அல்லது சில சமயங்களில் அக்கோளத்திற்குச் சிறைப்பட்டு அதைச் சுற்றிவரும் மற்ற கிரகங்களைப்போலத் தாமும் சுற்றிவந்து தூமகேதுக்களாகி விடுகின்றன.

இவ்வாறே, சூரியனுடையவும் அதைச் சுற்றிவரும் பிரகஸ்பதி முதலிய பெருங்கிரகங்களுடையவும் ஆகர்ஷண சக்தியினால் அனேகம் உருப்படிக்கூட்டங்கள் சூரிய மண்டலத்திற்குச் சேர்ந்து நாம் காணும் தூமகேதுக்களாகியிருக்கின்றன. ஹாலி தூமகேதுவும் ஒருகாலத்தில் நெப்டியூன் என்னும் பெருங்கிரகத்தின் ஆகர்ஷணத்தினால் கதிமாறி நமது மண்டலத்திற்கு ஓரங்கமாக ஏற்பட்டிருக்கவேண்டுமென்று சாஸ்திரிகள் ஊகிக்கிறார்கள். ஆனால் இது எவ்வளவு யுகங்களுக்குமுன் நடந்ததோ தெரியாது.




விவரம்:—மத்தியில் சூரியன்

முதல் வட்டம் பூமியின் கதி (மார்க்கம்)
2-வது ,, செவ்வாயின் கதி
3-வது ,, பிரகஸ்பதியின் கதி
4-வது ,, சனியின் கதி
5-வது ,, யுரேனஸின் கதி
6-வது ,, நெப்டியூனின் கதி
7-வது ,, எங்கீ தூம கேதுவின் கதி
8-வது ,, பீலா தூம கேதுவின் கதி
9-வது ,, ஹாலி தூம கேதுவின் கதி

இப்பொழுது படத்தை ஜாக்கிரதையாய்ப் பார்ப்போம். மத்தியில் சூரியனும் அதைச் சுற்றிச்செல்லும் நாலைந்து முக்கிய கிரகங்களுடைய கதிகளும், சுலபமாய் விளங்கும். அவைகளுக்கு விபரீதமாய் வக்கிர கதிகளிற் செல்லும் மூன்று தூமகேதுக்களின் சஞ்சாரங்களும் காணுகின்றன. இவற்றிற்கு முறையே எங்கீ, பீலா, ஹாலி என்றிக்காலத்தில் பெயர் வழங்குகின்றது. கிரக கதிகளெல்லாம் அனேகமாய்ச் சுத்த வட்டமாகவும், தூமகேதுக்களின் கதிகள் மாத்திரம் கோழி முட்டை போல நீண்ட வட்டமாகவும் காணுகின்றன

இம்மூன்று தூமகேதுக்களும் கிரகங்களைப் போலவே சூரியனைச் சுற்றி வருவதில் 'எங்கி' $3\frac{1}{3}$ வருஷங்களி லொருமுறையும், 'பீலா' $6\frac{1}{2}$. வருஷங்களுக் கொருமுறையும், வருகின்றன 'ஹாலி' யோ, அவ்வாறொருமுறை சுற்றிவரு வதற்கு76-வருஷங்களாகிறதாக நிச்சயித்திருக் கிறது. இதை முதலில் 1682-ம் ஹூத்தில்மேற் சொல்லிய ஹாலி என்பவர் பார்த்து இதன் கதியை நிஷ்கரிஷித்துப் பிரசுரப்படுத்தினர். அதற்குமுன் அனேகர் தூமகேதுக்களைப்பார் த்து எழுதியிருந்த ரிகார்டுகளில் கண்டகுறிக ளையும், நியூடன் என்னும் பெரியககோளசாஸ் திரி செய்த கணிதயுக்தியையுங் கொண்டுதான் பார்த்த தூமகேது மறுபடி 1758-59 வரு ஷத்தில் நிச்சயமாய் வரப்போகிறதென்று எழு திவைத்தார். அந்தச்சாசன மின்னுமிருக்கி றது. அப்படியே தூமகேதுவும் வந்த தென் பதற்குத் தடையில்லை. ஆனல் ஜோதிஷட்ர் கிடும் 1742-ம் வஷருத்திலிறந்து போய்விட்ட தால் தான் கூறியது சத்தியமாய் நிறைவேறின சந்தோஷம் அவருக்கில்லாமற் போயிற்று. 76 வருஷத்திற்கொருமுறை வருவதில்நம்மிலனே கர்அதின் தரிசனம் ஒருமுறைதான் காணலாம். போனல் வராதாகையால் நாளை ஏப்பிரல் மே மாதங்களில் களோக காட்சியில் பிரியமுள்ள வர்களெல்லோரும் இவ்வபூர்வ தூமகேது வைத்தரிசித்துப்பலனடைய வேண்டு மாய்க் கோருகிறோம்.

---

### சுதேசமித்திரன் எழுதுகின்றது

தமிழ்ப் பாஷை விருத்தியடைவதற்கும், தமிழ் மக்கள் நலம் பெறுவதற்கும் இப்பத்திரிகை (விந்யா விஹாரிணி) ஓர் சிறந்த சாதனமாக இருக்கிறது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தமிழ் அறிந்தார் ஒவ் வொருவர் கையிலும் இந்தப் பத்திரிகை இருக்க வேண்டுவது மிகவும் அவசியம்.

## விநோத காண்டம்

### I. வாமதேவன்

(118-ம் பக்கத்தின்தொடர்ச்சி)

என்புத்திகெட்டியபடிப் பேசத்தொடங்கினீர், உண் மையிலேயே நீர் இப்பொழுது சொல்லியபடி முகூர் த்தத்துக்குச் சம்மதிக்கிறேன். நான் நினைத்தால் ஒருநாழிகைக்குள்ளாக வெகு கோலாகலமாக முஸ் தீப்டசெய்வேன். உமது நிலைமையோ, நீர் பல பந் துக்களோடு ஐம்பது, அறுபது வண்டிகளில் வந்தி றங்கினலும் வரவேற்க நான் தயாராயிருந்தும், சிறி தும் லச்சையின்றி யிரண்டுவண்டிகளில் நாலை ந்து ஜனங்களோடு வந்து சேர்ந்ததற்கே போது மான வழிச்செலவுக்கு யோக்கியதை யில்லாதிருக் கிறீர். இதற்கு எங்கு கடன்வாங்கினீரோ, என்ன கஷ்டப்பட்டீரோ, எவரிடமெல்லாம் பல்லைக்காட்டி யாசித்தீரோ, என் சம்பந்தியென்று சொல்லித்தான் இந்தத் தொகையையும் நீர் பெற்றிருப்பீர். இந்தச் சம்பத்தில் உமது வீட்டில் சாந்திமுகூர்த்தம். அத ற்கு என் பந்துக்கள் பலரை நான் அழைத்துவருவ தென்றே வைத்துக்கொள்ளுவோம். நீர் உமது வீட் டைவிற்றுத்தானே செலவிடவேண்டும். அப்படிச் செய்தால் முகூர்த்தம் எந்தவீட்டில் நடத்துவீர். வாடகை வீட்டிலோ, அல்லது உமது வீட்டை யே விலைக்கு வாங்கினவன் தயவாலிந்த முகூர் த்தத்தை யங்கு நடத்த இசைகிறானென்று வை த்துக் கொள்ளுவோம். அப்படியானல் முகூர் த்தம் நடந்தபிறகு நாங்கள் இவ்விடத்துக்குப் புறப் படும்போது நீரும் உம்மனைவி மக்களோடு அவ்வி டம்விட்டு நீங்கி உயர்ந்த சம்பளத்தோடுத்தி யோகஞ் செய்துவரும் வாமதேவன் காட்டை நோக் கிப் புறப்படுவீர்கள். அங்கு அவனுக்குக் கிடைக் கும் பதினைந்து காசுச்சம்பளத்தில் உங்கள் அருமை க்குடும்பத்தாரும் பலவகைப் பலகாரதினுசுகளோடு சுகமாயுண்டியருந்தி வளர்ந்துவரும் என் குழந்தை யும் சாப்பாடு தள்ளவேண்டும். நல்லயோசனைசெய் தீர். அந்த அறுவருப்பான சோற்றைத்தின்று நீங் கள் வழக்கம்போற் சுகமாய் வாழ வென்கண்மணி மங்களம் ஊழியஞ் செய்யவேண்டியதும், நியாயந் தானே. நீர் போய்வாரும். உமது அருமைத் திருமக ஞர் என் மகளைப்போன்ற மனைவியை வைத்தாளத் திறமைபடைத்தபோது சாந்தியைப்பற்றி யோசித்

துக்கொள்ளலாம். போதும், ஆரடா வண்டிக்காரர் கள், வண்டிகளை யோட்டுங்களேண்டா,'' எனச்சொல்லி வீட்டினுட் சென்றனர்.

இத்தனை பேச்சுகளையு மிரண்டு நிமிஷங்களுக்குள் அதிர் வேட்டு வெடித்து, நெருப்புப் பொறிகள் சிதறுவதுபோல வாறி யிறைத்த மானுடமிருகத்தை நோக்கித், தன் வினையின் பயனைப் பகுத்தறிய வியலா முழுமதிக்காக இரங்கி, "ஐயா! எங்களை மாத்திரமன்றித் தங்கள் மருமகளையு மிங்ஙன மிகழ்ந்து பேசவேண்டுமோப்போலத்தங்களுக்கு நாங்கள் அத்தனை கொடுமைகள் என்னசெய்தோம்? நல்லவுயர்பதவியிலிருந்து ஏழையானது என் ஜன்மாந்திரபாபத்தின் பயனேயாயினும், அதற்காகத் தங்கள் மருமகளையு மிகழ்ந்து பேசவானேன். உங்கள் மருமகன் குழந்தை மேன்மையான பட்டப்பரிட்சை தேறியிருக்கிறான். சில நாட்களுக்குள் இன்னும் மேலான வுயர்பதவியையு மடைவான். சென்றவருஷத்திய ஆபீசு பரிட்சையில் தேறியதால் அவனுக்கிப்பொழுது சம்பளம் ரூபாய் முப்பது கிடைக்கிறது. வேறொரு போட்டிப் பரிட்சைக்கும் பணம் கட்டிப் பரீட்சையிலும் நன்றாய் விடைகளெழுதியிருக்கிறானாம். தெய்வகிருபையாலிந்தப் பரீட்சையில் தேறிவிட்டால் மேலான வதிகாரமும் உயர்ந்த சம்பளமும் பெறுவான். இளையவன் கோவிந்தனுக்குக் கொடுங்காவூரில் சம்பள மிருபத்தைந்து ரூபாய்க் குயர்த்தப் பட்டிருப்பதாக அவன் வரைந்து விடுத்த கடிதம் நேற்றுமாலை யெனக்கிவ்விடத்தில் கிடைத்திருக்கிறது. மற்றக்குழந்தை நாராயணனோ வெகு ஜாக்கிரதையாய் வாமதேவன் மேற்பார்வையில் கச்சேரி வேலைகளை யெல்லாங் கற்றுவிட்டான். இன்னு முயர்ந்த சம்பளத்தில்கூடியசீக்கிரத்திலுயர்த்தப்படுவான். அப்போது அவனுக்கும் கோவிந்தனுக்கும் கிடைக்கும் சம்பளங்களைக்கொண்டு நாங்கள் தம்பதிகளும் குழந்தை ராஜாமணியும் காலக்ஷேபத்தை நடத்திக் கொள்ளுகிறோம். அப்படியானால் இப்பொழுது வாமதேவனுக்குக் கிடைத்துவரும் முப்பது ரூபாய் சம்பளத்தில் அவனும் மிகச்சுகவாசியாகிய குழந்தை மங்களமும் கஷ்டமின்றி யுண்ணலாமல்லவா? நானுமிங்கு ஐந்தாறுதினங்கள் தங்கியதில், எங்கள்மருமகளின்ஒழுக்கங்களைக் கவனித்தேன். அவள் தன் கணவனோடு வாழ்ந்து அவனுக்கிணங்க எவ்வாற்றானு முற்றமனைவியா யிருப்பாளென்றே நான் எண்ணுகிறேன். தாங்களிப்பொழுது கோபாவேசத்தோடு எங்களையும் அவள் கணவனையு மிகழ்ந்துபேசியதைக் கேட்டிருந்தாலுங்களுக்கே புத்தி கூறுவாளென்று நான் நிச்சயமாகச் சொல்லலாம். அத்தனை அன்பாக அவளிந்தச் சில நாட்களில் எங்கள்பாலொழுகிவந்தனள். எனக்கும் ஒருவேளை பகவத்கிருபையால் பென்ஷனுத்தரவு சீக்கிரம் கிடைக்குமென ஏகாதிபத்திய ஆபீசிலுத்தியோகத்திலிருக்குமெனது நண்பர் ஒருவர் வரைந்திருக்கின்றார். கோவிந்தன் சம்பளம் உயர்வும், என் பென்ஷன் விஷயமும், குழந்தை மங்களம் ருதுவான முகூர்த்தப்பயனை வெங்களுக்குச் சித்தியாயிருக்க, அவள் வெகு செல்வமாயில்லறவாழ்வு நடத்துவாளென்ற குறிகளே தோன்றுகின்றன. அப்படிச்சிருக்க அந்தக் குழந்தை மனதுக்கு மொவ்வாதபடி யேனிப்படிக் கொடிய பேச்சுகள்பேசுகிறீர்கள்?'" என்றனர் வாசுதேவய்யர்.

வீட்டினுட்சென்ற வேதாசலய்யர் இத்தனை பேச்சையுங் கேட்டு மறுபடியும் ஓடோடியே தெருவாசல்வந்து ஆக்குரோஷம் பொங்க "ஓய்! படுபாவிப் பிராம்மணா! அந்தக்குழந்தை மனதிலும் விஷத்தை யூட்டிவிட்டீரா? இதென்ன அக்கிரம மாயாவித்தனமாயிருக்கிறதே. என்னென்னமோ பழையபுராணங்களையெல்லாஞ் சொல்லி, சீதை ராமனோடு காட்டுக்குப் போனதும், பாஞ்சாலி பாண்டவரோடு வனஞ்சென்றலைந்ததும், சந்திரமதி கணவரோடு நாடு நீங்கினதுமாகப் பல பொய்களைப் புகட்டித், தரித்திரப் பஞ்சமான அந்த வாமதேவப் பயலோடு என் குழந்தையுங் கஷ்டமடையவன்றோ உபதேசித்துவிட்டாற்போலிருக்கிறது? என் குழந்தையின் கதி யிங்ஙனமாயிற்றோ? ஆரடியங்கே. குழந்தையையிந்தப் பாதகர்களிடம் ஏண்டி அடிக்கடி யனுப்பிக் கெடுத்துவிட்டீர்கள். ஜாலக்காரபிராம்மணனுச் சுதே யிந்தக்கிழம். குழந்தை யினியாகிலும் இவரை யடுக்கவிடாதீர்கள். ஐயா நீர்வெகு யோக்கியர். ஒரு நாழிகைக்கு முந்தியே புறப்படும். இனி யிங்கொரு வினடிநை யிருந்தீரானாலுமத்து மானந்தக்காது. மரியாதையா யிந்தமட்டோடே போய்விடூர். சொன்னேன், சொன்னேன். முக்காலுஞ் சொன்னேன்" என்று கடுகடுத்துரைக்க, முதியவர் வெகுவமைதியாய், "ஐயா, அந்தக்குழந்தை என் வாமதேவனை அக்கினி சாட்சியாய் மாலையிட்ட அன்றே அவள் பாக்கியவதியென்று சொல்லவேண்டும் அதற்கேற்க அவளின்குணங்கள் களங்கமற்றிருக்கின்

றன. அவள்மனதிற் படிந்துள்ள நன்மைகளோ அமிர்ததுல்லியமானவை. அவள்மனதை விஷமூட்டுவிக்க யாவராலும் முடியாது. மற்றுமது விமிர்சையைப் பேசவென்றாலோ, இரண்டுவெண்டிகளில் நாங்களைந்தாறு ஜனங்கள் வந்தவர்களையே குற்றங்குறையின்றியுபசரிக்க வியலாதலைந்துபோன நீர், ஐம்பதறுபது வண்டி ஜனங்களை நானழைத்து வந்திருந்தாலெங்ஙனம் வகிப்பீர்? இதையறிந்தே நான் ஜாக்கிரதை கொண்டேன். என் மகன் தரித்திரனென்றீர். அற்பச் சம்பளக்காரனென்று பரிகாசஞ் செய்தீர். ஆயின் உமக்கிருக்கும் அளவிறந்த ஆஸ்தியிலிருந்து ஒரு பாகத்தையுமது மகளுக்கென்று கொடுத்துத் தனிகனுக்கிவிடலாமே. அந்தச் சொத்திலிருந்து ஒரு காசளவேனும் நாங்கள் விரும்புவதில்லையென உமக்குறுதிமொழி கொடுக்கிறேன். உமது குழந்தை மிக மேன்மையாய்க் கணவனோடு வாழ்ந்து காலா காலத்தில் பெற்றுப் பெருக நாங்கள் கண்டும் கேட்டுஞ் சுகிப்போம். அதை நீருமடைய இயலாதபடி யிப்பொழுதே வினையை விதைக்கத் தொடங்கியிருக்கிறீர். இங்கு நின்று நானும்மோடு எசிக்கொண்டிருத்தல் தகாது, எல்லாமீசுவர கிருபைபோல் நடக்கட்டும்" என்று சொல்லித் தம் ஜனங்களோடு வண்டிகளேறித் தம் கிராமம் நோக்கிப் புறப்பட்டுப் போயினர் நம் வாசுதேவய்யரும்.

இவர் இங்ஙனம் வண்டியிலேறிச்சென்று விட்டபடியால் இவரைத் தெருவில் பகிரங்கமாயோடிச் சென்று வழிமறித்துப் பேசுவது தனக்கு அந்தஸ்துக் குறைவென்றெண்ணிய வேதாசலய்யர், அடங்காக் கோபத்தோடு வீட்டினுட் சென்றதும், சென்ற சின்னாட்களாக இரவுகளில் மணையில் வைத்துப் பாடுகிறதென்ற வழக்கத்துக்குட்பட்டு வெகு நேரம் வரையில் நித்திரையின்றியும், நாடோறும் காலை வேளைகளில் ஆற்று நீரில் குளித்து வழக்கத்துக்கு விரோதமாய் அகாலத்தில் விருந்துண்டிகளருந்தியும், அதனாற் சரீரத்திற் சற்றுச் சுகக்கேடுண்டாகி அன்று காலையில் ஜலதோஷம், தலைவலி, சரீரமெல்லாம் ஒருவித நோவுடன் சிறு ஜ்வரக்கோளுங் கொண்டு வாடிய முகத்துடன், தன் மாமி மாமனை வீட்டினகத்தேயே நமஸ்கரித்து அவர் ஆசீர்வதிக்க, தன் சுகக்கேட்டை அவர் அறியாவண்ணமுடனே தன் அறையிற்சென்று படுத்திருந்த குழந்தைமங்களத்தண்டையோடிச்சென்று, "குழந்தாய்! மங்களம்! உன் விதியிப்படியோ ஆயிற்று. நான் படுபாவித் தகப்பன் இந்தச் சண்டாளப்பாபிப் பிராம்மணனுடைய மகனுக்குக் கொடுத்து அந்த முழுமூட மருமகனும் இந்தக் கிழங்களின் பேச்சைக் கேட்டு மண்ணாந்தையாய்ப் புத்தி கெட்டுப்போக உன் வாழ்நாளையெல்லாம் கெடுத்தேனே. அம்மா! என் கண்மணி! நீயினியிந்தத் துரோகிகளின் வீட்டுக்குப் போனால், இப்பொழுதே யித்தனை கோபத்தோடு போயிருக்குமிந்தக் கிழங்களிரண்டும், உன் புருஷனுக்கு ஒன்றுக்கு நூறாய்க் கண்கட்டிச் சொல்லி அந்த மூட்டாள் பயலைக்கொண்டு உனக்கேதாவது விஷமூட்டுவித்துக் கொலைசெய்துவிடுவார்கள். நானோ இனி இந்தப் பிச்சைக்காரப் பயல்கள்முகத்தை விழித்துப் பார்க்கமாட்டேன். அப்படி நானும் உன்னைக் காணாதிருக்க, உன் கணவனுன்னைப் பலவிதத் துன்பங்களுக்கு முட்படுத்த, அவற்றை யறிந்தும் அகற்றும் வகையில்லாது போகுமன்றோ. அம்மா நீயினி அங்கு போகவேண்டாம். என் குழந்தை ராஜாவோடு நீயுமிரண்டாவது ஆண் குழந்தையாக நினைத்து அவனைப்போலவே யுனக்குமிந்தக் குடும்ப சொத்திற் பாதி கொடுத்து விடுகிறேன். நீ சுகமாயுண்டுடுத்தி வாழலாம். இது உன் தலைவிதியென்றிருப்பதே நன்று" எனக் கூறி அடுத்துட்கார்ந்தழத் தொடங்கினர். இவரின் மனைவி மற்றொரு பக்கமாய் மகளை யணைத்துக் கட்டிக்கொண் டோலமிட ஆரம்பித்தாள். இதன் காரணங்களொன்றையுமறியாத குழந்தை மங்களம், இங்ஙனம் தன் கணவன் வீட்டாரை வாய்க்கு வந்தபடி தாறுமாறாய்த் தூஷித்துப் பேசித்தன்பாலோடிவந்து ஏதேதோ பிதற்றியழும் பிதா ஒரு பக்கமும், தன்னைக் கட்டியிறுகவணைத்துக் கதறுந் தாயொரு பக்கமும் நெருக்கக்கண்டு, பிரமித்து, யாதுந் தோன்றாளாகி, மதிமயங்கி மூர்ச்சையாயினள். சிறிதுநேரத்துக்கு முன் மங்களம் தன் கணவருக்கு இவ்விடத்திய செய்திகளை விவரித்துத் தன் மாமன் மாமி அன்று தென்பொதிகாபுரத்துக்கு புறப்பட்டுப் போவதையும் குறிப்பிட்டு வரைந்த கடிதத்தை மங்களத்தின் தாய் தந்தையறிந்தால் பிரமாதம் விளையுமென முன் சம்பவங்களாலறிந்திருந்த பொன்னத்தை, அக்கணமே கையிலெடுத்துப் பின் வழியே தபாலாபீசுக்குச் சென்று தபாற்பெட்டியிலிட்டுத் திரும்பிக்குழந்தை மங்களத்

துக்கு எதாவது கஷாயம் வைத்துக் கொடுத்துச் சிகிச்சை செய்யவென்று அவள் தன்னறையிற் புகவும், அங்கு இந்த அலங்கோலத்தைக் கண்டாள் கண்டும் தன் அண்ணன் வேதாசலய்யரும் அவர் மனைவியும் குழந்தையை அடித்த இப்படி அழுங் காரணமறியாது அடுத்துச்சென்ற குழந்தை கை கால்கள் அசையாமலும், வேறு ஜீவசேஷ்டைபொன்றுந் தோன்றாமலுங் கிடக்கக்கண்டு மனம் திடுக்கிட்டு மங்களத்தின் பாற்றான்கொண்ட அன்புப் பெருக்கால் தன் அண்ணன் அண்ணி கோபித்திடுவரோவென்பதையு மோராது குழந்தையினுயிரே பெரிதெனக்கருதி, "அண்ணா,! அண்ணி,! குழந்தையைக் கொன்றுவிட்டீர்களே, ஐயோ குழந்தையின் சுவாஸம் அடங்கிவிட்டதே. ஒதுங்குங்கள், ஒதுங்குங்கள்" என்று கூவி அவ்விருவரையுங் கைப்பிடியாய்ப் பிடித்தகற்றி, ஓடிச்சென்றொரு செப்பில் நீர்கொணர்ந்து நாலைந்துகை நீர் முகத்தில் வாறியிறைத்து, முந்தானையால் முகத்தையும் கண்களையுந் துடைத்து, அடுத்திருந்ததோர் கைவிசிறியை யெடுத்துக் காத்திடுகின்றாள். குழந்தையோ கைகாலிறக்கமன்றிக் கண்ணைத் திரும்பிப்பாராது கிடந்தபடியே கிடக்கிறாள். இதனைக்கண்டு அய்யரும் அவர் மனைவியும் இன்னும் அவ்வீட்டிலுள்ள மற்ற ஜனங்கள், அங்கு வந்து கூடியவர்களுமாய் விஷயத்தை முற்றிலு மறிந்து வைத்தியரை யழைத்துவர ஆள்விடுத்தனர். இச்செய்தியை அறிந்த அண்டை அயல்வீட்டு ஜனங்களும் மங்களத்தின்பாற்சிறந்த வன்புளோராதலால் வீட்டினுட்சென்று செய்தியைச் விஸ்தாரமா யறிந்த "ஐயோ, குழந்தை பத்துநாளாய் வேளைக்குச் சோறும் ராத்தூக்கமு மில்லாது களைத்தும் சளைத்து மிருந்தது. போதாக்குறைக்கு இந்த இரண்டு தடிகளும் மேலேவிழுந் தமுக்கிவிட்டதுகள். முகத்திலே ஜீவகளைகூட மாறிவிட்டதே. இனிப்பிழையாது. ஆனாலும் பெரிய வைத்தியர்வந்தால் ஒரு வேளை அவரின் கைவாசிக்குப்பிழைக்கும் தலைவிதி யெப்படி யிருக்கிறதோ. ஐயோ, இந்தக் குழந்தை ருதுவான வேளையிப்படியாயிருந்தது. அந்தப் பரமசாது வாசுதேவய்யருக்கு ஏற்கெனவே வந்திருக்கும் கஷ்டங்கள் போதாதா. இதுவுமா வரவேணும். நேற்றைக்குக்கூட இந்தக் குழந்தையைத் தங்கள் விடுதிக்கழைத்து வரச்சொல்லி யிவள் ஸ்ரீ பாகவதத்தில் பிரக்லாததுதி, துருவஸ்துதி முதலிய சுலோகங்கள் சொல்லுவதைக் கேட்டுப் பரமானந்தத்தோடு இவளைத் தீர்க்க சுமங்கலியாய்ப் பலமக்கட் பேறுபெற்று வாழ்வாயென்றனரே. இன்றைக்கு இந்தப் பெண்ணுக்கு இப்படி நேருமென்பதை யறியவில்லை, பாவம். அவர்கள் புறப்பட்டுச்சென்று இன்னுமிரண்டு நாழிகைகூட ஆகவில்லையே இந்தப் பெண்ணினிப் போதைப நிலைமையை அறிந்தால் அவர்கள் ஒரு வேளை திரும்பி வந்து விடவுங்கூடும். ஆனால் இந்த பிராமணன் இன்று அவர்களை யிகழ்ந்து பேசியபிறகு அவர்கள் எனிங்கு வருவார்கள். இந்தச் செய்திகளை யெல்லாம் கச்சேரிக்குப் போயிருக்கும் ராஜாவாவத றிந்து அவன் வந்தால் வேண்டியதைச் செய்வான். எல்லாவற்றிற்கும் நான் போயென் தமையனை யனுப்பி ராஜாவுக்குச் சங்கதி விவரத்தை தெரிவிக்கிறேன்" என்போருமாய் அங்குக் கூடி நிற்குமவரை நோக்கிடினும் முகத்தில் துக்கக் குறிகளே காண்கின்றன

---

சமீபத்தில் பரோடா மந்திரியாக ரோமேஸ் சந்திரதத் ஒரு கூட்டங்கூடி பொதுப்பாஷையாக ஹிந்திபாஷையைப் பாரதவருஷ முற்றிலும் பரப்புவிக்க வேண்டுமென்று தீர்மானித்தனர். தக்ஷண இந்தியாவிற்குமட்டும் இப்பாஷாப்பியாசம் ஆரம்பத்தில் அதிக சிரமம் தரும். மற்ற இதர இடங்களில் இப்பாஷையின் பதங்கள் மற்ற பாஷைகளுடன் கலந்தே காணப்படுகிறது. இது சமஸ்கிருதத்தினின்றும் பிறந்தது. ஆங்கிலம் எவ்விதமாக நம் நாட்டிற் பரவிற்றென்பதை நாம் நன்றாக ஆராய்வோமானால் ஹிந்தி பாஷையை அனுஷ்டானத்துக்குக் காலக்கிரமத்தில் கொண்டு வந்துவிடலாமென்று தாராளமாய்ச் சொல்லலாம்.

* * *

கோயம்புத்தூரில் இதுவரை கம்மிட்டியாரால் நடத்தப்பட்டுவந்த இரண்டாவது வகுப்புக்காலேஜ் இனி கவர்ன்மெண்ட் உடைமையாகப் போகிறதென்றும், அதே தரபில் நடந்து வருமென்றும் கேள்விப்படுகிறோம். இவ்வூருக்கு அக்ரி காலேஜ், பாரஸ்டு காலேஜ் முதலிய பெருங்கலாசாலைகள் வந்துகொண்டிருப்பதால், இனிச் சாமான்னியக் கல்வியிலும் இரண்டாவது வகுப்புக் காலேஜுக்குக் காலக்கிரமத்தில்முதல் வகுப்பாகி உயர்வதற்குச் சௌகரிய மேற்படுமென்று நம்புகிறோம்.


## 2. மதுரம்

(117-ம்பக்கத்தின் தொடர்ச்சி)

### 2-வது அதிகாரம்

சூரியாஸ்தமனஸமயம். அந்தச் சமயத்தில் சென்னை நகரின்கண்ணுள்ள உயர்ந்த கட்டிடங்களும், கோவில்களும், மசூதிகளும், கோபுரங்களும், ஸ்தூபிகளும் தங்கமலாம் பூசப்பட்டனபோற்றோன்றின. நல்லோர்கள் சிநேகம் அபிவிர்த்தி யடைவதுபோல் சாயங்கால மஞ்சள் வெயிலில் நிழல்கள் கீழ்த்திக்கை நோக்கி நீண்டு சென்றன. ஐரோப்பிய துரைகளும், துரைசானிகளும், மற்றமுள்ள கனவான்களும் வெளியிற் சென்றுலாத்தி வருவதற்காக ஒற்றைக்குதிரை சாரட்டுகளிலும் இரட்டைக்குதிரை சாரட்டுகளிலும், காலினுற்றள்ளிச்செல்லும் பைஸிகள் என்ற துவிசக்கர வண்டிகளிலும் ஏறிச் சென்றார்கள். உள்ளூர் வாசிகள் நாட்டுப்புரங்களிலிருந்து அந்நகரத்திற்கு வந்திருக்கும் தங்கள் உறவினரையும், நண்பர்களையும் அழைத்துக்கொண்டு, அவ்விடத்திய பல விநோத காட்சிகளைக் காண்பிப்பதற்காகப் போயினர். அந்திக் கடைகளிலும் பூக்கடைகளிலும் திரள் திரளாக நின்றுகொண்டு ஜனங்கள் சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்தார்கள். பல கலாசாலைகளிலுமிருந்து மாணாக்கர்கள் தங்கள் தங்கள் விடுதிகளை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் பந்தடி மைதானங்களிற் போய் பந்தடிக்கத் தொடங்கினர். வேறு சிலர் பந்தடித் தலத்தைச் சூழப்போட்டிருக்கும் ஆசனங்களிலுட்கார்ந்து பந்தடிப்பவர்களின் கை சாதுரியத்தைப் பற்றி மெச்சிக்கொண்டும், சமாசாரப்பத்திரிகைகளை வாசித்து அவற்றிலுள்ள விஷயங்களைப்பற்றியொருவரோடொருவரை யாடித் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டுக்கொண்டும் பொழுதுபோக்கினர். ஹைகோர்ட்டிலிருந்து ஜட்ஜிகள் வெளியேறிப்போனவுடனே பற்பல ஜில்லாக்களினின்று வியாஜ்ஜியங்களினிமித்தம் அவ்விடத்திற்கு வந்திருக்கும் கட்சிக்காரர்களில் அனுகூலமடைந்தவர்கள் மிகுந்தக்களிப்புடனும் அபஜயப் பட்டவர்கள் மனோவியாகுலத்துடனும் போனார்கள். அபஜயப் பட்ட கட்சிக்காரருடைய கேஸுகளை நடத்திவந்த ஹைகோர்ட் வக்கீல்களும் பாரீஸ்டர்களும் தங்கள் கட்சிக்காரர்களைப் பார்த்து "பயப்பட வேண்டாம் தகுந்த ஏற்பாடு செய்து சீமையப்பீலில் அனுகூலமாக்கிக்கொள்வோம்" என்று தைரியம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். கடற்கரையில் வெண்மணற்குன்றுகள் பொன்மணற் குன்றுகள் போல் ஜொலித்தன. நுரைகக்கமோதுகின்ற அலைகளில் சாயங்கால ரவிகிரணங்கள் பாய அவைகள் உருக்கிவிட்ட பொன்னீர் போலிலங்கின. பிரதிதினம் பார்த்துக்கொண்டே பழகியிருந்தாலும் அரசனைக் காணுந்தோறும் ஓர் வகையச்சமும் அபரிமிதமான கௌரவமும் மனதிலுதிப்பதுபோல கடலிலேயே சதா பழகிக்கொண்டிருக்கும் செம்படவர்க்கும் கூடக் கடலைப் பார்க்குந்தோறும் அச்சமும் கௌரவமான எண்ணமு முண்டாகுமாயின் மற்றவர்க்குக் கடலைக் கண்டவுடன் உண்டாகும் உள்ள நெகிழ்ச்சியைப் பற்றிக் கூறுவானேன். செம்படவர் கட்டு மரங்களிலும் தோணிகளிலும் சென்று மீன்களை ராசி ராசியாகப் பிடித்துக் கொண்டுவந்து கரையில் ஆவலோடு நின்றுகொண்டிருக்கும் தங்கள் மனைவிமாரிடம் கொடுக்க அவர்கள் வாங்கிக் கூடைகளில் நிரப்பினர். கடற்கரையிலுள்ள மணற்குன்றுகளில் வாலிபர் கூட்டம் கூட்டமாய் நின்று மற்போர் புரிவோரும் சொற்போர் புரிவோருமாயிருந்தனர். சில வாலிபர் வேடிக்கைக்காக பங்காளக் குச்சு நாய்களுக்குக் கோலைக்காட்டியதைக் கடலில் பலகஜ தூரத்திற் கப்பால் எறிய உடனே அந்தநாய்கள் கோல் வீழ்ந்த இடத்திற்குப் பாய்ந்துசென்று கோலைவாயிற் கவ்விக்கொண்டு மலைபோற் புரண்டுவரும் அலைகளில் உருண்டும் புரண்டும் முக்குளித்தும் கரைவந்து சேர எல்லாரும் கைகொட்டி யாரவாரித்தார்கள். கடல் வாராவதியின்மேல் திரள்திரளாய் ஜனங்கள் நின்றுகொண்டு அப்போதுதான் துறைமுகம் வந்துசேர்ந்த கப்பலினின்றிழியுமவர்களில் தூர தேசங்களினின்று வருவார்கள் என்று தாம் எதிர்பார்த்திருந்த தம் நண்பர்களையும் உறவினரையும் கண்டுபிடிப்பதற்காக ஆவலோடு இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். துறைமுகத்தில் வந்திருக்கும் போர்க்கப்பலைப் பார்த்து வருவதற்குத் தோணிகளிலேறி ஆயிரக் கணக்கான ஜனங்கள் போய்க்கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் நூதன கண்டத்தில் பிரகாசிக்க வேண்டுமென்ற இராகந்தான் உடலில் இராகமாகப் பரவியதோ என்னும்படி தரணியில் உடலம் சிவந்தது. அத்தருணத்தில் நாகரீகத்தில் சிறந்த கொஞ்ச வயதுள்ள யௌவன புருஷ

ரும் யுவதிகளும் அவ்விடத்திற் கொஞ்சம் வந்து கூடியிருந்தனர். அவர்கள் ஒருவரோடொருவராடும் தீஞ்சொற்கள் சமுத்திர கோஷத்தால் செவிப் புலனுக் கெட்டாவிடினும் உதடுகளின் அசைவை யாவலுடன் கண்ணுற்று இன்னது புகன்றனர் என்றூகித்து மகிழ்ந்தனர். உலகிலுதித்த மாந்தர்கள் மகிழ்ச்சி சிலகாலம் விர்த்தியடைந்தும் சில காலம் க்ஷீணித்தும் வருவதுபோல, லைட் ஹவுஸ் என்ற தீபஸ்தம்பத்தில் ஏற்றப்பட்ட விளக்கானது இயந்திரத்தால் சுழன்றுவருகையில் பிரகாசம் அதிகரித்தும் குறைந்தும் தோன்றியது. எவ்வகைத் துயர்க்கடலுளாழ்ந்தவரும் கடலைக்காணின் தந்துயரம் சில நிமிஷம் வரை மறந்து ஆனந்தக்கடலில் மூழ்குவரேல் கடலின் மகிமை யாவர் உரைக்கவல்லார். அந்த அந்திநேரத்தின் வருணனைமுற்ற வுரைப்பது நம்மாலாகும் காரியமன்றாகையால் நமக்கு வேண்டிய சில விஷயங்களைப்பற்றி மட்டும் இவ்விடத்திற் கூறுவோம்.



சேனெட்ஹௌஸ், சென்னை.

அந்த மாலைப்பொழுதில் செனட்ஹௌஸ் என்ற சர்வகலாசாலைச் சங்கக்கட்டிடத்திற்கெதிரில் கடல் கரை வழியே செல்லும் ரஸ்தாவில் இரண்டு வாலிபர் மெதுவாக உலாவிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவனுக்கு வயது இருபத்தொன்று. சிவந்த நிறமுள்ளவன். கண்டவர்மனங்கவரும்படியான கூர்மையான அழகிய கண்களையுடையவன். பவளத்துண்டுகளினிடை முல்லையரும்புகளைப் பதித்தாற்போன்ற பல்வரிசை, அவன் முகத்தின் வசீகரசக்தியைப் பெருக்கியது. முழங்கால்வரை நீண்ட அவன் கரங்கள் அவன் ஆணிற்சிறந்தோன் என்பதற்குச் சாக்ஷியாயின. காதிலணிந்த கமலக் கடுக்கன் அறுகம்புன்னுனி நீர்போல் நானாவருணங்களுள்ள காந்திகளைக் கொப்புளித்துக்கொண்டு நக்ஷத்திரத்திரள் போல் ஜொலித்தன. வெண்பனிக்கட்டி போனிறமுடைய அரைக்கைச் சட்டை யணிந்திருந்தான். உயர்ந்த வேலைப்பாடுள்ள தங்கக் கடிகாரச் சங்கிலி யவன் மார்பிற்புரண்டு கொண்டிருந்தது. அந்தச் சங்கிலியின் நுனியில் தொங்கக்கட்டித்துவளும் சுவர்ணமயமான மீன் அவனால் வெல்லப்பட்ட மன்மதன் ஸமர்ப்பித்த கொடிபோலிருந்தது. நீண்ட தன் கேசத்தை நுனியில் முடிச்சிட்டுத் தொங்கப்போட்

டிருந்தான். தலையில் சிவப்புப்பட்டு நூலாற் பின்னிய குல்லாயிருந்தது. அரையில் குதிகால்வரை விட்டுக்கட்டிய பட்டுக்கரைவேஷ்டியும் மேலேசரிகைச்சிட்டா போட்ட வீரவநல்லூர் அங்கவஸ்திரமும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. தந்தப்பிடியமைத்த கரியபளபளப்பான தடியைக் கைவிரல்களால் சிற்சில வேளைகளில் சுழற்றிக்கொண்டே போனான். மந்தகாச பூர்வகமாகப்பேசும் அவன் மதுரவசனங்களை அதிகக் கவனத்துடன் கேட்டுக்கொண்டும் இடையிடையே மறுமொழி பகர்ந்தும் சென்ற மற்றவனே இவனைப்பார்க்கிலும் வயதிலும் வடிவிலும் சிறியவன். பொதுநிறமான தேகமுள்ளவன். குறுகக்கத்திரித்த அவன் குடுமியைக்கண்டவர்கள் அவன் நவீன நாகரீகத்தை யனுசரித்தவன் என்று எண்ணுவார்கள். கறுப்புப்புள்ளிபோட்ட வெள்ளையுட்சட்டையும் ஊதா நிறமுள்ள உயர்ந்தபட்டுக் கோட்டும் (மேல்சட்டையும்) அணிந்திருந்தான். அவன்கையில் ஒரு புஸ்தகமிருந்தது. நடக்கும்போது கூட அவன் வாசித்துக்கொண்டு போவதை நீங்கள் கண்டால் அவன் வாசிப்பில் அதிக அக்கறையுள்ளவன் என்று எண்ணுவீர்கள். பாடங்களை இலகுவில் கிரகிக்க முடியாதவனே என்னவோ என்று எண்ணிலும் எண்ணலாம். யார் என்ன நினைத்தால் என்ன. அவன் வாசித்துக்கொண்டே தான் நடந்து போனான். அவன் பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

சங்கரய்யர், இது என்ன சங்கடம். நாளைக்கு வரும் தமிழ்ப்பரிக்ஷைக்கு வாசித்து வாசித்துப் பார்க்கிறேன், பாடங்கள் முடிகிற வகையாய் இல்லை. இந்த அழகர் கலம்பகத்தில் மறம் என்றும் குறம் என்றும் சம்பிரதம் என்றும் சுரம் போக்கு என்றும் துறைகளமைத்துப் பாடியிருப்பது மிக மனோகரமாயிருப்பினும், உரை யெழுதுவோர் பதசாரம் முதலியவற்றை நன்கு விரித்தெழுதாததால் விஷயங்கள் மனதில் தங்குவது கஷ்டமாயிருக்கிறது. நன்னூல் பெயரைக் கேட்டாலும் ஓட்டம் தான் நமக்கு. இன்னிசையள பெடையாம்சொல்லிசையளபெடையாம், ஆகு பெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் பேதமாம் இவற்றையெல்லாம் கேட்க நெஞ்சம் திடுக்கிடுகின்றது. மேலும் மேற்கதுவாய் மோனை, அடி முரண்டொடை, கழிநெடிலடி முதலிய பதங்களைக் கேட்டால் எனக்கு கிரேக்கபாஷையாயிருக்கிறது. இன்றைக்கு யாப்பிலக்கணம் ஆரம்பித்துவிடப் போகிறார். இன்றைக்கு யாப்பிலக்கணம் ஆரம்பித்துவிடப்போகிறார். என்று பல நாளும் திகில்பட்டுத் திகில்பட்டு "ரகாராதீனி நாமானி" என்று சொல்லி "மாரீசன் ராமனிடம் உண்டான பயத்தால் இராகம், இராஜீவம் முதலிய பெயர்களையும் கேட்க அஞ்சியதுபோல், யாப்பினிடம் உண்டான என் பயம் யானை, யாகம் முதலியவற்றையுங் கேட்கவொட்டவில்லை. பாடங்களைப் படிக்காமல் அலக்ஷியமாய் இருந்துவிடுவோம் என்றாலோ பரிக்ஷையில் மார்க்குக் குறைந்துபோம். நாவலர்க்குக் கோபம் கோடையிடிபோல் வந்துவிடும். என்னமோ என் தலைவிதி தமிழ் எடுத்துக்கொண்டேன். உங்களுடைய பாடு விசாரமில்லை. சமஸ்கிருதத்திலோ பாடங்களும் சொற்பம். உங்களுடைய சாஸ்திரிகளோ மகா சாந்த சுபாவமுடையவர்" என்று சொன்னான்.

சங்கரன்.—என்னசாமி நாதா இப்படிச் சொல்லுகின்றாய். தமிழ் மிக்க இனிய பாஷையென்றும், தமிழ் என்பதற்கே இனிமையென்று பொருளென்றும், ஸமஸ்கிருதத்திலிருப்பது போலவே தமிழிலும் சிறந்த உத்கிரந்தங்களிருக்கின்றன வென்றும், தமிழாய்ந்து ஆனந்திக்க அவகாசம் இல்லாதார் ஜன்மம் வீண் என்றும் உன்னுடன் வாசிக்கும் அனவரதம் சொல்லுவானே. அது என்ன ஒரே பாஷையானது உனக்கு வெறுப்பாகவும் அவனுக்கு விருப்பாகவும் இருப்பதற்குக் காரணம் யாது.

சாமி. உங்களுக்குத்தான் ஆள் அகப்பட்டானே திருநெல்வேலிப் பேர்வழி. திருப்பாற்கடல் ஆழத்தை மந்தரமலையறிந்திருப்பதுபோல தமிழின் ஆழ நீளமெல்லாம் அவன் அறிவான். அவனுக்குத் தெரியாத நூல்கள் தமிழிலிருக்கின்றனவோ என்னவோ சந்தேகந்தான். மெட்றிகுலேஷன் வகுப்பில் வாசிக்கும்போது "குத்துவாதை மிக நலியக்கும் பகர்ணன் குவலபத்தில்" என்ற அடிக்கு 'குத்துதலாலுண்டாகிய வேதனை' யென்று உபாத்தியாயர் அர்த்தம் சொல்லத் தொடங்கவே அனவரதம் சிரித்தான். உடனே எல்லாரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். உபாத்தியாயர் "என்ன அனவரதம்" இதற்கு வேறுவிதமாகப் பொருள் விசாரித்திருக்கிறாயா என்று கேட்க அவன் "க்ஷுத்பாதா" என்றது தமிழில் 'குத்துவாதை' என வந்ததென்றும் அதற்குப் 'பசிவேதனை' எனப்பொருள் என்றும்

நான் பொருள் விசாரித்திருக்கிறேன். அது சரியான அர்த்தம்தானே'' என்றானாம். அந்தக் காலத்திலேயே அவன் தமிழையவ்வளவு நுட்பமாக ஆராய்ந்திருந்தால் இப்போது பி. எ. வகுப்பில் வாசிக்கிற அவன் சாமர்த்தியத்தைப்பற்றிக் கேட்பானேன். நமக்குப் பேசுவது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிதாய் இருக்கிறது அவனுக்குக் கவிபாடுவது. சென்ற செவ்வாய்க் கிழமை நானும் அவனும் இராகவாச்சாரியும் பிளாக் டவுனுக்குப்போய்விட்டிவ்வழியே வருகையில் சந்திரன் உதயமாய்க் கொண்டிருந்தது. அப்போது இராகவாச்சாரி ''அடடா என்ன ஆனந்தமப்பா இந்தச் சந்திரோதயம்'' இந்தச் சந்திரோதயத்தைப் பற்றி நம்முடைய அனவரதம் ஒரு வெண்பா சொன்னால் எவ்வளவு மனோகரமாயிருக்கும் என்று சொன்னான். அப்பால் நாலடிதூரம் செல்லுமுன் அனவரதம் சந்திரோதய வெண்பா சொல்லுகிறேன் கேட்கின்றீர்களா என்றான். நாங்கள் பிரமித்துப்போய் வெண்பா சொல்லென்ற வாய்மூடுமுன் வெண்பாவா 'இம்மென்னும் முன்னமெழுநூறு மெண்ணூறும்'' என்றது இந்த அனவர்தத்துக்குத்தான் தகுமப்பா நாவலர் புலவர்க்கு வெண்பாப்புலி யென்று சொல்லிப் பயமுறுத்துவது பொய்யாக்கிவிட்டாயே. எங்கே வெண்பா சொல் கேட்போம் என்றோம். உடனே அவன்,

''செங்குமுதம் விள்ளும்
சிறார்குழவோ துள்ளுமதன்
கொங்குலவுமைங்கணை கைக் கொள்ளுமால்—
விருப்புடன் விண்ணேறி [திங்கள்
விளையாடக் கீழ்பால்
பொருப்பி லுதித்திடு மிப்பாது''

என்று பாட்டைச்சொல்லி முடிக்கவே இராகவாச்சாரிக்கும் எனக்கு முண்டான ஆச்சரியத்திற்கும் ஆனந்தத்திற்கும் அளவில்லை. இராகவாச்சாரி குதித்தான், கூத்தாடினான். அனவரதத்தைக் கட்டிக்கொண்டான். அவனிருகன்னங்களையும் தன் கரங்களால் தடவி தன் கன்னத்தில் நெறித்துக்கொண்டு என்னடா பாவி எங்கள் மனதையுருக்கிவிட்டாய். இப்படித்தான் வாய்க்குமா வெண்பா. சரஸ்வதிக்கு இவ்வளவு பக்ஷபாதமா. எங்கே இன்னொருமுறை அந்த வெண்பாவைச்சொல். விள்ளும், துள்ளும், கொள்ளும் பிராஸங்கள் வேறேயா. அந்த மூன்றாவது விஷயம் சொல்லியிருக்கிறாயே. 'மதன் கொங்குலவு மைங்கணை கைக்கொள்ளும்' என்று அதுதான் நம்முடைய வயதிற்கும் மனதின் பரிபக்குவத்திற்கும் ஏற்றது என்று சொன்னான். இப்போதும் இராகவாச்சாரி அனவரதத்தைக் கண்டுவிட்டால் ''கொங்குலவுமைங்கணை'' என்று சொல்வான். அப்படிப்பட்ட அனவரதத்தோடு என்னை ஒப்பிடுகிறதா. எனக்காவது நன்னூலில் வரும் ஆகுபெயர், அன்மொழித்தொகை முதலிய பெயர்களாவது தெரியும். அனேக மாணாக்கர் அப்பெயர்கூடக் கேட்டறியார்கள். நாவலர் நன்னூல் நடத்த வந்துட்கார்ந்தால் ஐயோ கஷ்டகாலம் இப்படி அர்த்தமில்லாத பெயர்களைச் சொல்லி இவர் நம்மைக் கழுத்தறுக்கவேணுமா என்பார்கள்.

சங்கரன்.—எங்கள் திருநெல்வேலி ஜில்லா தமிழ் பாஷைக்குப் பேர் பெற்றதென்று விளங்குகிறதா. தமிழ் மணக்கும் தென்றல் எங்கட்கு எப்போதும் கிடைக்கும். எங்களூரிலிருந்து அகஸ்தியகூடம் சுமார் முப்பது மைல்தானிருக்கும். எங்கள் ஜில்லாவில் பிறந்த அனவரதம் தமிழில் பாண்டித்தியமுள்ளவனாயிருப்பது ஆச்சரியமில்லை. ஆனால் இராகவாச்சாரிக்குத் தமிழினருமை இவ்வளவு அறியக்கூடிய சக்தி யெவ்வாறுண்டாயிற்று.

சாமி. இராகவாச்சாரிக்கே கொஞ்சம் தமிழில் விசேஷ பரிசயமுண்டு. மேலும் அவனுடைய பிதா தமிழிலும் சங்கீதத்திலும் சிறந்த ஞானமுள்ளவர். உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர். இராகவாச்சாரியின் தங்கையொரு சிறு பெண் மைசூரில் இருக்கிறாளாம். அவ்விடத்தில் வீணையும் சமஸ்கிருதமும் கற்றுவருவதாகக் கேள்வி.

சங்கரன்.—வாஸ்தவமாயிருக்கலாம். நான் முந்தாநாள் இராகவாச்சாரியின் ஜாகைக்குப் போயிருந்தபோது ஒரு வேடிக்கைப் பாட்டுக்கச்சேரி நடந்தது. அப்போது ஒரு சிறு பெண்வீணை வாசித்தாள் மிகவும் நன்றாகவாசித்தாள். குரலா குயில் தோற்றுப்போகும் சமஸ்கிருதத்தில் சில கீர்த்தனங்களும், கன்னடத்திலும் தெலுங்கிலும் சிலஜாவளிகளும் அக்ஷரசுத்தமாயும் உருக்கமாகவும் பாடினாள். சிறு பெண்ணாக இருந்தாலும் ஜாவளிகளின் தாத்பரியரஸத்தைத் தெரிந்து பாடுவதாகவே தோன்றியது. பார்வைக்கு சுந்தரமாயிருக்கிறாள். நாகரீகத்திற்கும் குறைவில்லை. மைசூர் முதலிய சுதேச இராச்சியங்களிலிருக்கும் பெண்களே சமஸ்கிருதம் ஆங்கிலம் முதலிய பாஷைகளிலும், சங்கீதத்திலும், வீணைமுத

லிய வாத்தியங்களிலும் தேர்ச்சியுள்ளவர்கள் என்று நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோமல்லவா

சாமி! அது என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள், நம்முடைய நாடுகளிலும் தமிழ் தெலுங்கு முதலிய பாஷைகளிலும் வீணை முதலிய வாத்தியங்களிலும் தேர்ச்சியடைந்த பெண்கள் எத்தனையோபேர் இருக்கவில்லையா, என் பெரிய தாயாருக்கு மதுரம் என்று ஒரு பெண் இருக்கிறாள். வயதுபத்து அல்லது பதினொன்று தானிருக்கும். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் வீணை வாசித்தால் கேட்கக் கேட்கத் தெவிட்டாது. பியானுகூட இப்பொழுது பழகுவதாக ப்பிரஸ்தாபம். தகப்பனர் சப்ஜட்ஜியாக இருப்பதால் செல்வத்துக்குக் குறைவில்லை. அதிலும் இவள் ஒரே பெண்வடிவிலும்நாகரீகத்திலும்நானிதுவரைபார்த்த பெண்களைப் பார்க்கிலும் உயர்ந்தவள்தான். ஆனல் நீங்கள் சொல்லும் இராகவாச்சாரியின் தங்கையை நான் பார்க்கவில்லையா கையால் அவளைப்பார்க்கிலும் மதுரம் உயர்ந்தவள் என்று இப்போது என்னல் சொல்லமுடியாது.

(இன்னும் வரும்.)

---

### "சுளிக்கச் சொல்லேல்"

இதன் பொருள். சுளிக்க—(கேட்பவர்) கோபிக்கும்படியாக, சொல்லேல் (நீ ஒன்றையும்) பேசாதே என்பதாம், எனவே சுளிக்கச் சொல்லலால் தீமை விளையுமென்பது பெறப்படுகின்றது நாவினுல் விளையும் நன்மையையும் அதனுல் விளையுந் தீமையும் மனுஷனுடைய வேறு எந்த அவயவத்தினுலும் விளையாது. ஆதலால் "நயம்படவுரை" என ஆன்ருேர் சொற்றவாற எவரோடாயினும் நன்மையான வார்த்தைகளைப் பேசல்வேண்டும். கொடுஞ்சொல்லால் இகழப்பெற்றவன் அச்சொல்லை நினைக்குந்தோறும் அது அவனுடைய மனத்தை அம்புபோல் ஊடறுக்குமே. இது நோக்கியே கம்பரும் "வில்லம்பு சொல்லம்பு மேதினியிலிரண்டுண்டு" எனக் கூறினர். வன்சொல்லின் கொடுமை நோக்கியே திருவள்ளுவரும்

"தீயினுற்சுட்ட புண்ணுள்ளாறு மாருதே
நாவினுற் சுட்ட வடு" என்று கூறி யருளினர்.

மணலில் மறைந்துகிடக்குந் தேரை கத்த, அச்சத்தத்தின் வழியேசென்று பாம்பு அதனை ஆராய்ந்து அகழ்ந்து பிடித்து உண்ணுகிற்கும். இதனுற்றேரை தன் வாயாற்ருனே தனக்குத் தீமையைத் தேடிக்கொள்ளும் அதுபோலவே அறிவிலார் தம்பேச்சால் தமக்குத்தாமே துன்பத்தை வருவிக்கின்றனர்.

## புஸ்தக விமர்சனம்

1. தாவரநூல்.—(இரண்டாம் பதிப்பு) க. அரங்காசாரியார், எம். ஏ., எல் டி; அக்ரி காலேஜ், கோயமுத்தூர். விலை ரூ 1—8

இப்புஸ்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய உடமைக்காரருக்கு வந்தனம். முதற்பதிப்புப் பிரசுரமாகி இரண்டு வருஷங்களாவதற்குமுன், இரண்டாம்பதிப்பு வந்ததே புஸ்தகத்தின் யோக்கியதைக்குத் தக்க சாக்ஷியமாம். இரண்டாம் பதிப்பில் ஔஷதிகளின் குடும்பங்களைக் குறித்து இரண்டு அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன நூலாசிரியர் முகவுரையிற் சொல்லுமாறு கிராமாந்தரங்களில் பள்ளிப்பிள்ளைகளும், விவசாயத்தில் சிரத்தையுள்ளவர்களும், பூதக்கண்ணுடி முதலிய சாமான்னிய சாதனங்களைக் கொண்டு, ஔஷதிவர்க்கங்களிற் காணும் மகிமைகளை யறிவதற்கு இப்புஸ்தகம் உத்தமமான மார்க்கதரிசியென்று நாம் மனப்பூர்வமாய் நம்புகிறோம். தமிழ்நாட்டிலுள்ளோர் அனைவருக்கும் இப்புஸ்தகத்தைப் படித்து நற்பயனடையும்படி வற்புறுத்துகிறோம். சித்திரங்கள் வெகு சிரமப்பட்டு அமைக்கப்பெற்றனவைகள். எழுதியவர் விஷய ஞானத்தில் நிறைகுடமாதலால் நம்போலியருடைய ஸ்தோத்திரங்கள் அவர் விஷயத்தில் அனுவசியம். திராவிட பாஷைகளில் மீதியிருக்கும் மூன்றிலும் இப்புஸ்தகம் சீக்கிரத்தில் வெளியாகுமென்றும், இதை யனுசரித்து நடக்கவேண்டிய மற்றுள்ள வேலைகளைக் காலக்கிரமத்தில் ஸ்ரீமான் அரங்காசாரியவர்கள் செய்து தமக்கும் இதரர்களுக்கும் சாபல்லியத்தைச் செய்துகொள்வார்களென்றும், அதற்கு வேண்டிய சௌகரியங்களைப் பகவான் அனுக்கிரகிப்பாரென்றும் பிரார்த்திக்கிறோம்.

2.—ராஜமய்யர் சரித்திரம்.—ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர் அவர்கள் பி. ஏ. எல். டி., ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர். விலை அணு 8.

இச்சிறு புஸ்தகம் கமலாம்பாள் முதலிய அருமைத் தமிழ்ப் புஸ்தகங்களுக்குக் கருத்தாவாகியும், சுகுண சீலருமாயிருந்த ஸ்ரீமான்-ராஜமய்யரவர்களுடைய மனுேதருமத்தை விளக்கி, சித்திரப் படங்களுடன் நல்ல காகிதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அவர் பிறந்து வளர்ந்த கதை சொல்லுவதில், ஸ்ரீமான்-கஸ்தூரிரங்க அய்யரவர்கள் மேனட்டுச் சம்பிரதாயத்தை யனுசரித்து எழுதியிருப்பது ஒரு விசேஷம். நமது நாட்டுச் சிறுவர்கள் இம்மாதிரியுள்ள ஜீவன சரிதங்களைப் படித்து, சுகுணங்களை விருத்திசெய்து கொள்வதற்கு இம்மாதிரி 'உபதேசமாலை' நன்ருயமைந்த சாதனமென்பது நமது நம்பிக்கை.

3. திருக்குறள் வசனம்.—பு. து. இரத்தினம் பிள்ளையவர்கள். விலை ரூ. 1

இப்புஸ்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய நடேசன் கம்பெனியாருக்கு வந்தனம். திருக்குறள் தமிழ்ப் பண்டிதர்களுக்கு மட்டுமேயல்லாமல், பாமரர்களுக்கும் சாமான்னியமாய்த் தமிழ் படித்தவர்களுக்கும் வேண்டிய உடமையாதலால், இவர்களுக்குபயோகமாகும்படி வசன நடையில் பொழிப்புரையாக ஸ்ரீமான்-இரத்தினம் பிள்ளையவர்கள் எழுதிப் பிரசுரம் செய்தது மெத்தவும் சிலாகிக்கத்தக்கதேயாம். முகவுரையில், மேற்படியார் சொல்லியிருக்கிறபடி இன்னொரு பதிப்பில் மூலத்தையும் சேர்த்துவிடுவாரென்று நம்புகிறோம். தவிர, பகவத்கீதை முதலிய நூல்களுக்கு மேனாட்டு முறைப்படி நடைபெறும் விஷய விவரணமொன்றுங் கூட்டிவிடுவாராகில், படிப்பவர்களுக்குச் சௌகரியமதிகரிக்குமென்று நம்புகிறோம்.

4. "சந்திரகாந்தா" ஓர் துப்பு அறியும்.— ஜெ. ஆர். ரங்கராஜு அவர்கள் இனிய தமிழ் நாவல், விலை அணா 12.

ஸ்ரீமான்-ரங்கராஜு அவர்கள் 'இராஜாம்பாள்' என்னும் நாவல் எழுதிக்கைபழகியவராதலால், தமிழ் வசனநடை படிப்பதற்குச் சுலபமாயும், இனிமையாயுமிருக்கிறதென்பதில் ஆக்ஷேபமில்லை. கடிதம், அச்சு, சித்திரப் படங்கள் முதலியவைகளும் வேண்டியபடியேயிருக்கின்றன. விஷயங்கள் மொத்தத்தில் நம்மவர்களில் சிறுவர்களும், ஸ்திரீகளும் படித்து ஆனந்திக்கக் கூடியவைகளே. ஆனால் ராஜு அவர்கள் இனி வேறு நாவல்கள் எழுதுவதாயிருந்தாலும், இதை இரண்டாம் பதிப்புச் செய்வதாயிருந்தாலும், உபயோகமாகும்படி ஒரு சில்லரை விஷயம்மட்டும் நாம் அவரைக் கேட்டுக்கொள்ள வேண்டுகிறோம். பண்டார சன்னதிகள் விஷயமாய் எவ்வளவு கரேமாய் எழுதியபோதிலும் நமக்குச் சம்மதமே யென்றாலும், இருட்டறை யோகாப்பியாச தரிசனத்திற்குத தீபாராதனம் செய்து சித்திரப்படத்துடன் விளக்குதல், சாமான்னியமாய்ச் சிறுவர்களுக்கு, அதிலும் ஸ்திரீகளுக்குப், படிப்பதற்கு ஆக்ஷேபகரமாதலால், அம்மாதிரி விஷயங்களை மட்டும் நீக்கியோ, அல்லது பூசி மெழுகியோ, விட்டுவிடுதல் நலமென்பதேயாம்.

## பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரப் பத்திரிகைகள்:—பிழைக்கும் வழி விவேகபோதினி, சக்கரவர்த்தினி, வித்திபானு, பிரபஞ்சம். ஹிதகாரிணி?

மாதம் இருமுறை பதிப்புகள்:—இந்து சாதனம், உதயதாரகை.

வாரப் பதிப்புகள்:—திராவிட தீபம், நீலலோசினி, தேசாபிமானி, லோகானுகூலன், இந்தியா, சூரியோதயம், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா சந்திரிகை, பாண்டியன், நாகர்கோயில் டைம்ஸ்.

வாரம் இருமுறைப் பதிப்புகள் :— மைசூர் டைம்ஸ்.

# சமாசாரக் குறிப்புகள்

கோயமுத்தூரில் முனிசிபல் செக்ரிடேரிக்கு கவர்ன்மென்டார் செலவு கொடுத்தனுப்பியதாகவும், டிப்டிகலெக்டர் தரபில் சேர்மன் ஒருவர் ஏற்படுவதாகவும் தெரிகிறது. செக்ரிடேரி என்னும் பதவியை உண்டாக்கிய காலத்தில் நம்மவர்கள் அது விடியாத கலகங்களுக்கு இடங்கொடுக்குமென்று வாதஞ் செய்தார்கள். அதைக் கேளாமல் சட்டம் பிறந்ததில் கோயமுத்தூர் முனிசிபாலிட்டி சென்ற சுமார் பன்னிரண்டு வருஷகாலமாய் அனுபவித்த துக்கங்கள் பல. இனியாகிலும், அதற்குச் சுகமுண்டாகவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

* * *


'உத்தம வஸ்துக்கள் கெட்டால் அதமமாகிப் போகின்றன' என்பது லத்தீன் பாஷையில் ஒரு பழமொழி. ஆங்கிலேய ஸ்திரீகள் 'வோட்டை' வேண்டிப் போராடுவதில் அனேகர் பெண்தன்மையைவிட்டுத் தாடகைகளாகி விட்டதாகச சமாசாரம் இவர்களிலொருத்தி பிரிட்டிஷ் பிரதான மந்திரிகளிலொருவராகிய ஸ்ரீமான்-சர்ச்சில் துரையை நாய்க் குறடாகொண்டு அடித்ததாகவும், அவரதைப் பிடுங்கப்போக அவருடன் தொந்த யுத்தம் செய்ததாகவும், கடைசியில் அவர் குறடாவைப் பிடுங்கிக் கொண்டு, இந்த யுத்தத்தில்தான் ஜெயித்ததற்கு அறிகுறியாக அக்குறடாவைத் தன் மனைவியிடங் கொடுத்து வைக்கும்படிச் சொன்னதாகவும் சமாசாரம் அழுவதா, சிரிப்பதா, தெரியவில்லை.

* * *

தேசீய வியாதிகளையும், வைத்திய முறைகளையும் இதுவரையில் இருந்தமாதிரி கைவிட்டிருப்பது பைத்தியக்காரத்தனமென்றும், உஷ்ண ராஜ்ஜியங்களில் ராஜ்ஜியம் வேண்டுமென்று ஆசைப்படுபவர்களுக்கு, அவ்விடத்திலுள்ள வியாதிகள், அவற்றிற்குப் பரிகாரங்கள் இவைகளைத் தேடியறிவதைவிட முக்கியகடமை வேறில்லையென்றும், டாக்டர் ஆஸ்லர் சென்ற மாசத்தில் பேசினார். 'எட்டிக் கொட்டை' யவர்கள் விஹாரிணியில் இரண்டுமாதங் களாகச் சொல்லிவருவதும் இதுவேதான்.

* * *

'கோ ஆபரேடிவ்' என்னும் கிராமப் பாங்குகள் பஞ்சாபில் வெகு துருசாய் வேலை நடத்தி வருவதாகவும், அதனால் சவுகார்கள் தங்கள் தொழிலையிழந்து, இனி ஏழைகளை ஒட்டாண்டிகளாக்க வகையில்லாத மூட்டை கட்டுகிறார்களென்றும், கேட்டுச் சந்தோஷிக்கிறோம். நமது ராஜதானியிலும், இம்மாதிரிப் பாங்குகள் ஏற்பட்டுக் கிரகஸ்ரமார்க்கமாய் ஜீவிக்கும் நமது குடித்தனக்காரர்களுக்கு எப்பொழுது நற்காலம் பிறக்குமோவென்று ஆவலுடன் பார்த்திருக்கிறோம்.



ஆஸ்க்வித் துரையவர்கள்—இங்கிலாந்தின் பிரதான மந்திரி